# காலத்தின் பதிவு

## கஜேந்திரகுமார் பொன்னம்பலம்

சிறீலங்கா நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைகள்.

2020– 2024



Gajan MP.indd 1 03.11.2024 22:23:44

# காலத்தின் பதிவு

வெளியீடு
06.11.2024
ஒஸ்லோ
நோர்வே

**வெளியீடு**
**தமிழர்தடம்**
**நோர்வே**

Trondheimsveien 463A
0962 Oslo
Norway
thamilarthadam3@gmail.com

# உள்ளே


1. முன்னுரை – 4
2. இந்திய – இலங்கை உடன்படிக்கையும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டமும் – 5
3. தமிழர்களும் சிங்கள பௌத்தரல்லாத ஏனைய இனத்தவர்களும் – 7
4. தமிழர்களது உரிமைகளை மறுதலிப்பதற்கான உங்களது சீனசார்புப் போக்கு – 13
5. நீங்கள் விட்டுச் செல்லவிருக்கும் இந்த மரபு உங்களை அழித்தொழிக்கப்போகிறது. – 18
6. இருண்ட பொருளாதார நெருக்கடியான தருணத்தில் சிறிலங்கா தற்போது இருக்கிறது. – 23
7. இனப்படுகொலை நடக்கவில்லை என நீங்கள் சொல்லவிரும்பினால். – 27
8. வன்னியில் ஐந்து மக்களுக்கு ஒரு இராணுவம் நிலைகொண்டுள்ளனர். – 29
9. இயற்றப்படும் சட்டங்கள் செயற்பாட்டுக்கு வராது வெறுமனே பேச்சளவில் மட்டும். – 32
10 யார் உங்கள் எதிரி? யாரை நீங்கள் எதிரியாக பார்க்கின்றீர்கள்? – 36
11. ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படுவதற்கான உத்தரவாதம். – 39
12. இலங்கை என்பது தனியே சிங்கள பௌத்தத் தீவு என்ற மனோபாவமும். – 42
13. வைத்தியசாலைகளுக்கு இடையிலான வளப்பங்கீட்டில் பாரிய பாகுபாட்டை காட்டுவது – 48
14. கொலைக்குற்றம் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் உங்கள் இனத்தவர், நண்பர்கள் என்பதனால் – 53
15. இலங்கை ஆகக்குறைந்தது இரு தேசங்களை கொண்ட நாடு என்பதை எற்றுக்கொள்ளுங்கள். – 56
16. ஜனாதிபதி பதவி விலகவேண்டும். தொடர்ந்து இந்த அராசங்கம் பதவி விலகவேண்டும். – 60
17. இந்த தீவில் தமிழ் பேசும் தேசமும் சிங்களம் பேசும் தேசமும் இருக்கின்றன. – 64
18. ஆசிரிய சமூகத்துக்கு கடந்த 24 வருடமாக அநீதி இழைக்கப்பட்டு இருக்கின்றது. – 72
19. சிறிலங்கன் அடையாளம் ஏனைய அடையாளங்களை மறுதலிப்பதாக அமைந்திருக்கிறது. – 76
20. ஒற்றையாட்சியை கைவிட்டு சமஸ்டி அடிப்படையில் தீர்வு காண்பதற்கு ... – 80
21. இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தான சில அடிப்படை ... – 83
22. அரசின் அதிகாரத்தை தமக்கே உரியதாக மட்டும் பாவித்துக் கொண்டு ... – 85
23. தமிழர் தாய்நிலத்தின் இனப்பரம்பலை செயற்கையான முறையில் மாற்றி .... – 89
24. இந்த கோரிக்கைகளுக்கு இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவும் .... – 91
25. ஏன்நாங்கள் எப்போதும் இலக்கு வைக்கப்படுபவர்களாக, பாதிக்கப்படுபவர்களாக? – 95
26. உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள். – 99
27. 1949 ஆம் ஆண்டு 3 வது இந்திய பாக்கிஸ்தானிய பிரஜா உரிமை சட்டத்தை.... – 102
28. இன்று மாகாண சபைகள் இயங்குநிலையில் இல்லை. – 108


Gajan MP.indd 3 03.11.2024 22:23:44

## தொகுப்புரை

இலங்கைத் தீவு பௌத்த மதத்தைப் பின்பற்றும் சிங்கள மொழி பேசும் மக்களுக்கே உரியது. இத்தீவில் வாழும் ஏனையோர் இத்தீவின் வந்தேறு குடிகள், வந்தேறுகுடிகள் யாரும் இலங்கைத் தீவைச் சொந்தம் கொண்டாட முடியாது என்ற மகாவம்ச மனநிலையில் இயங்கிவந்த சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் தமிழர்களின் அரசியல் அடிப்படை உரிமைகளை நிராகரித்து, தமிழர்களின் தாயக நிலப்பரப்பை சிங்களக் குடியேற்றங்கள் ஊடாக ஆக்கிரமித்ததோடு, தமிழரின் தொல்லியல் வரலாறு, தமிழ் மொழி, பண்பாடு என தமிழரின் அடையாளங்களை அழித்தொழிக்கும் செயற்பாட்டை அரச இயந்திரம் மூலம் திட்டமிட்டுச் செயற்படுத்தி வந்த நிலையில். தமிழின அழிப்புக்கு எதிராக, இலங்கைத்தீவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் தமது தேச விடுதலையையும், அரசியல் உரிமையையும் நிலைநாட்ட சனநாயக வழியில் போராடிப் பயனற்றுப் போக, தமிழினம் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது.

2009 மே 19 இல் தமிழர்களின் ஆயுதவழிப் போராட்டம் மௌனிக்கப்பட்டபின், தமிழினம் எதிர்கொண்ட உளவியல் யுத்தம் அளப்பரியது. 2009 இற்குப் பின் தமிழர்கள் நம்பியிருந்த அரசியல் அமைப்பான தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் செயற்பாடு தடம்மாறிச் சிங்கள பௌத்த தேசியவாத அரசுடன், இணக்க அரசியல் செய்வதற்குத் தயாரான நிலையில், அதை எதிர்த்து தமிழ்த் தேசியக்கூட்டமைப்பிலிருந்து வெளியேறிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம் செல்வராசா கஜேந்திரன் அவர்களும் தாயகத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி எனும் அரசியற் கட்சியை உருவாக்கி, தமிழினம் எதிர்கொண்ட உளவியல் யுத்தத்தை எதிர்கொண்டு, தமிழர்க்குத் தேசம் உண்டு, சுயநிர்ணய உரிமை உண்டு, தமிழ்த் தேசியம், தமிழின அழிப்புக்கு சர்வதேச நீதி வேண்டும் என தாயகம் முதல் சர்வதேசம் வரை தமிழர் தரப்பின் உரிமைக் குரலாக, துணிந்து போராடி 2020 இல் தமிழ்மக்களால் பாராளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டு சிறீலங்காப் பாராளுமன்றத்தில் தமிழர் தரப்புக் குரலாக திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் 2020 – 2024 க்கு இடைப்பட்ட காலத்தில் சிறிலங்கா பாராளுமன்றத்தில் ஆங்கிலத்தில் ஆற்றிய உரைகள் சிலவற்றின் தமிழ் மொழிபெயர்ப்புகளை தொகுத்து வெளியிட்டுள்ளோம்.

22 . 09. 2024 இல் புதிதாக ஆட்சி அதிகாரத்துக்கு வந்துள்ள பௌத்த சிங்கள தேசியவாத அரசதலைவரும், அவரது கட்சியினரும் இலங்கைத்தீவில் வாழும் அனைவரும், “சிறிலங்கர்” என ஈழத்தமிழினத்தை ஆரத்தழுவி அழிக்கும் நோக்குடன் வஞ்சக வார்த்தை பேசுவதோடு, மனிதாபிமானம் பேசி மனித உரிமையை மறுக்கும் கபடத்தனமும் செய்கினறனர். ஈழத்தமிழரை அழிப்பதற்கு நடாத்திய போர் சிங்கள தேசத்தை வங்குரோத்து நிலைக்கு இன்று கொண்டுவந்துள்ளது. புதிய சிங்கள பௌத்த தேசியவாத அரசு, புதிய முகமூடி அணிந்து மாறுவேட அணிவகுப்பைத் தற்காலிகமாக நடாத்துகின்றது. பௌத்த சிங்கள தேசியவாதமும், பௌத்த பிக்குகளும் சிறிது காலம் பௌவியமாகப் பதுங்கியிருக்கின்றனர். பௌத்த சிங்கள தேசியவாதத்தின் மூலவேர், மகாவம்சம் எழுதப்பட்ட, கி.பி. 6ம் நூற்றாண்டு பழமையானது. காலத்துக்கு ஏற்ப புதிய புதிய வடிவங்களைப் பௌத்த சிங்கள தேசியவாதம் எடுக்கும்.

வரலாற்றை ஆவணப்படுத்துவதும் அதை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்வதும், ஒரு சமூகத்தின் வரலாற்றுக் கடமையாகும். அந்தவகையில், ஈழத்தமிழரின் விடுதலைப்போராட்ட வரலாற்றில் திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆற்றிய உரைகளை ஆவணப்படுத்தியுள்ளோம்.

இவ் உரைகள் (Friends Of Gajen) கஜேந்திரகுமாரின் நண்பர்கள் எனும் முகநூல் தளத்தில் இருந்து எம்மால் பதிவிறக்கம் செய்யப்பட்டு புத்தகமாக வடிவமைத்துள்ளோம்.

நன்றி
தமிழர்தடம்



Gajan MP.indd 4 03.11.2024 22:23:44

# இந்திய – இலங்கை உடன்படிக்கையும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டமும் முற்றிலும் வேறு வேறானவை.

08.10.2020 தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

தமிழ் மக்களை பொறுத்தவரையிலே அவர்கள் சம்பந்தப்பட்ட மிக முக்கியமான சர்வதேச உடன்படிக்கைகளில் ஒன்று இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட இந்திய- இலங்கை உடன்படிக்கையாகும். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதே இவ்வுடன்படிக்கையின் முக்கிய குறிக்கோளாக அமைந்திருந்தது.

தமிழ் மக்கள் இவ்வுடன்படிக்கையின் ஒரு தரப்பினராக இணைத்துக்கொள்ளப்படாதது இவ்வுடன்படிக்கையின் மாபெரும் குறைபாடாக இருப்பினும், தமிழ் மக்கள் இவ்வுடன்படிக்கையின் ஒரு தரப்பாக தவிர்க்கப்பட்டதினால் தமிழ் மக்களின் சார்பில் இவ்வுடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இந்தியாவிற்கு, இவ்வுடன்படிக்கை முழுமையாக அமுலாக்கப்படுவதனை உறுதிப்படுத்துவதற்கான மேலதிகமான ஒரு கடப்பாடு உள்ளது.

ஆனால் உண்மை நிலவரமோ வேறு

அன்று உடன்படிக்கையில் கைச்சாத்திட்ட இலங்கை அரசோ அவ்வுடன்படிக்கையையும், அதில் அடங்கிய சரத்துக்களையும் தான் அமுலாக்குவதாக கூறிக்கொண்டு அரசியலமைப்பின் பதின்மூன்றாம் திருத்தத்தினையும், மாகாணசபைகள் சட்டத்தின் மூலத்தினையும் அறிமுகப்படுத்தியது.

இச்சட்டமூலங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவிருந்தபோது, அப்போதிருந்த முதன்மையான தமிழ்க் கட்சியான தமிழர் விடுதலைக் கூட்டணி அப்போதைய இந்திய பிரதமர் இராஜிவ் காந்திக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தது. 1987ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 28ம் திகதி திரு. சிவசிதம்பரம், திரு. அமிர்தலிங்கம் ஆகியோருடன் இச்சபையில் அங்கம் வகிக்கும் திரு. சம்பந்தனும் கையொப்பமிட்டு அனுப்பிய அந்தக் கடிதத்தில் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருக்கிறது.



Gajan MP.indd 5 03.11.2024 22:23:44

இந்திய நிபுணர்களின் பங்குபற்றுதலின்றி இச் சட்டமூலம் வரையப்பட்டு நம் மீது திணிக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இச்சட்ட முன்வரைபை பகிரங்கப்படுவதற்கு முன் இந்திய அரசாங்கத்திடம் அதன் பிரதி சமர்ப்பிக்கப்படும் என்றே தமிழர் விடுதலைக்கு கூட்டணி எதிர்பார்த்திருந்தது. இவ்வாறு நடைபெறாது என நாம் கருதுவதனால் 1987 செப்ரெம்பர் 29ம்திகதி ஜனாதிபதி ஜயவர்தனவை நாம் சந்தித்து இந்தியாவிற்கு தெரியப்படுத்தாமலே இச்சட்டமூலம் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ளமையிட்டு நாம் கவலையடைகிறோம் என தெரிவித்தோம்.இது இந்தியாவை ஒரு தரப்பாக மதிக்காமல் நடத்துவதாக மாத்திரமன்றி, இவ்வொப்பந்தத்தில் உள்ள பந்தி 2.15ஐ மீறுவதாகவும் அமைந்துள்ளது."

அக்கடிதத்தின் முடிவில், "இக்காரணங்களுக்காக தமிழ்மக்கள் திருப்தியடையும் வகையில் இவ்விடயங்களுக்கு தீர்வு காணப்படாமல், மேற்படி சட்டமூலங்களை இப்போதுள்ள வடிவத்தில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டாம் என ஜனாதிபதி ஜயவர்தனவை வற்புறுத்துமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்" என குறிப்பிட்டப்பட்டிருந்தது.

ஆகவே இந்திய இலங்கை உடன்படிக்கைக்கும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்திற்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்படுகிறது. நாம் பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தினை நிராகரிக்கின்றோம். தமிழ் மக்களின் தேசியப் பிரச்சனைக்கு தீர்வுகாணும் விடயத்தில் இது ஒரு ஆரம்பப்புள்ளியாக கூட அமையவில்லை என்ற காரணத்தினாலேயே நாம் பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தினை நிராகரிக்கின்றோம்.

தமிழ்மக்கள் பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தை ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனைக் காரணங்காட்டி இவ்வொப்பந்தத்தினை கிழித்தெறிவதற்கு இதனை ஒரு சந்தர்ப்பமாக ஆளும்தரப்பினர், ஜனாதிபதியும், பிரதமரும் நினைக்கலாம். ஆனால் அது ஒருபோதும் நடக்கப் போவதில்லை. ஏனெனில் இந்திய – இலங்கை உடன்படிக்கையும் பதின்மூன்றாம் திருத்தச் சட்டமும் முற்றிலும் வேறுவேறானவை.

அப்போதைய அரசாங்கம் இந்திய– இலங்கை உடன்படிக்கையை தன்னிச்சையாக வியாக்கியானப்படுத்தியதன் விளைவே பதின்மூன்றாம் திருத்தச்சட்டம் ஆகவே, பதின்மூன்றாம் திருத்தச் சட்டமூலத்தை தமிழ்தேசிய இனப்பிரச்சனைக்கான தீர்விற்கான தொடக்கப்புள்ளியாகவேனும் நாங்கள் ஏற்றுக்கொள்ளாவிடினும், நாங்கள் அச்சட்டமூலத்தை நிராகரிக்கிறோமே தவிர இலங்கை இந்திய உடன்படிக்கையை நிராகரிக்கவில்லை. மாறாக இவ்வுடன்படிக்கையின் சரத்துக்களின் படி தமிழர் தேசத்தினை அங்கீகரித்து அவ்வொப்பந்தத்தை முழுமையாக நிறைவேற்றி அதனடிப்படையில் இத்தீவில் தமிழ் மக்கள் ஏற்றுக் கொள்ளும் நிலைத்து நிற்கக் கூடிய அரசியல் தீர்வினை எட்டுவதற்கு இந்தியா பொறுப்புக்கூறும் கடப்பாடு உடையது என்பதை வலியுறுத்துகிறோம்."

நன்றி



Gajan MP.indd 6 03.11.2024 22:23:44

# தமிழர்களும் சிங்கள பௌத்தரல்லாத ஏனைய இனத்தவர்களும் அரசியலமைப்பு குறித்த விவாதங்களில் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வந்தார்கள்

**20ம் திருத்த சட்டமூலம் மீதான விவாதத்தில் 22.10.2020 தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

20ஆம் திருத்தம் வெறுமனே ஒரு அதிகாரம் குவிக்கப்படுகின்ற ஒரு ஆட்சிமுறையை அல்ல ஒரு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்ற ஒரு சரிவின் ஆரம்பம்.

சிறிலங்கா ஒரு பன்மைத்துவம் கொண்ட நாடு என்பதை அதாவது இங்கு சிங்கள தேசம் தமிழர் தேசம் மற்றும் முஸ்லிம்களையும் கூட தேசமாக அங்கீகரிக்க மறுத்து பன்மைத்துவத்தை நிராகரிக்கும் மனோநிலையும் மறுதலிப்பும் பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்ள தொடர்ச்சியாக மறுத்தமையும் அனைத்து அதிகாரத்தையும் தனி ஒரு இடமாக மத்தியினுள் மையப்படுத்தும் போக்கு மட்டுமல்ல சர்வாதிகாரத்தை நோக்கிக் கொண்டு செல்லும் நிலையை உருவாக்கி விட்டிருக்கின்றது என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் இந்த சபையில் வெளிப்படுத்துகிறேன்.

பேராசிரியர் திஸ்ஸ விதாரணவின் உரையினையடுத்து எனக்கு உரையாற்றக் கிடைத்ததையிட்டு நான் மனமகிழ்வடைகிறேன். இதயத்தில் முற்போக்குக் கொள்கைகளைக் கொண்டவராக இருந்த போதிலும், இச்சட்டமூலம் இங்கு சமர்ப்பிக்கப்படுகையில், அவர் தவறானவர்களின் பக்கம் அமர்ந்திருக்க வேண்டிய நிலையேற்பட்டிருக்கிறது.

சபையின் எதிர்த்தரப்பிலிருந்து பலரும் இச்சட்டமூலத்தில் உள்ள ஜனநாயக குறைபாடுகள் குறித்தும் அரசின் அதிகாரம் தனியொருவரின் கைகளில் குவிக்கப்பட்டிருப்பது பற்றியும் விரிவாகப் பேசியிருக்கிறார்கள். ஆதலால் நான் இத்திருத்தச் சட்டமூலம் தொடர்பான விபரங்களைப் பற்றிப் பேசுவதற்கு தேவையிருப்பதாக எண்ணவில்லை. ஆனால் இந்நாடு இவ்வாறான நிலையை ஏன் எதிர்கொள்கிறது என்பது பற்றி நிச்சயமாக நீங்கள் உங்களையே கேள்வி கேட்டுகொள்ளலாம் என்பதிலிருந்து ஆரம்பிக்கலாம் என எண்ணுகிறேன்.

1978ம் ஆண்டு அரசியல்யாப்பு கொண்டுவரப்பட்டு பத்தாண்டுகளின் பின்னர், குறிப்பாக



Gajan MP.indd 7 03.11.2024 22:23:44

1994ம் ஆண்டிலிருந்து, இச்சபையின் இருதரப்பிலிருப்பவர்களினாலும், அந்தந்த தரப்புகள் அதிகாரத்திலிருக்கும்போது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையானது சர்வாதிகாரத்தன்மையினைக் கொண்டது என்பதனை உணர்ந்து, ஜனாதிபதி முறைமை முற்றாக நீக்கப்பட வேண்டும், ஜனாதிபதியின் அதிகாரங்களைக் குறைக்க வேண்டும், ஆட்சி முறைமையினை ஜனநாயகப்படுத்தும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படவேண்டும் என தெளிவான பல முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

ஆனால்,அந்த முயற்சிகள் யாவும் இன்று பின்நோக்கி நகர்த்தப்பட்டுள்ளன. ஏன் இவ்வாறு நடைபெறுகின்றது என்று நாம் எமக்குள் கேள்வி எழுப்பலாம்.

ஆனால் நானோ எனது கட்சியோ இதுகுறித்து ஆச்சரியபடுவதற்கு புதிதாக ஒன்றும் எதுவும் இருப்பதாக கருதவில்லை. ஆயினும் இங்கு உருவாகியிருக்கும் இந்த நிலமை குறித்தே நான் எனது கருத்தினை இன்று இங்கே வெளிப்படுத்த விரும்புகிறேன்.

சிறிலங்காவின் அரச கட்டமைப்பானது ஒரு தொடர்ச்சியான செயல்முறைகள் மூலம் ஒரு கட்டமைப்பு மாற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது என்பதை நான் இந்தச்சபையில் வெளிப்படுத்த விரும்புகிறேன். சிறிலங்கா அரசில் நடைபெற்றுவரும் கட்டமைப்பு மாற்றங்கள் ஒரு குறித்த செல்நெறியிலேயே நகர்வதை இன்று இங்கு நடக்கும் நிகழ்வுகளும் மீளவும் உறுதிப்படுத்துகிறது.

இவ்விடயத்திலேதான் நான் சக உறுப்பினர் நண்பர் திரு. சுமந்திரனின் கருத்துடன் முரண்படுகிறேன். (சிறிலங்கா அரசின் ஜனநாயக செல்நெறியில் சென்றுகொண்டிருப்பதாகவும் அதில் இந்த 20 ம் திருத்தமே ஒரு கரும்புள்ளி எனும் தொனிப்படவும் திரு சுமந்திரன் உரையாற்றியிருந்தார்). அவரது இக்கருத்துடன் நான் இணங்கவில்லை.

எம்மைப் பொறுத்தவரையில் 17ம், 19ம் திருத்தசட்டமூலங்கள் சிறிலங்கா அரசின் தொடர்ச்சியான தெளிவான செல்நெறிக்கு இடையில் வந்த ஒரு அசாதரணமான விதிவிலக்காகவே கருதப்படவேண்டியவை. அதாவது 72 வருடங்களாக அரசகட்டமைப்பு பயணித்துக்கொண்டிருக்கும் திசைக்கு எதிராக, விதிவிலக்காக அமைந்திருந்த சிறு அம்சங்களே.

சிறிலங்கா அரச கட்டமைப்பின் (பௌத்த சிங்கள மேலாதிக்க) செல்நெறி தொடர்பில் ஒரு தொடர்ச்சியான புரிதலை ஏற்படுத்த பிரித்தானியர்கள் இந்த நாட்டைவிட்டு வெளியேறியதன் பின்னர் இந்த நாட்டில் பின்பற்றப்பட்ட முதலாவது யாப்பான சோல்பரி யாப்பில் இருந்து சிலவிடயங்களிலிருந்து இந்த அவையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

1936ம் ஆண்டு ஜனவரிமாதம் அரசியல் நிர்ணய சபையில் தனிச்சிங்கள அமைச்சரவை அமைக்கப்பட்டதன் பின்புலத்திலேயே சோல்பரி அரசியல் யாப்பு உருவாக்கப்பட்டது. அப்போதிருந்த தமிழ் அரசியல் தலைவர்கள் இந்த முயற்சியை எதிர்த்திருந்தார்கள். இந்த அரசியல் அமைப்பானது சிங்கள தேசியவாதத்தின் மேலாதிக்கத்தை உறுதிசெய்யும் வகையில் எண்ணிக்கையில் பெரும்பான்மையினராக இருந்த ஒரு சமூகத்திற்கு அரச அதிகாரத்தை வழங்குகின்றதாக அரசகட்டமைப்பு மாற்றப்படும் நிலையை நோக்கிச்

செல்லும் என்பதனை உணரந்ததனாலேயே தமிழ்த்தலைவர்கள் அதனை எதிர்த்தார்கள். ஈற்றில், அந்த அரசியலமைப்பானது, பிரித்தானியாவின் ஆட்சிமுறையைப் பின்பற்றி ஓரளவு பழமைவாதத்தன்மை கொண்டதும் தாராண்மைவாத ஜனநாயக அடிப்படைகளைக் கொண்டதாகவும் உருவாக்கப்பட்டது. இருப்பினும் அந்த சோல்பரி ஆணைக்குழு, ஏதாவது வகையில் இனங்களுக்கிடையில் நல்லிணக்கம் இருக்கவேண்டும் என்ற கரிசனையை முக்கியமானதாகக் கொண்டிருந்தது. தேசிய அளவில் மக்களின் கூட்டுமனவுணர்வில் இந்நாடானது ஒரு பல்லின சமூகங்கள் வாழும் நாடாக இருக்கவேண்டும் என ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

அதன் சரத்து 29-2, நாடாளுமன்றத்தில் எந்த ஒரு சமூகத்தினர் மற்றைய சமூகத்தினரினதும், மதப்பிரிவினர்களினதும் ஒப்புதலின்றி தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதனை தடுப்பதாக அமைந்திருந்தது. சோல்பரி யாப்பின் இந்த 29 / 2 உறுப்புரையின் கட்டுப்படுத்தும் தன்மையே, அரசின் அனைத்து நடவடிக்கைகளையும் அந்த சரத்துக்கு கட்டுப்பட்டதாகவும் அதனை மீறும் எந்தவொரு முயற்சியும் அரசியலமைப்பை மீறுகின்ற செயல்பாடாகவும் கருதப்பட வழிவகுத்தது.

இந்த தன்மைதான் இந்த இலங்கைத்தீவில் வாழும் அனைத்து தேசிய இனங்களும் ஒன்றாக ஒரு நாடு எனும் அடையாளத்துக்குள் வாழ முடியும் என்பதற்கான ஒரு அடிப்படை அத்திவாரமாக , ஒரு அடிப்படை சமூக ஒப்பந்தமாக விளங்கியது. 1964ம் ஆண்டு பிரித்தானிய கோமறை மன்றத்திற்கு (Privy Council) கொண்டு செல்லப்பட்ட லஞ்ச ஒழிப்பு திணைக்களத்திற்கும் ரணசிங்கவிற்கும் இடையிலான வழக்கில் கௌரவ பியேர்ஸ் அவரக்ள் வழங்கிய தீர்ப்பு (1964/66/NLR /78) ஆம் பக்கத்தில் கீழ்வருமாறு கூறுகிறது. இவையெல்லாம் குறித்து , இந்த அவையில் ஆளும்தரப்போடு இருக்கும் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ் நன்கு அறிந்திருப்பார் என நம்புகிறேன்.

அரசியலமைப்பின் உறுப்புரை 29/2 ஆனது இலங்கையின் குடிமக்களிற்கிடையிலான உரிமைகளிற்கு இடையில் ஒரு கௌரவமான சமநிலையை பேணுகின்ற ஒரு சரத்து என்றும் அதன் அடிப்படையிலேயே அவர்கள் இந்த அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டார்கள், ஆகவே இந்த 29/2 உறுப்புரையானது அரசியலமைப்பில் ஒருபோதும் மாற்றத்துக்குட்படுத்தப்பட முடியாத அம்சமாகும் என அந்த தீர்ப்பு கூறுகிறது.

ஆக, சிறுபான்மையினரின் உரிமைகளுக்கு உத்தரவாதம் வழங்கிய இந்த 29.2 உறுப்புரையின் அடிப்படையில் தான் சிறிலங்கா தனி ஒரு நாடாக சுதந்திரம் பெறக்கூடியதாக இருந்தது.

அந்த29/2ஆம்உறுப்புரைமூலமாகத்தான்இந்ததீவில்வசிக்கும்சிங்களபௌத்தரல்லாத ஏனைய இனத்தவர்கள் கூட சிறிலங்கா எனும் கட்டமைப்பின் கீழ் தொடர்ந்தும் நம்பிக்கையுடன் இயங்க முடியும் கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். அது தவிர அந்த நேரத்திலேயே, தனிச்சிங்கள அமைச்சரவையை 1936 இல் உருவாக்கியிருந்த போது, சிறிலங்கா அரசு செல்லப்போகும் செல்நெறி குறித்து கடுமையான விமர்சனத்தை கொண்டிருந்த சிங்களபௌத்தரல்லாத ஏனையவர்களுக்கு அரசியலமைப்பு ரீதியாக பாதுகாப்பு அளிக்கும் நோக்கில் இரண்டாவது சபையாக செனட் சபையை உருவாக்குதல், சுயாதீனமான நீதி சேவை ஆணைக்குழு, சுயாதீனமானபொதுசேவை ஆணைக்குழு, கோமறை மன்றிற்கான மேன்முறையீட்டு வசதிகள் போன்ற கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டிருந்தன.



Gajan MP.indd 9 03.11.2024 22:23:44

ஆனால், அந்த சிறிலங்கா அரசு செல்லப்போகும் பாதை குறித்தான எதிர்வு கூறல்கள் நிதர்சனமாவதற்கு நீண்ட காலம் எடுத்திருக்கவில்லை.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து ஆறுமாத காலத்தினுள்ளேயே இலங்கை குடியுரிமை சட்டம் (1948 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க சட்டம்,) அதன் பின்னர் சிங்கள மொழியை மட்டும் உத்தியோகபூர்வ மொழியாகி உத்தியோகபூர்வ மொழி சட்டம், (1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க சட்டம்) போன்றன , அரசியலமைப்பின் 29.2 ஆம் உறுப்புரை இருக்கத்தக்க நிலையிலும், இலங்கையானது ஒரு சிங்கள பௌத்த மேலாதிக்கமுடைய அரசொன்றை நோக்கி உருமாற்றம் அடைவதை தெளிவாக வெளிப்படுத்தி இருந்தது. அந்த நேரத்தில் , பியேர்ஸ் பிரபு வழங்கிய தீர்ப்பு மற்றும் கோடீஸ்வரன் வழக்கு போன்றவற்றின் தீர்ப்புகள் போன்றவற்றில் அரசியமைப்பின் உறுப்புரை 29.2 என்பது ஒரு முக்கிய புள்ளியாக விளங்கியது.

இந்த உறுப்புரை 29/2 என்பதே இலங்கத்தீவில் வாழும் அனைத்து இனங்களுக்குமிடையிலான ஒரு சமூக ஒப்பந்தம் எனவும் அதன் பிரகாரம் இந்த தீவில் வாழும் அனைத்து இன மக்களும் ஒன்றிணைந்து ஒரு நாடு எனும் அடையாளத்தினை ஏற்க காரணமாக அமைந்தது எனவும் இந்த நாட்டை பிளவுபடுத்தாமல் ஒன்றுபடுத்தி வைத்திருப்பது அந்த சமூக ஒப்பந்தமே என்றும் அந்த வழக்கின் தீர்ப்புகளில் வியாக்கியானப்படுத்தப்பட்டிருந்தது.

1972 ஆம் ஆண்டு முதலாவது குடியரசு யாப்பு இயற்றப்பட்டபோது , பெரியதொரு துர்ப்பாக்கிய நிகழ்வாக இனங்களுக்கிடையிலான அந்த சமூக ஒப்பந்தமானது தூ க்கிவீசப்பட்டது.

பிரித்தானிய காலனித்துவத்தின் தேவையற்ற எச்சங்களாக ஒட்டிக்கொண்டிருக்கும் அம்சங்களை அகற்றுவதற்காகவே ஒரு புதிய அரசியலமைப்பு கொண்டுவரப்படுவதாக 1972 ஆம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பு கொண்டு வரப்பட்டபோது கூறப்பட்டது. அது உண்மையாக இருந்திருக்கலாம். இங்கே இருக்கும் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ அவர்கள் அந்த குடியரசு யாப்பு குறித்து பெருமிதம் அடைவதாக கூறியிருந்தார்.

ஆனால் நடைமுறையில், 1972 ஆம் ஆண்டு குடியரசு யாப்பானது, அதிகாரங்கள் மத்தியில் குவிக்கப்பட்ட சிங்கள பௌத்த அரசாக மாறிக்கொண்டிருந்த அந்த அரசு கட்டமைப்பு மாற்றத்தை ஏறத்தாழ பூரணப்படுத்தி இருந்தது. அந்த செல்நெறியிலேயே சிறிலங்கா அரசானது பயணித்திருக்கிறது. அந்த அரசியலமைப்பிலேயே வரலாற்றில் முதல் தடவையாக சிறிலஙகா ஒரு ஒற்றையாட்சி நாடாக பிரகடனத்தப்பட்டிருந்தது. அத்தோடு நான் ஏற்கனவே குறிப்பிடிருந்தபடி, (எண்ணிக்கையில் சிறுபான்மையினருக்கு பாதுகாப்பு வழங்கிய) உறுப்புரை 29 நீக்கப்பட்டிருந்தது. கோமறை மன்றிற்கு மேன்முறையீடு செய்யக்கூடிய முறைமை, இரண்டாவது சபை போன்றன நீக்கப்பட்டிருந்ததது. சிங்களம் மட்டுமே உத்தியோகபூர்வ மொழியாக ஆக்கப்பட்டிருந்தது.

இவையெல்லாம் மத்தியிலே அதிகாரங்கள் குவிக்கப்பட்ட ஒரு சிங்கள பௌத்த அரசாக மாறிக்கொண்டிருக்கும் திசையை நோக்கியே சிறிலங்காவின் செல்நெறி இருக்கின்றது என்பதை உறுதிப்படுத்தியிருந்தது.



Gajan MP.indd 10 03.11.2024 22:23:44

1972 ஆம் ஆண்டு கொண்டுவரப்ட்ட அரசியலமைப்பானது சிங்கள பௌத்த மேலாதிக்கபெரும்பான்மைவாதத்தை நோக்கிய பயணத்தை (அதிகாரபூர்வ) முறைப்படி ஆரம்பித்து வைத்தது.

இதை இன்னொரு வகையில் சொல்வதானால், 72 ஆம் ஆண்டு யாப்பானது இந்த அரசானது இங்கே இருக்கும் பல தேச மக்களின் அபிலாசைகளை பூர்த்தி செய்கின்ற ஒரு பன்மைத்துவ சமூகத்தை வைத்திருக்கக்கூடிய ஒரு கூட்டு சமூக உணர்வை தரும் என கூறப்பட்ட அம்சங்களை நீக்கி, தனது சிங்களபௌத்த அடையாளத்தை வெளிப்படுத்தி அங்கீகரித்திருந்தது.

அந்த 72 ம் ஆண்டின் அரசியலமைப்பு மூலம் சிங்கள பௌத்தர்கள் இந்த நாட்டின் அரசின் காவலர்களாக உருவகிக்கப்பட்டார்கள். இந்த பின்னணியிலும் இந்த செல்நெறியிலும்தான் தான் 1978 ஆம் ஆண்டு 2 வது குடியரசு யாப்பானது இயற்றப்பட்டது.

விரைவான ஒரு பொருளாதார வள்ர்ச்சியை அடைவதற்கு ஒரு உறுதியான ஒரு அரசியல் தலைமை ஒன்றினூடான ஸ்திரமான அரசியல் சூழ்நிலை நிலவ வேண்டும் என்பதற்காகவே 78 ஆம் ஆண்டின் இரண்டாம் குடியரசுயாப்பு கொண்டுவரப்படுவாதாக சொல்லப்பட்டிருந்தது. இதன் மூலம் உருவாகும் நிறைவேற்றதிகாரம் மிக்க ஜனாதிபதி பாராளுமன்றின் விருப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்டவராகவும் எதுவித பிரச்சினைகளும் தடைகளும் இன்றி கவர்ச்சிகரமானதாக இல்லாததாக இருப்பினும் சரியான முடிவுகளை எடுக்க கூடியவராகவும் இருப்பார் என கூறப்பட்டிருந்தது .

ஆனால் நடைமுறையில் 78ம் ஆண்டு கொண்டுவரப்பட்ட அரசியல்யாப்பானது அரசின் சிங்கள பௌத்த குணாம்சத்தை மேலும் வலுப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. அதனை மாற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையை கோருவது மட்டுமல்ல ஒரு ஒப்பங்கோடல் முறையான சர்வசன வாக்கெடுப்பையும் வேண்டிநிற்கிறது. ஒற்றையாட்சி முறையான அரசமைப்பு, பௌத்த மதத்திற்கு முன்னுரிமை ஆகிய இரண்டு சரத்துகளும் இந்த நாட்டை ஒரு சிங்கள பௌத்த நாடாக்கும் குணாம்சத்தை வலுப்படுத்தலின் முதன்மைக் காரணிகளாக அமைந்துள்ளன. இந்தப்பின்புலத்திலேயே நாம் இந்த இருபதாம் திருத்தச்சட்டமூலத்தை விவாதிக்கிறோம்.

தமிழர்களும் சிங்கள பௌத்தரல்லாத ஏனைய இனத்தவர்களும் அரசியலமைப்பு குறித்த விவாதங்களில் தொடர்ச்சியாக புறக்கணிக்கப்பட்டு வந்தார்கள் என்பது ஒருபுறம் இருக்க , 1978 ஆம் ஆண்டு யாப்பின் பின்னர் ஜே. ஆர். ஜயவர்தன, ரணசிங்க பிரேமதசா காலத்தின் பின்னர் , நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி முறைமை ஒரு பேரழிவு என்ற விடயத்தில் நாடளுமன்றத்தின் ஆளும் தரப்பினரினதும் எதிர்த்தரப்பினரதும் பொது உடன்பாட்டுக்கு வந்தார்கள்.

அத்தருணத்தில்தான் சிங்கள தேசமானது இவ்விடயத்தில் ஒரடி பின்நகர்ந்து அரசகட்டமைப்பின் குணாம்சம்பற்றி கேள்வி எழுப்பிய ஒரு சிறு மாற்றம் சிங்கள தேசத்தில் நிகழ்ந்தது . அரசியல் யாப்பினை ஜனநாயகப்படுத்த சிங்கள தேசம் அச்சந்தர்ப்பங்களில் விரும்பியது. அரசின் சர்வாதிகாரப்போக்கிற்கு எதிராக கிளர்ந்தெழுந்தது. இந்தத்தருணங்களிற்தான் 17ம் திருத்தச்சட்டமூலமும் 19ம் திருத்தச்சட்டமூலமும் கொண்டுவரப்பட்டன.



Gajan MP.indd 11 03.11.2024 22:23:44

இன்று அவற்றிலிருந்து பின்நோக்கி நகர்ந்து பழையநிலைக்குச் செல்வது என்பது, 72வருடகாலமாக சிறிலங்கா அரசு அடைந்து கொண்டிருக்கும் கட்டமைப்பு மாற்றத்தின் திசையிலேயே மீண்டும் வலுவாக இந்த நாட்டைக் கொண்டுசெல்வதாக அமையும்.

சிங்கள பௌத்தரல்லாதவர்களை, குறிப்பாக தமிழ்தேசத்தை எவ்வாறு இந்த நாடு நடத்தியதியது என்பதும் சிறிலங்கா ஒரு பன்மைத்துவம் கொண்ட நாடு என்பதை அங்கீகரிக்க தொடர்ச்சியாக மறுதலித்தமையும், குறிப்பாக இங்கு சிங்கள தேசம் தமிழர் தேசம் ஏன் முஸ்லிம்களை கூட தேசமாக அங்கீகரிக்க மறுத்து பன்மைத்துவத்தை நிராகரிக்கும் மனோநிலையும் தான் எம்முன்னே இன்று ஒரு பூதமாக எழுந்து நிற்கின்றது.

இந்த மறுதலிப்பும் பன்மைத்துவத்தை ஏற்றுக்கொள்ள தொடர்ச்சியாக மறுத்தமையும் அனைத்து அதிகாரத்தையும் தனி ஒரு இடமாக மத்தியினுள் மையப்படுத்தும் சிந்தனைபோக்குதான் தான் இந்த பூதத்தை இங்கு இன்று உருவாக்கி விட்டிருக்கின்றது என்பதை நான் மிகுந்த பொறுப்புணர்வுடன் இந்த சபையில் வெளிப்படுத்துகிறேன்.

அன்று நீங்கள் உருவாக்கிய அதே பூதம் தான் இன்று உங்கள் சொந்த ஜனநாயகத்தையே அழித்து நிற்கிறது .

ஏனையவர்கள் எண்ணிக்கையில் எவ்வளவு சிறிதாக இருக்கிறார்கள் என்பதற்கு அப்பால், ஏனைய தரப்புகளை அங்கீகரிக்க மறுக்கின்ற அந்த மனோநிலையும் எவருடனும் பகிர்ந்து கொள்ள மறுக்கின்ற சிந்தனைப்போக்கும், இந்த நாடு எங்கள் அனைவரையும் உள்ளடக்கக்கூடிய அளவுக்கு விசாலமானது என பொறுப்புணர்வுடனும் நம்பிக்கையுடனும் கூற முடியாத அளவுக்கு ஒரு பாதுகாப்பற்ற உணர்வும்தான் இன்றைய நிலைக்கு இட்டுச் சென்றுள்ளது. மூன்றில் இரண்டு பெரும்பான்மை பெற்று இங்கு வந்த நிலையிலும் எது வித குற்ற உணர்வுமின்றி, மிக சாதாரணமாக, இந்த நாடு 1994 இல் இருந்து செல்ல முற்பட்ட ஒரு ஜனநாயகபாதையை முற்றாக மாற்றி மீண்டும் எதிர்த்திசையில் தள்ளுவதற்கு இடம் கொடுத்திருக்கிறது.

நான் இந்த சபையின் இரு தரப்பில் இருக்கும் அங்கத்தவர்களையும் நோக்கி கேட்டுக்கொள்கிறேன்.

இது ஒரு வெறுமனே ஒரு அதிகாரம் குவிக்கப்படுகின்ற ஒரு ஆட்சிமுறறைமை அல்ல, ஒரு சர்வாதிகாரத்தை நோக்கி நகர்கின்ற ஒரு சரிவின் ஆரம்பம் இது என நான் இங்கு கூறிக்கொள்ளுகிறேன். எதிர்காலத்தில் நீங்கள் மிகப்பெரியளவில் வருந்தக்கூடிய ஒரு தவறை செய்கிறீர்கள். சிங்கள தேசத்தின் ஜனநாயகத்தை திட்டமிட்டு அழிக்கின்ற முயற்சிக்கு எதிர்ப்புத்தெரிவித்து சிங்கள மக்களுடன் இணைந்து தோழமையுடன் நின்றது சிங்கள பௌத்தரல்லாத மக்களே, குறிப்பாக தமிழர்களே என்பதை நீங்கள் அந்த நேரத்தில் உணர்ந்து கொள்வீர்கள்.

அவ்வேளையில் ஆத்மார்த்தமான உணர்வுடன் தமிழர்கள் முஸ்லிம்கள் மீதான உங்கள் அணுகுமுறையை மாற்றி இங்கு ஒரு பல் தேசங்கள் கொண்ட நாட்டை உருவாக்க முன்வருவீர்கள் என நம்புகிறோம்.

நன்றி



Gajan MP.indd 12 03.11.2024 22:23:44

# தமிழர்களது உரிமைகளை மறுதலிப்பதற்கான உங்களது சீனசார்புப் போக்கு சிங்களதேசத்தையும் அழிக்கும்.

**2021 வரவு செலவுத்திட்டத்தில் வெளிவிவகார அமைச்சு மீதான விவாதத்தின் போது, 25.11.20 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

இங்கே அமர்ந்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் அவர்கள் மறைந்த எனது தந்தையாரின் மதிப்புக்கும் அன்புக்கும் உரியவர். அதன் அடிப்படையில் அவரில் நானும் மரியாதை வைத்துள்ளேன். அதே போன்று வெளிவிவகார அமைச்சின் இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய அவர்களும் நானும் ஒரே கல்லூரியில் படித்தவர்கள், அவருக்கும் எனக்குமான நட்பும் மிக நீண்டது.

இருப்பினும்,

இந்த வெளிவிவகார அமைச்சின் முக்கியமான இருவருடனுமான எனது தனிப்பட்ட மதிப்பானது எந்த விதத்திலும் , இன்றைய நாளில் இந்த வெளிவிவகார அமைச்சு மீதான விவாததில் நான் ஆற்றவேண்டியிருக்கும் எனக்குரிய கடப்பாட்டில் எதுவித தாக்கத்தையும் செலுத்தாது.

இலங்கை சம்பந்தமான புவிசார் அரசியல் போக்குகள் (tendencies) பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு, அதன்பிரகாரம் அந்த புவிசார் அரசியல் போக்குகளை சிறிலங்காவுக்கு, பயன்தரக்கூடிய வகையில், கையாள்வது குறித்தான மூலோபாயங்களை வகுப்பது தொடர்பில் அரசாங்கத்திற்கு ஆலோசனை வழங்குவது வெளிவிவகார அமைச்சின் ஒரு கடமையாகுமென வெளிவிவகார அமைச்சினால் 2020 இல் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையில் கடமைகளும் செயற்பாடுளும் என்ற தலைப்பின் கீழுள்ள பந்தி 8 குறிப்பிடுகிறது.



Gajan MP.indd 13 03.11.2024 22:23:45

இதே போன்றதொரு உள்ளார்ந்த அர்த்தத்தில் வெளிவிவகார அமைச்சரின் செயலாளர் ஒரு மாநாட்டில் குறிப்பிட்டவற்றை மீள நினைவுகூருகிறேன்.

புவிசார் அரசியலில் இலங்கை கேந்திர முக்கியத்துவமான ஒரு அமைவிடத்திலும் புவிசார் அரசியலின் மூலோபாய ரீதியலும் முக்கியமான இடத்திலும் இருப்பதனால், பலம்பொருந்திய சர்வதேச சக்திதிகள் தமக்கிடையான போட்டியில் இலங்கையை ஒரு பகடைக்காயாக பாவித்துவிட்டு ஈற்றில் தூக்கியெறியும் நிலமைக்கு இலங்கையை செல்லவிடாமல் பாதுகாப்பதே அரசினதும் வெளிவிவகார அமைச்சினதும் கடமையாக இருக்க வேண்டும் எனும் சாரப்பட வெளிவிவாகர செயலாளர் குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கை இவ்வாறுதான் அமையவேண்டும். இலங்கை புவிசார் அரசியலில் முக்கியமான இடத்திலிருப்பதை புரிந்து கொள்வதென்பது ஒன்றும் விளங்கிக்கொள்ள சிக்கலான ஒரு விடயமோ அல்லது ஒரு இரகசியமோ அல்ல. இது இன்று நேற்றல்ல, இரண்டாவது உலகமகா யுத்தத்தின்போது கூட நேச அணிகளின் படைகள் தமது கிழக்கு கடற்பிராந்திய கட்டளைத் தலைமையகத்தை திருகோணமலையை தளமாகக் கொண்டே அமைத்திருந்தார்கள். இந்து சமுத்திர பிராந்தியத்தின் மத்தியில் அதைக்கட்டுப்படுத்தகூடிய புள்ளியில் அமைந்திருப்பது, இலங்கையின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துகிறது.

ஆனால், இங்கு எழும் கேள்வி என்னவென்றால் இந்த முக்கியத்துவத்தை சிறிலங்கா அரசு எவ்வாறுபயன்படுத்துகிறது என்பதுதான்.

உண்மையில் சிறிலங்கா அரசு அதன் வெளிவிவகாரக் கொள்கை விடயத்தில் என்ன செய்துள்ளது என்பதும், சிறிலங்காவை சர்வதேச சக்திகளின் பந்தாட்டத்தில் இருந்து பாதுகாக்க வேண்டும் என வெளிவிவாகர அமைச்ச்சர் குறிப்பிட்டமைக்கமைய, வெளிவிவாகர அமைச்சர் சிறிலங்கா என எந்த கட்டமைப்பை அடையாளப்படுத்தினாரோ அந்த கட்டமைப்புக்கு நன்மைதரக்கூடியவகையில் எவ்வாறு அதன் வெளிவிவகாரக் கொள்கை எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பதும் தான் இங்கு இருக்கும் மிகப்பெரிய வினாக்கள்.

உண்மையில் சிறிலங்காவின் வெளிவிவகாரக்கொள்கை என்பது சீரழிந்து செல்கின்றதென்பதே நிதர்சனமாகும். உண்மையில் என்னுடைய பார்வையில் இது ஒரு துன்பியல் நிகழ்வாகவே அமைந்துள்ளது.

1948ம் ஆண்டிலிருந்து இலங்கை தனது கேந்திரமுக்கியத்துவத்தை தனது சொந்த நாட்டு மக்களில் ஒரு தொகுதியினருக்கு எதிராக, குறிப்பாக தமிழ்த் தேசத்து மக்களுக்கு எதிராக அவர்களை ஒடுக்குவதற்காகவே பயன்படுத்தி வருகிறது.

அத்தோடு 1948ம் ஆண்டிலிருந்தே இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையானது இந்தியாவை ஐயத்துடன் பார்ப்பதாக அமைந்திருக்கிறது. இந்தியாவின் தெற்கில் பெரும் எண்ணிக்கையில் தமிழர்கள் வாழ்வதனால் இயல்பாகவே இந்நாட்டில் வாழும் தமிழர்கள் தொடர்பில் இந்தியாவுக்கு ஒரு கரிசனை இருக்கும். இலங்கையின் வெளிவிவகாரக் கொள்கையானது இந்தியாவின் செல்வாக்கை கட்டுப்படுத்துவதை (contain) நோக்கமாகக் கொண்டிருக்கிறது. சிறிலங்கா அரசு இதனைப் பல வழிகளில் செய்து வந்துள்ளது.



Gajan MP.indd 14 03.11.2024 22:23:45

இதன் உச்சகட்டமாக, ரஷ்யா – அமெரிக்க பனிப்போர் நிலவிய எண்பதுகளில், இந்தியாவானது அணிசேராக் கொள்கையை பின்பற்றுவதாக கூறியிருந்தாலும் சோவியத் யூனியனுடன் மிக நெருக்கமான உறவை பேணி வந்திருந்த காலப்பகுதியில், மறுபுறமாக அப்போதைய சிறிலங்கா ஜனாதிபதி ஜயவர்தன அமெரிக்காவின் பக்கம் முழுமையாக சாய்ந்திருந்தார்.

அதற்கு பிறகு என்ன நடந்தது என்பதனை நீங்கள் அனைவரும் அறிவீர்கள் என நம்புகிறேன். அந்த புவிசார் அரசியல்போட்டியின் சிறிலங்காவின் ஸ்திரத்தன்மை ஆட்டம் காணச்செய்தது. தமிழர்களின் உரிமைக்கான ஆயுதப் போராட்டத்துக்கு வெளிப்படையாகவே ஆதரவை வழங்குமளவிற்கு இலங்கையின் ஸ்திரத்தன்மை நிலைகுலைந்திருந்தது.

இந்த புவிசார் அரசியல் போட்டியால் ஈற்றில் இந்திய இலங்கை ஒப்பந்தத்தில் கையொப்பமிடும் நிலைக்கு இலங்கையை தள்ளியிருந்தது. அந்த ஒப்பந்தத்தில் தமிழ்தேசியப் பிரச்சனைக்கான தீர்வினைக் காண்பது தொடர்பாகப் பேசப்பட்டு இருந்தாலும் அதன் பின்னிணைப்பு ஆவணங்கள் அனைத்தும் இலங்கை இந்தியாவின் பிராந்திய மூலோபாய நலன்களுக்கு பாதகமாக செயற்படாது என்ற நிபந்தனைகள் அனைத்துக்கும் இணங்கி சரணடைந்திருந்தது என்பதை காட்டிநிற்கிறது.

அதன் தொடர்ச்சியாக, மீண்டும் நாடு ராஜபக்ஷ அணியின் ஆட்சியின் கீழ் வந்துள்ளது. அவர்கள் எந்தவொரு வழிவகையிலும் தமிழர்களின் உரிமைகள் அங்கீகரிக்கப்படுவதை தடுத்துவிட வேண்டும் என ஒரு வெறித்தனத்துடனும் தமிழர்களின் தேசிய பிரச்சினைக்கு தீர்வுகாண்பதை மறுதலிக்கும் மனோபாவத்துடனும் செயற்படுகின்றார்கள். இந்த நோக்கத்திற்காகவே இன்று நிலவும் புதிய பூகோள அரசியல் போட்டியில் சீனாவுடன் சார்ந்து செல்லும் நிலையை தேர்ந்தெடுத்துள்ளனர்.

சீனா, வழமையாகவே , நாடுகளின் உள்விடயங்களில் பெரியளவில் தலையீடு செய்வதில்லை என்பதும் மாறாக இந்தியா அமெரிக்கா உட்பட மேற்குலக நாடுகள் மனித உரிமைகள் விடயத்தில் கட்டுப்பாடுகள் விதித்து, நாட்டின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தவேண்டும் என்றும் கட்டுபாடுகளையும் நிபந்தனைகளையும் விதிக்கின்ற அணுகுமுறையை வழமையையும் கொண்டிருப்பது என்பது நாம் அனைவரும் அறிந்ததே.

இந்த நிலையில், சிறிலங்கா, மிக வெளிப்படையாக மனித உரிமைகளையும், நாட்டின் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தவேண்டும் என்பதனையும் மறுதலிக்கும் விதமாக எதிர்த்திசையை நோக்கிச் சென்று சீன சார்பு நிலையை எடுத்திருக்கின்றது. எந்தவொரு முடிவுகளையும் சுயமாக எடுக்கமுடியாத அளவுக்கு இன்று அது சீனாவை சார்ந்து இருக்க வேண்டிய நிலைக்கு அது சென்றுள்ளது.

சிறிலங்கா சுயமாக முடிவுகளை எடுக்க முடியாத அளவுக்கு தனது சுயாதீனத்தை சீனாவிடம் இழந்து நிற்கின்றது என்பதை இன்று இங்கே இருக்கின்ற வெளிவிவகார அமைச்சரும் இராஜாங்க அமைச்சரும் நிராகரிக்க நிர்ப்பந்திக்கப்படக்கூடும். ஆனால் அது தான் இன்று நிதர்சனமாகி இருக்கும் யதார்த்தம் என்பதை அனைவரும் அறிவோம்.

உங்கள் நாட்டின் சக பிரஜைகளின் உரிமைகளை, உங்கள் சக தேசத்து மக்களாக



Gajan MP.indd 15 03.11.2024 22:23:45

இங்கே இருக்கின்ற தமிழர்களின் உரிமைகளை மறுதலிப்பதை நோக்காக கொண்டு, இன்று நீங்கள் உங்கள் நாட்டிற்கான எந்தவொரு முடிவுகளையும் சுயமாக எடுக்க முடியாத அளவுக்கு உங்களது சுயாதீனத்தை இழந்து நிற்கும் அளவுக்கு நீங்கள் சீனாவின் பக்கமாக சார்ந்து நிற்கின்றீர்கள். இதை விட நீங்கள் இலங்கையானது நாம் அனைவரும் ஒன்றாகவும் சம அந்தஸ்துடனும் வாழ்வதற்குரிய அளவுக்கு விசாலமனாது என்பதை ஏற்றிருந்திருக்க வேண்டும்.

இலங்கைத்தீவானது சிங்கள பௌத்தர்களதும் தாயகம் என்பதை ஏற்றுகோள்கிறோம், ஆனால், அது சிங்கள் பௌத்தர்களுக்கு மட்டுமே தாயகபூமி அல்ல, இது தமிழர்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமான தாயகபூமியுமாகும்.

அந்த அடிப்படையில் இந்த இலங்கைத்தீவில் பல தேசங்கள் இருக்கின்றன. தமிழர்கள் ஒருபோதும் சிங்கள மக்களுக்கு எதிரானவர்களோ அல்லது சிங்கள தேசியத்தை நிராகரிப்பவர்களோ அல்லது பௌத்த மதத்தை பாதுக்கக்க வேண்டும் என்பதை நிராகரிப்பவர்களோ அல்ல.

அப்படியிருக்கும் போதும் நீங்கள் ஏன் ஏனையவர்களது அடையாளாங்களை அங்கீகரிக்க மறுக்கின்றீர்கள்?

இலங்கையானது பல்லின மக்களின் கூட்டாக பல தேசம் கொண்ட நாடு என்பதை எந்தவகையிலும் மறுதலிக்க வேண்டும் எனும் வெறித்தனமான உங்கள் நிலைப்பாடு இன்று உங்கள் சொந்த இறைமையையே விட்டுக்கொடுக்க வேண்டிய நிலமைக்கு இன்ன்று உங்களை தள்ளியிருக்கின்றது.

அந்த ஒரே நோக்கத்திற்காக உங்கள் நாட்டின் கேந்திர முக்கியத்திவம் வாய்ந்த சொத்துகளையே (இடங்களையே) பிறருக்கு விற்கும் அளவுக்கு உங்கள் இறைமையை விட்டுக்கொடுத்து நிற்கின்றீர்கள்.

தமிழர்களினதும் முஸ்லிம்களினதும் உரிமைகளை அங்கீகரிக்க மறுத்தும் இந்த நாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தானதும் என்கிற பாதையை தேர்ந்தெடுத்து அதில் செயற்படுவதாக இருந்தால், நீங்கள் நிச்சயமாக இந்த புவிசார் அரசியல் விளையாட்டுக்குள் சிக்கவேண்டி இருக்கும். இவ்வாறான இனவாத சித்தாந்தங்களால் மீண்டும் துருவமயப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய உலகில், எந்தளவுக்கு நீங்கள் இந்த புவிசார் அரசியல் விளையாட்டுக்குள் சிக்குகிறீர்களோ, அந்த அளவுக்கு நீங்கள் மீண்டும் எதிரிகளை சம்பாதித்து கொள்வீர்கள்.

அப்படி நீங்கள் உருவாக்கிக்கொள்ளும் எதிரிகள் தமது ஆயுதமாக (leverage) இன்று நீங்கள் தமிழர்களுக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கைகளையே பாவிப்பார்கள் என்பதனை மனதிற் கொள்ளுங்கள்.

இன்று தமிழர்களுடைய உரிமைகளை நீங்கள் மறுதலிக்கலாம். ஒரு இனப்படுகொலை செயன்முறையாக மூலம் தமிழர்களின் தாயகக்கோட்பாட்டையும், தேசத்தின் தாங்கு தூண்களையும் சிதைக்கும் அளவுக்கு வடக்கு கிழக்கில் குடியேற்றங்களை நிகழ்த்தலாம். ஆனால் ஒன்றை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள், நீங்கள் இன்று



Gajan MP.indd 16 03.11.2024 22:23:45

களமிறங்கியிருக்கும் இந்த புவிசார் அரசியல் விளையாட்டுகள் இறுதியில் உங்களையும் உடைத்தெறியும் இது நிச்சயமாக நடக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எனது இந்த வார்த்தைகளை குறித்துக்கொள்ளுங்கள்.

இந்த புவிசார் அரசியல் போட்டி உங்கள் நிச்சயம் நிர்மூலமாக்கும். என்று நீங்கள் இனவாதத்தை கைவிட்டு, நீங்கள் நாட்டின் தென்பகுதியில் நீங்கள் கொண்டிருக்கும் உரித்துகளை போலவே தமிழ் மக்களும் வடக்கு கிழக்கில் அனைத்து உரித்துகளையும் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு இணைந்து செயற்பட முன்வருகிறீர்களோ, அன்றுதான், இலங்கையில் வசிக்கும் அனைவரும் நன்மையடையக்கூடிய வகையில் அனைவரும் இணைந்து இந்த புவிசார் அரசியல் வெளியை சரியான முறையில் கையாள முடியும்.

அப்படி செயற்பட்டால் மட்டுமே அனைவருக்கும் தோல்வியை தராதவகையில் அந்தப் பூகோளப் போட்டியைக் கையாள முடியும். இந்த முயற்சியில் உங்களுடன் இணைந்து செயல்பட தமிழர்கள் எப்போதும் தயாராக இருந்த போதிலும், தமிழர்களை புறம்தள்ளி செயற்படும் உங்களின் போக்கு நிச்சயம் இறுதியில் உங்களுக்கு தோல்வியையே தரும் என்பதில் ஐயம் இல்லை. அதில் இருந்து நீங்கள் தப்பி ஓடவே முடியாத நிலைக்கு நீங்கள் தள்ளப்படுவீர்கள்.

நீங்கள் ஏற்றுக்கொள்ள மறுத்தாலும், நடைமுறையில் நீங்கள் இந்த புவிசார் போட்டியில் இனறு இந்தியாவையும், அமெரிக்காவையும் எதிர்த்து நிற்கிறீர்கள். நீங்கள் சீனாவுடன் இனைந்து பணியாற்ற வேண்டாமென நான் கூறவில்லை. நிச்சயமக நீங்கள் சீனாவுடனும் இணைந்து பணியாற்றவேண்டும்.

ஆனால், இந்த நாடுகளுக்கிடையான இந்த உறவுநிலையானது இந்த புவிசார் அரசியலின் ஒரு மூலோபாயமாக இருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், குறிப்பாக சீனா இந்த மூலோபாய உறவுநிலைப் போட்டிக்குள் தன்னை நுழைத்துக்கொண்ட இன்றைய நிலையில் நீங்கள் இந்த நாட்டின் கேந்திர முக்கியத்துவத்தை சீனாவிடம் விட்டுக்கொடுப்பதென்பது, இந்தப் பயங்கரமான புவிசார் அரசியல் போட்டியில் உங்களுக்கு தோல்வியையே தருகின்ற நிலைக்கு நிச்சயம் திரும்பும் என்பது திண்மம்.

தமிழர்களின் உரிமையைகளை மறுதலிப்பதற்காக நீங்கள் இந்த பூகோள அரசியல் போட்டியை கையாளும் தவறான அணுகுமுறையானது, எந்த மக்களின் பெருமிதத்திற்காக நீங்கள் இதை செய்கிறீர்களோ அதே உங்களின் சொந்தமக்களின் இறைமையையும் நீங்கள் அழித்துக்கொள்கிறீர்கள் என்பதை மீண்டும் ஞாபகம் வைத்துக் கொள்ளுங்கள்.

நன்றி



Gajan MP.indd 17 03.11.2024 22:23:45

# நீங்கள் விட்டுச் செல்லவிருக்கும் இந்த மரபானது உங்களை அழித்தொழிக்கப்போகிறது.

**2021 வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சு மீதான விவாதத்தில், 03.12.20 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

நேர்மையாகக் கூறுவதானால் மிகுந்த தயக்கத்துடனேயே இந்த விவாதத்தில் கலந்துகொள்கிறேன். எதற்காகத் தயக்கம் என்றால், பாதுகாப்பு அமைச்சு விவகாரமானது இனங்களை துருவங்களாக ஆக்கியுள்ளது.

இந்த அவையில் ஆற்றப்படும் உரைகள் மட்டுமல்லாது, இந்த அவைக்கு வெளியிலும் இதுதொடர்பான கருத்துகள் இனங்களை துருவங்களாகவே வைத்திருக்கிறது. அதனடிப்படையில் இவ்விவகாரங்களைக் கையாளுவதில் இந்த அவையில் மோசமான நிலையே காணப்படுகிறது. இவ்விடயத்தில் எதிரான கருத்துகள் வெளியிடுவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. இப்புறச்சூழலில் இவ்விடயம்பற்றிப் பேசுவதில் ஏதாவது அர்த்தம் உள்ளதா என ஒருவர் கேள்வியெழுப்பலாம். இருந்தபோதிலும் என்னைத் தெரிவுசெய்த மக்களின் சார்பில் சில கருத்துகளைத் தெரிவிப்பது எனது கடமை.

2009ம் ஆண்டு மே மாதம் 16ம் திகதி, அப்போது விடுதலைப்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளராகவிருந்த திரு. நடேசனும், சமாதான செயலகத்திற்கு பொறுப்பாகவிருந்த திரு. புலித்தேவனும் என்னைத் தொடர்புகொண்டனர். அவர்களது கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்த 150 ஆயிரம் மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவது தொடர்பாக அப்போது ஆட்சியிலிருந்த அரசாங்கத்தைத் தொடர்புகொண்டு பேசுமாறு என்னைக் கேட்டுக்கொண்டனர். அந்த மக்கள் தொடர்பான கரிசனையையும், இதுதொடர்பில்



Gajan MP.indd 18 03.11.2024 22:23:45

அவர்களது நிலைப்பாட்டையும் வெளிப்படுத்தாதிருந்தால் அவர்கள் உயிரிழக்க நேரிடும் என்பது அவர்களது கருத்தாகவிருந்தது. அவர்கள் கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அப்போது அமைச்சராகவிருந்த திரு. பசில் இராஜபக்சவை நான் தொடர்புகொண்டு பேசினேன். அன்றைய தினம் மே பதினாறாம் திகதி, மாலை 4 மணியிலிருந்து இரவு பத்துமணிவரையான காலத்தில் ஏறத்தாள 10 தடவைகள் எமக்கிடையிலான உரையாடல்கள் இடம்பெற்றன என எண்ணுகிறேன். எவ்வாறு அந்த 150 ஆயிரம் மக்களையும் பாதுகாப்பாக வெளியேற்றுவது என்பது தொடர்பிலேயே நாம் பேசிக்கொண்டோம்.

இறுதியில், பாதுகாப்பு அமைச்சு உடன்பட்டுக்கொண்டதன் பிரகாரம் இரவு எட்டுமணிக்கு ஒரு தீர்மானத்திற்கு நாம் வந்தோம். அதன்படி திரு. பசில் இராஜபக்சவும் நானும், இரண்டு ஆயர்களுடன் (பிஷப்மார்) இணைந்து வன்னிக்குச் சென்று அங்கிருந்த மக்களை வெளியேற்றும் நடவடிக்கையை மேற்பார்வை செய்வதாக முடிவெடுத்தோம். 16ம் திகதி இரவு எட்டுமணிக்கு இந்த முடிவு எட்டப்பட்டாலும் அடுத்தநாள் நடைபெறவிருந்த பாதுகாப்புச் சபையே இதனை உறுதி செய்வதாகவிருந்தது. ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச அப்போது அணிசேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜோர்டன் நாட்டிற்கு சென்றிருந்தார். அவர் மறுநாள் பதினேழாம் திகதி காலையில் நாடு திரும்பவிருந்தார். அவர் நாடுதிரும்பியதும் பாதுகாப்புச் சபை கூட்டத்தில் கலந்துகொள்வார் எனவும் இந்த விடயத்திற்கு அனுமதி வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அப்போது அங்கிருந்த மக்கள் தொகை நூற்றியம்பதாயிரமா அல்லது நூறாயிரமா எனச் சரியாகக் கூறமுடியாவிட்டாலும் பெருந்தொகையான மக்கள் அங்கிருந்தனர்.

பதினேழாம் திகதி காலை பதினொருமணியளவில் நான் ரூபவாகினி தொலைக்காட்சியை பார்த்தபோது அங்கிருந்த அனைத்து மக்களும், ஐம்பதாயிரம் மக்கள் வெளியேற்றப் பட்டதாகவும், தற்போது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் மக்கள் எவரும் இல்லை எனவும் குறிப்பிடப்பட்டது. இதனைக் கேட்டு நான் பதற்றப்பட்டேன். எனக்குத் தெரியும், யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபோது, விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் 460 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் இருந்தது எனக்குத் தெரியும். இது அரசாங்க பணியகங்களால் வழங்கப்பட்ட புள்ளிவிபரம். அதற்குபின்னர் வெளியேற்றம் ஏற்பட்டது, இறப்புகள் ஏற்பட்டன. இந்த கணிப்பீடுகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் மட்டுமல்ல யுத்தம் பற்றி கண்காணிப்பிலிருந்த எல்லா நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ளத்தக்கவையாக இருந்தன.

யுத்தம் நடைபெற்ற நேரத்தில் நான் எங்கேயிருந்தேன் என கௌரவ சரத் வீரசேகர அன்றைக்கு கேள்வியெழுப்பியிருந்தார். அப்போது நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்தேன், எனக்கிருந்த உரிமைகளையும், அரசாங்கத்துடன் தொடர்புகொள்ளக்கூடிய வசதிகளையும் பாவித்து அந்த மக்களைக் பாதுகாப்பதே எனது பணியாகவிருந்தது. அந்த மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கு விடுதலைப்புலிகள் உடன்பட்டிருந்தனர். ஆனால் அது நடக்கவில்லை.

போர் ஆரம்பித்தபொழுது விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப்பகுதியில் 460 ஆயிரத்துக் மேற்பட்ட மக்கள் இருந்தபோதிலும், ஆரம்பத்திலிருந்து அங்கு 70 ஆயிரம் மக்களே இருந்ததாக அரசாங்கம் கூறிவந்தது. எழுபதாயிரம் மக்களுக்கு ஏற்ற அளவிலேயே



Gajan MP.indd 19 03.11.2024 22:23:45

உணவுப்பொருட்களும் மருந்துவகையும் அரசாங்கத்தினால் அனுப்பிவைக்கப்பட்டன. இதுதான் உண்மை. இதனையே அரசாங்கம் மேற்கொண்டது. இறுதியில் 320 ஆயிரம் மக்கள் அங்கிருந்து வெளியேறினர். அவர்கள் மனிக்பார்ம் உட்பட பல இடங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

இவ்வாறு அரசாங்கம் மக்கள் எண்ணிக்கைப்பற்றி பொய்யான தகவல்களை வழங்கி, ஒரு யுத்தச்சூழலில் அங்கிருந்த மக்கள் தொகையில் ஒரு சிறு பங்கினருக்கே உணவும், மருந்துப்பொருட்களும் வழங்கியதாயின் அதன் நோக்கம் என்னவாகவிருக்கும்? இதற்கு சாட்சியாக நானிருந்தேன். மே 16ம் திகதி நான் திரு. பசில் இராஜபக்சவை தொடர்புகொண்டபோது, மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்படுவதற்கு ஏதுவாக விடுதலைப்புலிகள் ஆயுதங்களை மௌனிப்பதற்கு உடன்பட்டு உள்ளதாகத் தெரிவித்திருந்தேன். ஆனால் யுத்தம் நிறுத்தப்பட்டவில்லை. இதிலிருந்து அதன் நோக்கமென்ன என்பதனை நாம் உய்ந்தறிய முடியும். அங்கிருந்த மக்களை முழுவதுமாகவோ பகுதியாகவோ அழிப்பதுதான் அதன் நோக்கமில்லையா? இந்த நோக்கம் வெளிப்படுத்தபடவில்லையா? இதுதான் தமிழ்மக்களுக்குத் தெரிந்த உண்மை நிலவரம். அதனாலேயே இந்த அமைச்சானது மக்களை இனங்களின் அடிப்படையில் துருவங்களாக வைத்திருக்கிறது எனக்குறிப்பிட்டேன். இந்த உண்மைநிலவரத்தின் மத்தியிலேயே நாங்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறோம். 164 ஆயிரத்திற்கு அதிகமான மக்களுக்கு என்ன நடந்தது என்பதுபற்றிய தகவல் எதுவுமில்லை.

இன்று இச்சபையில் உரையாற்றிய எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவர் 52க்கு அதிகமான உயர் இராணுவ அதிகாரிகள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு அந்நாடுகளின் உள்நுழைவு அனுமதியை பெற்றுக்கொள்ள முடியாதுள்ளதாக குறிப்பிட்டார். ஏன் இவ்வாறு உள்நுழைவு அனுமதி மறுக்கப்படுகிறது? இந்த உயர் அதிகாரிகளுக்கு இவ்வாறு நடைபெறுவது நியாயமற்றது எனில் இந்த அதிகாரிகள் குற்றமிழைக்கவில்லை என்றால் அவர்கள் குற்றமற்றவர்கள் என நிரூபிப்பது இந்த அரசாங்கத்தின் கடமையில்லையா? உங்களுடைய நலன் நோக்கில் இது அவசியமானதல்லவா? இதைத்தான் நாங்களும் கேட்கிறோம். ஒரு விசாரணையை நடாத்துங்கள். ஒரு சர்வதேச விசாரணைக்கு உடன்படுங்கள். இதில் மறைப்பதற்கு எதுவுமில்லையென்றால் அதற்கு உடன்படுவதற்கு ஏன் தயக்கம் காட்டுகிறீர்கள்? தயவுசெய்து இவ்வாறு தயக்கம் காட்டாதீர்கள். நீங்கள் இவ்வாறு தயக்கம்காட்டும்போது, சர்வதேச சமூகத்தின் மத்தியில் உங்களைப்பற்றி தவறான அபிப்பிராயம் ஏற்படுவது மட்டுமல்ல, நாட்டிலுள்ள சமூகங்கள் தொடர்ந்தும் பிளவுபட்டு நிற்கும். பாதுகாப்பு அமைச்சு இத்தகைய பிளவுகளை ஏற்படுத்துகிறது. தமிழர்களைப் பொறுத்தவரையில் நீங்கள் இந்த அமைச்சின் பெயரை மாற்ற வேண்டும்.

இந்த அமைச்சானது தமிழ் இனப்படுகொலைக்கான அமைச்சு என அது அழைக்கப்படவேண்டும். அல்லது தமிழ் விரோத அமைச்சு என அழைக்கப்படவேண்டும். இவ்வாறுதான் நாங்கள் உணர்கிறோம். அதனை ஏன் மறுக்கிறீர்கள்?

கௌரவ சரத் வீரசேகர காவற்துறைக்கு பொறுப்பான அமைச்சர். இச்சபையில் உரையாற்றும்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களை தடை செய்யவேண்டும் என வெட்கமின்றிக் கூறுகிறார். அவர்கள் இந்தச் சபையிலிருந்து தூக்கியெறியப்படவேண்டும் எனவும் கூறினார்.



Gajan MP.indd 20 03.11.2024 22:23:45

பல்வேறுநாடுகளும், என்போன்றவர்களும் யுத்தவலயத்தில் சிக்குண்ட மக்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்படவேண்டும் எனக் கோரியிருந்தோம். கடந்தமாதம் 22ம் திகதி இச்சபையில் கௌரவ மகிந்த சமரசிங்க உரையாற்றும்போது, அந்த மக்கள் வெளியேறுவதனை ஜனாதிபதி மகிந்த இராஜபக்ச விரும்பவில்லை எனக்குறிப்பிட்டார். ஏனெனில் பிரபாகரன் வெளியேறிவிடமுடியும் என அவர் கருதினாராம். ஒரு மனிதருக்காக ஆயிரக்கணக்கான உயிர்களை அழித்தொழிக்க நீங்கள் முடிவுசெய்தீர்கள். இதனைத்தான் போர்க்குற்றங்கள் என அழைக்கப்படுகிறது. இதனையே இனப்படுகொலை என அழைக்கப்படுகிறது. மக்களை முழுவதுமாக அல்லது பகுதியாக அழிப்பதாக முடிவுசெய்வதனையே இனப்படுகொலை என அழைக்கப்படுகிறது.

கடவுளே, இந்நாட்டின் எதிர்காலச் சந்ததி இந்தக்கலாச்சாரத்தையே தங்களின் முதிசமாகப் பெற்றுக்கொள்ளப் போகிறது. அதற்கு இடமளிக்கக்கூடாது. இந்தச் சபையில் அமர்ந்திருக்கிற மூத்த உறுப்பினர்களை நான் இனவாதி என்று கூறமாட்டேன். ஆனால் இன்று பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு விவகாரங்கள் தொடர்பாக நியமனங்கள் பெற்றவர்கள் விடயத்தில் அவ்வாறு கூறமுடியாதுள்ளது.

நீங்கள் இதனை முழுநாட்டுக்குமான பாதுகாப்பு அமைச்சு எனக் குறிப்பிடுகிறீரகள். பாதுகாப்பு அமைச்சில் 20 பிரிவுகள் உள்ளன அவற்றுள்ள 16 வடக்கு கிழக்கில் நிலைகொண்டுள்ளன. ஆறு தலைமைப் பணியகங்கள் உள்ளன அவற்றுள் நான்கு வடக்குகிழக்கில் அமைக்கப்பட்டுள்ளன. யாருடைய பாதுகாப்புக்காக இவ்வாறு நடைபெறுகிறது? யார் உங்களது எதிரி? வீடுதலைப்புலிகள்தான் உங்களது எதிரிகள் என்றீர்கள். ஆனால் தமிழ் மக்களையே நீங்கள் ஒடுக்குகிறீர்கள். அடுத்தடுத்த சந்ததிகளுக்கும் இதனையே தெரியப்படுத்துகிறீர்கள்.

கடவுளின் பேரில் இது பற்றி மீளச் சிந்தியுங்கள். இன்றைக்கு நீங்கள் முன்மாதிரியாக காட்டுகிற விடயங்கள் இந்த நாட்டை சாபத்திற்கு உள்ளாக்கப்போகிறது. நீங்கள் எங்களை அழிக்க முடியும் ஆனால் நீங்கள் உங்களையும் சேர்த்து அழித்தொழிக்கப் போகிறீர்கள். இவ்வாறான முன்மாதிரியை நீங்கள் உருவாக்குகையில், நேற்று தமிழர்கள் பாதிக்கப்பட்டார்கள், இன்று முஸ்லீம்கள் பாதிப்பிற்கு உள்ளாகுகிறார்கள். நாளை உங்களது சொந்த இனத்திற்கு இது நடக்கும். உங்களுக்கு போட்டியானவர்கள் என்று நீங்கள் கருதுபவர்களிற்கு எதிராக இவ்வாறுதான் நடந்துகொள்வீர்கள். இது கீழ்நோக்கிச் செல்லும் சுருள் போன்றது. இங்குள்ள உறுப்பினர்கள், பின்வரிசையிலிருந்து குழப்பம் விழைவிப்பவர்களை நான் குறிப்பிடவில்லை, இந்த அவையிலிருக்கு மூத்த உறுப்பினர்கள் இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பார்களேயானால் இந்த நாடே நாசமாகும். அதனை உங்களால் ஒருபோதும் தடுத்துநிறுத்த முடியாது போய்விடும்.

நான் திரும்பத் திரும்பக் கூறிவருகிறேன். நான் கொழும்பில் பிறந்து வளர்ந்தவன். எனது நண்பர்கள் சிங்களவர்கள். நான் சிங்கள மக்கள் மத்தியில் வளர்ந்தவன். 1983ம் ஆண்டு இனவன்முறையின்போது ஜனாதிபதி சட்டத்தரணி ஆனந்த விஜயசேகர, ஜனாதிபதி சட்டத்தரணி கோசல விஜயதிலக, திரு.ஸ்ரான்லி வில்லியம்ஸ் போன்றவர்களே எங்களைக் காப்பாற்றினார்கள். அவ்வாறான மனிதர்களையே எனக்குத் தெரியும். பத்துவருடங்களுக்கு முன் இச்சபையின் உறுப்பினராக வந்தபோது, விடுதலைப்புலிகள் இருந்தபோதுகூட இவ்வவையில் இவ்வாறான கலாச்சாரம் இருக்கவில்லை. சக உறுப்பினரகள்



Gajan MP.indd 21 03.11.2024 22:23:45

கூறுகிற கருத்துகளை ஏற்றுக்கொள்ளவிட்டாலும், நடத்தப்படும் உரைகளை கிரகிக்க விரும்புவர்களாகவும், கேள்விகளுக்கு பதிலளிக்க விரும்புவர்களாகவும் உறுப்பினர்கள் இருந்தார்கள். ஆனால் இப்போது இந்த சீரழிந்த நிலைமக்குத்தான் இந்த நாட்டு வந்திருக்கிறது.

தமிழ்மக்களை உரிமையற்றவர்களாக ஆக்குவதில் நீங்கள் வெற்றிபெறலாம். தொடர்ச்சியான திட்டமிட்ட இனவழிப்பிற்கூட நீங்கள் வெற்றிபெறலாம். தமிழின அடையாளத்தை முழுமையாக அழிப்பதிற்கூட நீஙகள் வெற்றிபெறலாம். நாங்கள் இந்நாட்டில் வாழ்வதற்கு உரித்துடையவர்கள் என்று கூற முடியாத நிலைகூட ஏற்படலாம்.



Gajan MP.indd 22 03.11.2024 22:23:45

# இருண்ட பொருளாதார நெருக்கடியான தருணத்தில் சிறிலங்கா தற்போது இருக்கிறது.

டிசம்பர் மாதம் ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றமானது ஜனவரி மாதம் 18 ஆம் திகதி ஜனாதிபதியால் மீளவும் கூட்டப்பட்டிருந்தது. இதன் ஆரம்பத்தில் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் கொள்கை விளக்கவுரை இடம்பெற்றிருந்தது. இவ்வுரை மீதான 20 ம் திகதி விவாதத்தின் போது 20.01.2021 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே,**

முன்னெப்போதுமில்லாதவாறு, பிரித்தானியர் இந்நாட்டை விட்டு வெளியேறியிருந்த காலத்திலிருந்து பார்க்கும்போது, மிக மோசமான ஒரு இருண்ட பொருளாதார நெருக்கடியான தருணத்தில் சிறிலங்கா தற்போது இருக்கிறது.

இந்த அரசாங்கம் தனது செல்நெறியை வினைத்திறனுடையதாக, உடனடியாக மாற்றிக்கொள்ளாமல் இருக்குமானால், சிறிலங்கா வங்குரோத்து நிலையை அடையக்கூடிய விதத்திலேயே இந்நாட்டின் பொருண்மிய வீழ்ச்சிவீதம் அமைவதைக் காணக்கூடியதாக இருக்கும்.

நீங்கள் இப்போது கடைப்பிடிக்கும் கொள்கையையும் செல்நெறியையும் தொடர்ந்தும் முன்னெடுத்து செல்வீர்களாயின், இருக்கின்ற கடன்களை திருப்பி செலுத்தமுடியாத நிலைமட்டுமல்லாது, இங்கு இருக்கின்ற மூலவளங்களையும் முற்றாக அழிக்கின்ற நிலைக்கே செல்வீர்கள்.

இப்படியான ஒரு சூழலிலேயே ஜனாதிபதி அவர்கள் பாராளுமன்றை ஒத்திவைத்திருந்தார். ஒத்திவைக்கப்பட்ட பாராளுமன்றமானது ஜனாதிபதியால், மீளவும் கூட்டப்படுகின்றபோது, இப்பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஜனாதிபதி முன்வைப்பார் என்றே அனைவரும் எதிர்பார்த்தார்கள்.

குறிப்பாக, இன்று நாடு எதிர்கொள்ளும் மிக சிக்கலான பொருளாதார நெருக்கடி குறித்து மட்டுமல்லாது, நாட்டின் பொருளாதார நெருக்கடியைத் தீர்க்கும் வழிமுறைகுறித்தும், பிரிதானியர் நாட்டை விட்டு சென்றதிலிருந்து, கடந்த 74 வருடங்களாக, சிறிலங்கா அரசு எதிர்கொள்ளும் கட்டமைப்பு சார் பிரச்சினைக்கான தீர்வு குறித்தும், தனது கரிசனையை இந்த அரசாங்கம் வெளிப்படுத்தும் என எதிர்ப்பார்த்தார்கள்.



Gajan MP.indd 23 03.11.2024 22:23:45

உண்மையில் நீங்கள் எதை நோக்கி செல்லப்போகிறீர்கள் என்பது குறித்தான அடிப்படைகள் குறித்து, ஒரு மீளாய்வு செய்யவில்லையாயின், நீங்கள் எந்தவொரு மாற்றத்தையும் கண்டுவிடப்போவதில்லை என்பதே யதார்த்தமான உண்மையாகும்.

எனக்கு முன்னர் பேசிய ஒருவர், இங்கு கூறியிருந்த அல்பேர்ட் ஜன்ஸ்டீன் அவர்களின் கூற்றை இங்கு மீள ஞாபகப்படுத்த விரும்புகிறேன். "ஒரே விடயத்தையே மீண்டும் மீண்டும் செய்வதன் மூலம், நீங்கள் ஒரு மாற்றத்தை எதிர்ப்பார்க்க முடியாது." நீங்கள் ஒரு மாற்றத்தை அடையவேண்டுமாயின் உண்மையில் நீங்கள் ஒரு மாற்றத்தைக் கொண்டுவரவேண்டும்.

அந்தவகையில், வடக்கு கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியைச் சேர்ந்தவர்கள் என்கின்றவகையில், ஜனாதிபதி அவர்கள் தனது மனோநிலையை மாற்றி, இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தும், ஒரு வித்தியாசமான பார்வையை வெளிப்படுத்துவார் என எதிர்பார்த்திருந்தோம்.

பாராளுமன்றை ஜனாதிபதி ஒத்திவைத்தபோது, இந்நாட்டு மக்கள் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஒரு அரசியலமைப்பை உருவாக்க வேண்டுமென்ற சர்வதேச நெருக்கடி ஜனாதிபதிக்கு ஏற்பட்டிருந்தது.

அதிலும், கடந்த மூன்று அரசியலமைப்புக்களும் தமிழ் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்டிருந்த நிலையில் – அல்லது தமிழ் மக்கள் அந்த அரசியலமைப்புக்களால் கைவிடப்பட்டிருந்த நிலையில் – இந்த நாட்டை சரியான அடித்தளம் ஒன்றில் கட்டியெழுப்ப வேண்டுமாயின், இந்த நாடு கடந்த 74 வருடங்களாக எதிர்கொள்ளும் அடிப்படையான கட்டமைப்புசார் பிரச்சினைகள் குறித்து கட்டாயமாக கவனம் செலுத்தப்பட்டு அவை தீர்க்கப்படவேண்டும்.

வடக்கு கிழக்கு மக்கள் குறித்து ஜனாதிபதி தெரிவித்த கருத்துகளை இங்கு குறிப்பிடவிரும்புகிறேன்.

"நீண்ட போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்கள், வேறு அனைவரையும் விட ஒரு பொருளாதார உத்தரவாதத்தையே எதிர்பார்க்கிறார்கள். சிறுவர்களுக்கான சிறந்த கல்வி, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, சுயதொழில் முனைவோர்களுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்பு, உரிய குடிநீர் வசதி, விவாசாயத்துக்கான நீர்ப்பாசன வசதி, வீடு, உரிய வைத்தியசாலைகள், வீதிகள். மற்றும் உட்கட்டமைப்பு வசதிகளையே வடக்கு கிழக்கு மக்கள் எதிர்ப்பார்க்கிறார்கள்.

இந்த வசதிகளை எந்த இனப்பாகுபாடுமின்றி செய்து கொடுப்பதே இன நல்லிணக்கத்தை அடைவற்கான இந்த அரசாங்கத்தின் மிக முக்கிய பணியாகும் என்று தெரிவித்திருந்த ஜனாதிபதி இந்த பாராளுமன்றத்தில் வடக்கு கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், தமது அரசியல் கொள்கைகளை தற்காலிகமாகவேனும் ஒரு ஓரத்தில் ஒதுக்கிவைத்துவிட்டு, தமது பகுதி மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் அரசாங்கத்தின் முயற்சிகளிற்கு ஒத்துழைப்பு வழங்க முன்வர வேண்டும் எனவும் அழைப்பு விடுத்திருந்தார்.

தனக்கு கிடைத்த பிரதானமான மக்கள் ஆணை நிலையான பொருளாதார உத்தர



Gajan MP.indd 24 03.11.2024 22:23:45

வதத்திற்கானது என்றே ஜனாதிபதி கூறுகிறார். ஆகவே, வடக்கு கிழக்கு மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எதிர்த்தரப்பில் இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களை, தமது கொள்கைகளையும் தமக்கு மக்கள் அளித்த ஆணையையும் மறந்துவிட்டு, தன்னோடு இணைந்து பணியாற்றுமாறே அழைத்திருக்கிறார்.

அவர் குறிப்பிடுகின்ற பாதையிலேயே, அந்த மக்கள் ஆணை குறித்தே நானும் பேச விளைகிறேன். இந்த அரசாங்கம் இந்த பாராளுமன்ற தேர்தலில் ஏறத்தாள 60 சதவீத வாக்குகளை பெற்று 2/3 பெரும்பான்மையை பெற்றுக்கொண்டது.

ஆனால் வடக்கு கிழக்கு மக்களின் ஆணையை எடுத்துக்கொண்டால், இங்கு எதிர்த்தரப்பில் இருக்கும் தமிழ்க் கட்சிகள், தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டித் தீர்வுக்காகவே மக்களின் ஆணையை பெற்றுக்கொண்டார்கள்.

இந்த அரசு தெற்கில் பெற்றுக்கொண்ட, தெற்கு மக்களின் 60 வீதமான ஆணையை விட, நாம் வடக்கு கிழக்கு மக்களிடம் பெற்றுக்கொண்ட ஜனநாயக ஆணை மிக மிக வலிமையானது. ஏறத்தாழ 75 சத வீதத்துக்கு மேற்பட்ட மக்கள், தமிழ் கட்சிகள் முன்வைத்த தமிழ் தேசம் அங்கீகரிக்கப்பட்ட சமஸ்டி தீர்வுக்கான ஆணையையே தந்துள்ளார்கள்.

ஆனால், தான் பெற்றுக்கொண்ட மக்கள் ஆணையை விட மிக மிக உறுதியான மக்கள் ஆணையை பெற்றுக்கொண்ட தமிழ் கட்சிகளை, தமது கொள்கைகளையும் மக்கள் ஆணையையும் கைவிட்டுவிட்டு, தமிழ் மக்களுக்கு எதிரான தனது இனவாத கொள்கைக்கு ஆதரவு அளிக்குமாறு, எதுவித வெட்கமோ கூச்சமோ இன்றி இந்த ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல, அவரது அரச தரப்பிலே அமர்ந்திருக்கின்ற ஐந்து தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களில், ஆகக்குறைந்தது வடக்கில் இருந்து தெரிவு செய்யப்பட்ட மூன்று பேர், தமிழ் தேச அங்கீகாரத்தை முன்னிறுத்தியே தமது தேர்தல் பிரசாரத்தை முன்வைத்து மக்களிடம் சென்று வாக்கு கேட்டு இங்கே வந்திருக்கிறார்கள்.

அமைச்சர் டக்ளஸ் தேவனாந்தா கூட, வடக்கில் செய்த ஒவ்வொரு பிரச்சாரத்திலும், ஒவ்வொரு பிரச்சார சுவரொட்டியிலும், தமிழர் தேசம் தலைநிமிர; தனக்கு வாக்களியுங்கள், என்று கேட்டே – தமிழ் தேசத்தை சுலோகமாக கொண்டே மக்களிடம் சென்று வாக்கு பெற்றிருக்கிறார்.

இப்படியாக வடக்கு கிழக்கு மக்கள் ஏகோபித்த முறையில் எமக்கு வழங்கிய ஜனநாயக ஆணையை ஒருபோதும் நாம் விட்டுக்கொடுக்க மாட்டோம்.

மக்கள் ஆணையால் வெளிப்பட்ட எமது மக்களின் இந்த அபிலாசைக்காகவே, ஆயிரக்கணக்கான மக்கள் தமது உயிர்களை கொடுத்திருக்கிறார்கள். இதற்காக நாம் இழந்தவைகள் ஏராளம். நீங்கள் எங்கள்மீது இழைத்த கொடூர இனப்படுகொலைக்குப் பின்னர் கூட, எமது மக்கள் உறுதியாகவும் தமது அபிலாசைகளை ஜனநாயக ஆணையாக தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகிறார்கள்.

இப்படிப்பட்ட எமது மக்களின் ஜனநாயக ஆணையை விட்டுவிட்டு வருமாறு எவரும் இங்கு எதிர்பார்க்கமுடியாது. இந்த மக்கள் ஆணை எதுவித சமரசத்துக்கும் அப்பாற்பட்டது.



Gajan MP.indd 25 03.11.2024 22:23:45

இந்த ஆணை ஒருபோதும் விட்டுக்கொடுக்கப்படமுடியாதது என்பதை இங்கு உறுதியுடன் கூறிக்கொள்கிறேன்.

அதேநேரம், இங்கே எதிர்த்தரப்பில் இருக்கின்ற தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களுள் எவராவது, இப்படியான அர்ப்பணிப்புகளுடன் மக்கள் வழங்கிய ஆணையை கைவிட்டு ஒற்றையாட்சியை ஏற்றுக்கொள்ளலாமென நினைப்பார்களாயின், அவர்கள் கூட எதிர்வரும் காலங்களில் உரிய தருணங்களில் மக்களிடமிருந்து, தேவையான படிப்பினைகளை பெற்றுக்கொள்வார்கள் என்பதை, அவர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

கனம் அவைத்தலைவர் அவர்களே,

இன்று எமக்கு தேவைப்படுவது ஒரு காத்திரமான மாற்றம். அந்த காத்திரமான மாற்றம் அரசாங்கத் தரப்பில் இருந்து ஒருபோதும் வரப்போவதில்லை என்பது வெளிப்படையானது. அது எதிர்த்தரப்பில் இருந்தே வர வேண்டும். ஆனால் அப்படிப்பட்ட மாற்றத்துக்கான ஒரு தொலைநோக்கு எதிர்த்தரப்பில் உண்மையாகவே இருக்கிறதா? என்று பார்த்தால், துரதிஸ்டவசமாக அப்படியான காத்திரமான மாற்றத்தை நோக்கிய தெளிவான நோக்கு எதிர்த்தரப்பில் கூட இல்லை.

இங்கு எதிர்த்தரப்பில் இருக்கும் சஜித் பிரேமதாசவின் ஐக்கிய மக்கள் சக்தியானது, எமது இனப்பிரச்சினை விடயத்தில் ராஜபக்சக்களையும் அவர்களின் கொள்கைகளையும் விஞ்சக்கூடியவாறு தன் பிரசாரத்தை கட்டமைப்பதே, எதிர்காலத்தில் தன்னை நிலைநிறுத்துவதற்கான ஒரேயொரு வழியென நினைக்கிறது. இறுக்கமான – மத்தியை மையப்படுத்திய ஒற்றையாட்சியைப் பேணுவதையே அவர்களும் தமது இலக்காக கொண்டிருக்கிறார்கள்.

அங்கே ஒருபுறம் இனவாதக் கொள்கைகள் தலைவிரித்து ஆடும்போது, இங்கே எதிர்த்தரப்பில் இருக்கும் சரத்பொன்சேகா போன்றவர்கள், அதை மிஞ்சும் வகையில் நினைவுகூரல்களைத் தடைசெய்ய வேண்டும் எனப் போட்டி போட்டுக்கொண்டு இனவாதம் பேசுகிறார்கள்.

இது தான் இங்கு எம்மத்தியில் இருக்கிற எதிர்த்தரப்பு. இங்கு எதிர்க்கட்சித்தலைவர், உண்மையாகவே ஒரு காத்திரமான மாற்று சிந்தனையை முன்வைத்து, அதற்காக – அர்ப்பணிப்புடனும் நேர்மையுடனும் உழைக்க முன்வராத பட்சத்தில், வெறுமனே இனவாதம் பேசும் தரப்புக்கு, ஒரு மாற்றீடு எனும் போர்வையில், இன்னொரு இனவாதம் பேசும் தரப்பை – அது யாராக இருந்தாலும் தமிழர்கள் தெரிவு செய்யப்போவதில்லை.

அப்படியாக, வெறும் மாற்றீடுகள் எனும் பேரில், தலையிடிக்கு தலையணையை மாற்றும் காலம் முடிந்து விட்டது. இந்த நாட்டை மாற்றத்தை நோக்கி கொண்டு செல்லப்போகிறீர்களாயின், நீங்கள் அடிப்படைகளை மாற்றவேண்டும். அடிப்படைகளை மாற்றுவதில் இருந்தே ஆரம்பிக்க வேண்டும். அடிப்படைகளில் மாற்றம் எனும் போது இந்நாட்டின் கட்டமைப்பு சார் மாற்றங்களை தொடங்குவதில் இருந்து, உண்மையான மாற்றம் ஆரம்பிக்க வேண்டும் என நான் இங்கு வலியுறுத்த விரும்புகிறேன்.

நன்றி



Gajan MP.indd 26 03.11.2024 22:23:45

# இனப்படுகொலை நடக்கவில்லை என நீங்கள் சொல்லவிரும்பினால், உங்கள் ஜனாதிபதியை, உங்கள் பாதுகாப்பு அமைச்சரை இங்கு இந்த அவைக்கு நேரடியாக அழைத்து வாருங்கள்,

10/02/2021 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

இலங்கையில் தமிழர்கள் மீது இனப்படுகொலை இன்னமும் நடந்துகொண்டு இருக்கிறது ! என்பதை இனப்படுகொலையின் ஒரு சாட்சியாக நான் ஆணித்தரமாக இந்த அவையில் பதிவு செய்யவிரும்புகிறேன்.

இனப்படுகொலை நடக்கவில்லை என நீங்கள் சொல்லவிரும்பினால் ,உங்கள் ஜனாதிபதியை, உங்கள் பாதுகாப்பு அமைச்சரை இங்கு இந்த அவைக்கு நேரடியாக அழைத்து வாருங்கள், நாம் அது குறித்து நேரடியாக விவாதிப்போம்.

அதற்கு நான் தயார்!

இனப்படுகொலை நடக்கவில்லை என நீங்கள் கருதினால், ஒளித்து ஓடாமல், ரோம் சாசனத்தில் கையெழுத்து வைத்து விட்டு சர்வதேச நீதிமன்றில் சர்வதேச விசாரணைக்கு துணிந்து முகம்கொடுத்து நீங்கள் குற்றமற்றவர்கள் என நிரூபியுங்கள்.

அதைவிடுத்து இங்கு எனது பேச்சின் இடையே கத்தி கூச்சலிட்டு இடையூறு செய்து கொண்டிருப்பதில் அர்த்தமில்லை!

இனப்படுகொலை என்பதன் சட்டவிளக்கம் குறித்தும் இனப்படுகொலை இப்போதும் தொடர்கிறது எனும் கஜேந்திரகுமாரின் குற்றச்சாட்டு குறித்து, சஜித் அணியை சேர்ந்த H.H.D சில்வா மற்றும் பொது ஜன பெரமுனவை நிவாட் கப்ரல் ஆகியோர் எதிர்த்து விவாதம் செய்தனர், ஐநா சபையின் விதிகள் இனப்படுகொலை என்பது வெறுமனே ஆட்களை கொல்வது மட்டும் அல்ல, ஒரு இனக்குழுமத்தின் / தேசத்தின் அடையாளத்தை



Gajan MP.indd 27 03.11.2024 22:23:45

முழுமையாகவோ பகுதியாகவோ அழித்தல் என்பது கூட இனப்படுகொலைதான், அது இப்போதும் எமது மண்ணில் தொடர்கிறது.அதாவது தமிழ்ர்கள் மீதான இனப்படுகொலை இன்னமும் தொடர்கிறது எனவே அதற்கான நீதியை கோருவதற்குரிய உரிமை தமிழர்களுக்கு இருக்கிறது.

1)வடக்கு கிழக்கு என்பது தமிழ் பேசும் மக்களின் (தமிழர் மற்றும் முஸ்லிமகளின்) தாயக பிரதேசம் என்பதை ஏற்றுக்கொள்ளுதல்.

2)தமிழர்கள் தனியான ஒரு தேச அந்தஸ்துக்குரியவர்கள் என்பதை அங்கீகரித்தல்
தமிழ் தேசத்தின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தல்.

4)சிறிலங்கா அரசால் நடத்தப்பட்ட , மற்றும் இன்னமும் நடாத்தப்பட்டுக்கொண்டிருக்கின்ற தமிழர்மீதான இனப்படுகொலை குறித்து விசாரிக்க சிறிலங்காவை சர்வதேச நீதிமன்றிற்கும் மற்றும் ஏனைய சர்வதேச பொறுப்புக்கூறல் நிறுவனங்களிடமும் பாரப்படுத்தல்.

போன்றவையே பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான மக்கள் பேரணியில் சர்வதேசத்தை நோக்கி மக்களால் வலியுறுத்தப்பட்ட பிரதான கோரிக்கைகள்.

தமிழர்களை அழித்து, முஸ்லிம்களை அழித்து இந்த தீவு தனியே சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது என காட்டுவதற்கு நீங்கள் எடுக்கும் முயற்சிகள் ஈற்றில் நீங்கள் நேசிக்கும் அந்த சிங்கள பௌத்த தேசம் சிதறுண்டு போவதிலேயே முடியும்.

அந்த உடைவு இப்போதே ஆரம்பித்து விட்டது.

நன்றி



Gajan MP.indd 28 03.11.2024 22:23:45

# வன்னியில் ஐந்து மக்களுக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர்.

08.04.2021 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

நான் ஒரு பொருண்மிய நிபுணன் அல்ல. ஆதலால் இந்த நாடு எதிர்கொண்டுள்ள பொருண்மிய நெருக்கடியிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதுபற்றி நான் இச்சபையில் உபதேசம் செய்யவிரும்பவில்லை.

இருந்தாலும், இன்றைய நெருக்கடி நிலையிலிருந்து வெளிவருவதற்கு சர்வதேச நாணய நிதியத்தை அணுகவேண்டும் என்ற கருத்து புத்திஜீவிகள் மத்தியில் வலுவானதாக உள்ளது என்பது உண்மை. அவ்வாறு செய்வதற்கு முன்னர் இலங்கை மீளக்கட்டமைப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும். கடன்களை மீளகட்டமைப்பது மட்டுமல்ல, இலங்கையின் அரசகட்டமைப்பை மீள கட்டமைப்பது பற்றியும், எவ்வாறு ஆட்சி நடத்துவது என்பதுபற்றியும் தீர்மானிக்க வேண்டும். ஏனெனில் இந்நாட்டை ஆட்சிசெய்யும் முறையிலும் நெருக்கடி காணப்படுகிறது. இந்நடைமுறை யதார்த்ததிலிருந்து ஒருவரும் விலகி ஒழிவிடமுடியாது.

இந்நிலையில், பொருண்மிய விடயத்தில் ஒரு பொது மனிதனாக, வடக்கு கிழக்கினை பிரதிநிதித்துப்படுத்துகிற ஒரு நாடாளுமன்ற உறுப்பினராக சிலவிடயங்களை இங்கு முன்வைக்க விரும்புகிறேன். மீளகட்டுமானத்தைச் செய்யும்போது இந்த விடயங்களை கவனத்திற்கொள்வது அவசியமானது.

இன்றைய பாதகமான பொருண்மிய நெருக்கடியிலிருந்து வெளிவருவதற்கு இது அவசியமானது என நான் கருதுகிறேன்.

முதலில், நீங்கள் கடந்தவருடம் பாதீட்டில் நிதி ஒதுக்கப்பட்ட விடயத்தைப் பார்த்தால் 2022ம் ஆண்டிற்கான பாதீட்டில் 14 விழுக்காடு பாதுகாப்புச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருப்பதனை காணலாம். அவற்றுள் இராணுவச் செலவீனங்களுக்கான ஒதுக்கீடு 12.3 விழுக்காடு.



Gajan MP.indd 29 03.11.2024 22:23:45

2021ம் ஆண்டில் இராணுவ செலவீனங்களுக்கான ஒதுக்கீடு 10.56 விழுக்காடு ஆகும்.

2021, 2022 ம் ஆண்டுகளில் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துகொண்டு சென்றிருக்கையில், நடைமுறையில் நாடு வங்குரோத்து நிலைக்குச் சென்றிருக்கையில் பெருந்தொகையான நிதி இராணுவச் செலவீனங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது. பாதுக்காப்புச் செலவீனங்களுக்கு 14 விழுக்காடும் இராணுவத்திற்கு 10 விழுக்காட்டிற்கு அதிகமாக ஒதுக்கப்பட்டிருப்பதும் எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாதது. குறிப்பாக அமைதி நிலவுகிற காலத்தில் இவ்வாறு நடைபெறுகிறது. அமைதி நிலவுகிறது என்று சொல்லும்போது, ஆயுதமோதல்கள் எதுவும் நடைபெறவில்லை. கடந்த காலங்களில் தமிழ்மக்களாகிய நாங்கள் ஆயுதப்போராட்டத்தை ஆதரித்திருந்தோம். இப்போது நாங்கள் ஆயுதப்போராட்டம் பற்றிப் பேசுவதில்லை. எங்களுடைய மக்களை ஆயுதங்களைக் கையிலெடுக்குமாறு நாங்கள் கூறுவதில்லை.

இவ்வாறிருக்கையில் இலங்கை பாதுகாப்புத்துறைக்கு ஒதுக்கப்படும் நிதியை இவ்வாறு அதிகரிப்பது நியாயப்படுத்தமுடியாதது.

அடுத்த ஐந்து வருடங்களுக்கு இராணுவத்திற்கான ஒதுக்கீடு வருடத்திற்கு 2 விழுக்காடு என்றளவில் அதிகரிக்கும் என இராணுவ விடயங்களை வெளியிடும் ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லி என்ற சஞ்சிகை எதிர்வுகூறியுள்ளது. இவ்விடயத்தை அவையிலிருக்கும் உறுப்பினர்கள், குறிப்பாக இதுபோன்ற இக்கட்டான சூழ்நிலையில், சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

நாடுகளின் பாதுகாப்புச் செலவீனங்களை அவற்றின் மொத்த வருமானத்துடன் ஒப்பிடும்போது, இலங்கையை விட அதிகமாக செலவிடும் நாடுகளாக அவுஸ்திரேலியா, ஐக்கிய இராட்சியம், இந்தியா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் உள்ளன. நாடுகளின் பாதுகாப்புச் செலவீனத்தை அவற்றின் அரசாங்கச் செலவீனத்துடன் ஒப்பிடும்போது இலங்கையை விட அதிகமாகச் செலவிடும் ஒரே ஒரு நாடு இஸ்ரேல். இஸ்ரேலிலுள்ள நிலவரம் இலங்கையிலுள்ள நிலவரத்துடன் வெகுவாக மாறுபட்டது என்பதனை நாம் அறிவோம்.

இலங்கை இவ்வாறு பாதுகாப்புத்துறைக்கு பெருமளவு நிதியைச் செலவிடுவதற்கு காரணம், நாட்டை ஆக்கிரமிப்பதற்கு அல்லது நாட்டில் பிரச்சனைகளை உருவாக்குவதற்காக வெளியிலிருந்து வரும் ஆபத்திலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக அல்ல. மாறாக இலங்கை அரசு அதன் எதிரிகள் உள்நாட்டிலேயே இருப்பதாகக் கருதுகிறது. அது தமிழர்களை எதிரிகளாகக் கருதுகிறது, இப்போது முஸ்லீம்களையும் எதிரிகளாகக் கருதுகிறது. அரசாங்கம் பறைசாற்றுகிறபடி தங்களுக்கு வாக்களித்தவர்கள் என்று கூறுகிற சிங்கள மக்களையும் எதிரிகளாகவே காண்கிறது. இவ்வாறான பார்வையில் பாரிய தவறு இருக்கிறது.

இந்த அரசாங்கமும், எதிர்க்கட்சியும் இவ்வாறு எதிர்ப்புநிலையிலிருந்து அணுகுவதனை விட, தங்களை உரிமையிழந்தவர்களாகக் கருதும் தமிழர்களினதும், முஸ்லீங்களினதும் அச்சத்தை நீக்குவதற்கு முயல்வார்களேயானால் நிச்சயமாக பாதுகாப்புச் செலவீனங்களுக்கு இவ்வாறு பெருந்தொகையான நிதி ஒதுக்கீடு செய்வதற்கான அவசியம் ஏற்படாது.



Gajan MP.indd 30 03.11.2024 22:23:45

இந்த அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும்போது இவ்விடயங்களை சிரத்தையுடன் கணக்கில் எடுக்கவேண்டும் எனப் பரிந்துரைக்கிறேன். இந்த நாட்டில் வாழுகின்ற அனைவரினதும் நலனிற்காக, குறிப்பாக வடக்கு கிழக்கில் வாழும் தமிழர்களின் நலனிற்காக ஒடுக்குமுறையாளராகச் செயற்படும் இராணுவக் கட்டமைப்புகள் கலைக்கப்பட வேண்டும்.

ஒடுக்குமுறை என்று சொல்லும்போது பாரிய எண்ணிக்கையில் இராணுவம் அங்கு நிலைகொண்டிருப்பதும் அடங்குகிறது. வடக்கு கிழக்கில், பதினான்கு மக்களுக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில், அதிலும் வன்னியில் ஐந்து மக்களுக்கு ஒருவர் என்ற விகிதாசாரத்தில் இராணுவத்தினர் நிலைகொண்டுள்ளனர். இது எந்தவகையிலும் ஆரோக்கியமானதல்ல.

தமிழ் மக்கள் மீது பாரதூரமான குற்றச்செயல்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில், இக்குற்றச் செயல்கள் இனப்படுகொலை, மானிடத்திற்கு எதிரான குற்றச்செயல்கள் என தமிழ் மக்கள் திரும்பத்திரும்பக் குற்றஞ்சாட்டுகையில், இன்றிருப்பதுபோன்று இராணும் நிலைகொண்டிருப்பது ஆபத்தானது. ஏனெனில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு, அவர்களுக்கு எதிராக குற்றங்களை இழைத்தவர்கள் அவர்கள் மத்தியில் வாழ்வது ஏற்புடையதல்ல. ஆகவே காலங்கடந்து விட்டாலும், அரசாங்கம் தனது பாதுகாப்புச் செலவினத்தையிட்டு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

பாதுகாப்பு தனித்து இராணுவத்திடம் மட்டுமல்ல. அவர்களிடம் குடிசார் பாதுகாப்புப் பிரிவு என்றும் ஒன்றும் உள்ளது. அவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களை பணிக்கு அமைத்தியுள்ளனர். ஆசிரியர்களுக்கு மாதாந்த வேதனமாக 30 ஆயிரம் ரூபாவை வழங்குகின்றனர். வடக்கு கிழக்கில், பாலர்கள் தங்களது கல்வியை ஆரம்பிக்குபோதே இந்த இராணுவமயமாக்கலுக்குள் உள்வாங்கப்படுகின்றனர். முன்பள்ளி கல்விக்கும் இராணுவத்திற்கும் என்ன தொடர்பு? இராணுவம் ஏன் இவ்வற்றில் தலையிடவேண்டும்? வடக்கு கிழக்கினைப் பொறுத்தவரை இதுதான் இராணுவத்தின் மனோபாவம்.

சாதாரண முன்பள்ளி ஆசிரியர்கள் 6 ஆயிரம் ரூபா வழங்கப்படுகிறது. அவர்களது நியமனம் நிரந்தரமாக்கப்படவில்லை என அவர்கள் போராடுகிறார்கள். இன்று ஆறாயிரம் ரூபா மாத வருமானத்தில் ஒருவர் குடும்பம் நடத்த முடியுமா? ஆறாயிரம் ரூபா ஒரு வாரத்திற்குக்கூட போதாது. அதே ஆசிரியர்கள் குடிசார் இராணுவப் பிரிவினால் நடத்தப்படும் பாடாசாலைகளுக்குச் சென்று கற்பித்தால் முப்பதாயிரம் ரூபாவிற்குமேல் வழங்கப்படுகிறது.

ஆகவே இங்கு இராணுவத்திற்கு ஒரு நிகழ்ச்சித் திட்டமிருப்பது தெளிவாகிறது. இந்த நிகழ்ச்சிதிட்டம் கலைக்கப்பட வேண்டும். சர்வதேச நாணய நிதியத்திடம் செல்வதற்கு முன்னர் இதனை மறுசீரமைக்குமாறு அரசாங்கத்தை வேண்டுகிறோம். இது நடைபெறாவிட்டால், இதனை ஒரு முன்நிபந்தனையாக வைக்குமாறு சர்வதேச நாணய நிதியத்திடம் நாம் வேண்டுகோள் விடுப்போம்.

நன்றி



Gajan MP.indd 31 03.11.2024 22:23:45

# இயற்றப்படும் சட்டங்கள் செயற்பாட்டுக்கு வராது வெறுமனே பேச்சளவில் மட்டும் வைத்திருப்பது இந்த நாட்டின் ஒரு மரபாக மாறியிருக்கிறது.

06.07.21 அன்று காணாமல் போனோர் அலுவலகம் குறித்து தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

– சிறிலங்காவின் நீதித்துறை நம்பகம் அற்றது.
– பாதிக்கப்பட்ட மக்களின் கருத்துகளை புறம் தள்ளி எடுக்கப்படும் முயற்சிகள் ஒரு போதும் நீதியை பெற்றுத்தராது.

– பொறுப்புக்கூறலுக்கான சர்வதேச அழுத்தங்களில் இருந்து தம்மை பாதுகாப்பதற்காக செய்யப்பட்ட ஒரு அலங்காரமே இந்த அலுவலகமே தவிர , இவை நீதியை பெற்றுக்கொடுக்கப்போவது கிடையாது.

– இந்த அலுவலகத்தின் பெயரை மட்டும் வைத்துக்கொண்டு பொறுப்புக்கூறலில் இம்மியளவும் முன்னேற்றத்தை காட்டாது ஆறு வருடங்களை கடந்த அரசு கடத்த முடிந்தமை இதற்கு ஒரு உதாரணம்.

– இயற்றப்படும் சட்டங்கள் செயற்பாட்டுக்கு வராது வெறுமனே பேச்சளவில் மட்டும் வைத்திருப்பது இந்த நாட்டின் ஒரு மரபாக மாறியிருக்கிறது.

காணமற்போனோரை கண்டறிவதற்கான பணியகம் (Office of Missing Persons) தொடர்பில் எனது கருத்துகளை முன்வைக்க விரும்புகிறேன். ஆரம்பகட்டமாக கொண்டுவரவிருக்கும் நீதி விசாரணைக்கு உட்படுத்தல் மற்றும் சித்திரவதைகளுக்கு எதிரான சட்டவிதிகள் ஆகிய திருத்தங்களை வரவேற்கிறேன். இவை முன்னோக்கி அடியெடுத்து வைக்கும் நடவடிக்கைகள் என்பதில் ஐயமில்லை.



Gajan MP.indd 32 03.11.2024 22:23:45

இங்கு பல நாடாளுமன்ற உறுப்பினர்களும், குறிப்பாக எதிர்க்கட்சி உறுப்பினர்கள் திரும்பத்திரும்பக் கூறியதுபோன்று, சொற்களில் மட்டும் வைத்துக்கொண்டிருக்காது, இவற்றை நடைமுறைப்படுத்துவதே மிகவும் முக்கியமானது என நான் நம்புகிறேன். இதனை நீதியமைச்சர் முழுமையாக அறிவார் எனவும் நம்புகிறேன்.

இந்நாட்டில் இதுபோன்ற விடயங்களை இவ்வாறு கையாள்வது என்பது ஒரு மரபாக இருக்கிறது. முன்பு அரசியல் யாப்பில் பதினேழாவது திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. அப்போது வேறொருவர் ஜனாதிபதியாகவிருந்தார் அவர் இச்சட்டத் திருத்தத்தை கொண்டுவருவதில் தன்னை ஈடுபட்டிருந்தவராயிருந்தும் இந்நாட்டின் அதியுச்சமான சட்டத்தில், அதாவது அரசியல் யாப்பில் கொண்டுவரப்பட்ட இத்திருத்தம் அமுல்படுத்தப்படவில்லை. இத்திருத்தத்தில் அரசியல் யாப்புக்கான சபை ஒன்று உருவாக்குவதாகவிருந்தது. இறுதியில் அது நிறைவேற்றபபடவில்லை.

இப்படியாக, நிறைவேற்றப்படும் சட்டங்கள் தொடர்பாக இந்நாட்டில் உருவாக்கியிருக்கிற மரபு மிகவும் மோசமானது. இதன் காரணமாக இந்நாட்டின் நீதிபரிபாலன சேவையின் நம்பகத்தன்மையானது முற்றுமுழுதாக கேள்விக்குள்ளாகியுள்ளது இக்கருத்துகள் ஒருபுறம் இருக்க, காணமற்போனோரை கண்டறிவதற்கான பணியகம் பற்றி இந்த இடத்தில் பேசவிரும்புகிறேன்.

ஐ.நா. மனிதவுரிமைச்சபையில் கொண்டுவரப்பட்ட 30/1 தீர்மானத்தின் விளைவாக காணமற்போனோரை கண்டறிவதற்கான பணியகமும், இழப்பீடுகள் வழங்குவதற்கான பணியகமும் அமைக்கப்பட்டன. இத்தீர்மானமானது முன்னைய அரசாங்கத்தின் உடன்பாட்டுடனேயே கொண்டுவரப்பட்டது.

இந்த 30/1 தீர்மானத்திற்கு உடன்பட்டதனை துரோகத்தனமான நகர்வு என தற்போதைய கடுமையாக விமர்சித்துவருகின்ற அதே சமயம், மறுபுறத்தில், ஐ.நா. மனிதவுரிமைச்சபை கூட்டங்களில் தொடர்ச்சியாக பங்கெடுத்துவருகின்ற நாங்கள், மேற்படி தீர்மானமானது பாதிக்கப்பட்டவர்களுக்கு உண்மையில் துரோகமிழைத்துள்ளதாகவே கருதுகிறோம்.

தனித்த ஒரு நாடுபற்றிய தீர்மானமானது அந்நாட்டில் பாரிய குற்றச்செயல்கள் நடைபெற்றுள்ளதனை ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு பொறுப்புகூறலை உறுதிப்படுத்து வதற்காகவே கொண்டுவரப்படுகிறது.

உண்மையான அர்த்தத்தில், முன்னைய அரசாங்கமானது பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு பதிலாக, பொறுப்புக் கூறவைப்பதற்கான நெருக்குவாரத்திலிருந்து சிறிலங்காவைக் காப்பாற்றியிருக்கிறது என்றே கருதுகிறோம். பிரதான பிரச்சினைகளை திசைதிருப்பி, முக்கியத்துவமில்லாத உதிரியான விடயங்களை சொல்லளவில் மேற்கொள்ளுவதன்மூலம் இவ்விடயத்தில் முன்னேற்றம் ஏற்பட்டுவருகிறது என்பதனைக் காட்டுவதற்காகவே இவற்றை முன்னைய அரசாங்கம் செய்தது. அவற்றில் ஒன்றுதான் இந்த காணாமற்போனோரை கண்டுபிடிப்பதற்கான பணியகம்.

இதுவிடயத்தில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமைச் சபையிலும், ஐநா கட்டமைப்பிலும் ஒரு செயன்முறை இருக்கிறது. அதாவது, எவ்விதமான முடிவுகள் எடுக்கப்படினும் அவை பாதிக்கப்பட்டவர்களை மையப்படுத்தியாகவே இருக்க வேண்டும். பாதிக்கப்பட்டவர்கள்



Gajan MP.indd 33 03.11.2024 22:23:45

இச்செயன்முறையில் நம்பிக்கைகொண்டிருக்கவேண்டும். ஏனெனில் பாதிக்கப்பட்டவர்கள் இச்செயல் முறையில் நம்பிக்கை கொள்ளாவிடின் அவர்கள் இவ்விடயத்தில் ஒத்துழைப்பு வழங்கப்போவதில்லை.

பாதிக்கப்பட்டவர்களால் பல பரிந்துரைகள் முன்னைய அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டன. ஆனால் இப்பணியகத்தினை அமைக்கும்போது அவை எவற்றையும் முன்னைய அரசாங்கம் கருத்தில் எடுக்கவில்லை. வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இப்பணியகத்தின் நம்பகத்தன்மைபற்றித் திரும்பத் திரும்ப முறையிட்டுவந்தார்கள் அவர்களால் முன்வைக்கப்பட்ட முறைபாடுகளிலிருந்து சில விடயங்களை வாசிக்கிறேன்.

"இப்பணியகம் உருவாக்குவது தொடர்பான சட்டப்பிரிவு 13 இல் உட்பிரிவு –2 இல் குறிபிடப்பட்டபடி இப்பணியகத்தினால் விசாரணைகளில் கண்டறியப்படுகிற எந்தவிடயமும், சிவில் மற்றும் குற்றவியல் வழக்குளில் பயன்படுத்தப்பட மாட்டாது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிலையில் இப்பணியகமானது நீதியை நிலை நாட்டும் என்று நீங்கள் எவ்வாறு எதிர்பார்க்கலாம்?"

"இப்பணியத்தின் ஆணையாளர்களாக நியமிக்கப்பட்டவர் விடயத்தில் வெளிப்படைத்தன்மை கடைப்பிடிக்கப்படவில்லை. இதில் அங்கத்துவம் வகிக்கும் சிங்கள அரசியல்வாதிகள் சிலர், பாதுகாப்பு படைகளைச் சேர்ந்த எந்த ஒருவரையும் சட்டத்தின் முன் நிறுத்துவதனை அனுமதிக்க மாட்டோம் எனத் திரும்பத் திரும்பக் கூறிவருகிறார்கள்."

"நியமிக்கப்பட்ட ஏழு ஆணையாளர்களில் முன்னாள் மூத்த படையதிகாரியும் உள்ளடக்கப்பட்டிருக்கிறார். அவரிடம் சென்று எவ்வாறு நீதியைப் பெற்றுக்கொள்ள முடியும்? அவரை இப்பொறுப்பிலிருந்து மேற்படி பணியகம் நீக்குமா?"

இவ்வாறு பலவிடயங்களை அவர்கள் பட்டியலிட்டிருந்தார்கள்.

வடக்கு கிழக்கில் வாழும் பாதிக்கப்பட்ட தமிழர்கள் இப்பணியகத்திலோ அல்லது இழப்பீடுகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்ட பணியகத்திலோ நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவர்கள் இவற்றை புறக்கணித்து வருகிறார்கள்.

பாதிக்கப்பட்டவர்களில் மிகப்பெரும்பான்மையினர் இப்பணியகத்திற்கு சென்று விசாரணைகளில் கலந்துகொள்ள மறுத்துவிட்டனர்.

இத்தகைய பின்னணியிலேயே முன்னைய அரசாங்கம் இப்பணியகத்தை இந்நாடாளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ள வைத்து உருவாக்கியது பொறுப்புக்கூறல் விடயத்தில் சிறிதளவு முன்னேற்றமாவது ஏற்பட்டிருக்கிறது என்று சர்வதேச சமூகத்திற்கு காட்டுவதற்கு வெறுமனே சோடனைகளை செய்வதாக மட்டுமே அது உருவாக்கப்பட்டது. ஆதலால் இவற்றைக்காட்டி பொறுப்புக்கூறல் விடயத்தினை எவ்வித முன்னேற்றமுமின்றி ஆறுவருடங்களாக முன்னைய அரசாங்கத்தால் இழுத்துச் செல்ல முடிந்தது. இந்த அரசாங்கமும் மனிதவுரிமைச் சபையின் 30/1 தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மேற்படி இரண்டு பணியகங்களையும் வைத்திருக்க முனைவது ஆச்சரியத்துக்குரிய விடயமல்லை.



Gajan MP.indd 34 03.11.2024 22:23:45

போர் முடிவடைந்து பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னரும் சாதாரணமக்களுக்கு எதிராக இராணுவத்தினரால் பாரிய குற்றச்செயல்கள் இழைக்கப்பட்டன என்பதனை புரிந்துகொள்ள முடியாதிருப்பது மிகவும் துன்பகரமான நிலைமை.

தனது மக்களைப் பாதுகாக்க வேண்டியது ஒரு நாட்டின் கடமை. இராணுவத்தினர் இவ்வாறான குற்றச்செயல்களைச் செய்திருந்தால் அவர்கள் நீதிவிசாரணைக்கு உட்படுத்தப்படவேண்டும்.

இவ்வரசாங்கத்தில் முக்கிய பதவிகைள வகிப்பவர்கள், பன்னிரண்டு வருடங்களுக்கு முன்னார் இவ்வாறான குற்றச்செயல் நடைபெற்றதனை தெரிந்திருந்து வைத்துக்கொண்டும் நடவடிக்கையெடுக்க மறுத்து வருவது இந்த நாடு எவ்வாறான துன்பகரமான நிலையிலிருக்கிறது என்பதனை மிகத் தெளிவாகக் காட்டுகிறது. இவ்விதமான கலாச்சாரம் தொடருமானல் குற்றம் புரிபவர்கள் தண்டனைவிலக்குப் பெறுகிற ஒரு நிலையையே நாம் உருவாக்குவோம்.

நன்றி



Gajan MP.indd 35 03.11.2024 22:23:45

# யார் உங்கள் எதிரி? யாரை நீங்கள் எதிரியாக பார்க்கின்றீர்கள்?

எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் மீதான பாராளுமன்ற விவாதத்தில் 21.07.21 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

யுத்தம் என ஒன்றும் இல்லாத இந்த காலப்பகுதியில் பட்ஜெட்டின் 10.35 % வீதத்தை பாதுகாப்பு அமைச்சுக்கு இப்போது ஒதுக்கியிருக்கிறீர்கள்!

யார் உங்கள் எதிரி?
யாரை நீங்கள் எதிரியாக பார்க்கிறீர்கள்?

உலகில் எந்த ஒரு நாடும் இலங்கைக்கு எதிராக தாக்குதலை மேற்கொள்ளவோ பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தவோ இல்லை!

உங்கள் நாட்டுக்குள் இருப்பவர்களையே, உங்கள் குடிமக்களையே நீங்கள் எதிரிகளாக கருதிக்கொண்டு இருக்கிறீர்கள்.

நீங்கள் உங்கள் நாட்டின் சொந்த குடிமக்களின் உரிமைகளை கூட வழங்க மறுக்கிறீர்கள்!

அவர்களும் இந்த நாட்டின் குடிமக்களாக உணர்வதை , வினைத்திறனான குடிமக்களாக. பரிணமித்து , நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிப்பதை சேர்க்கும் குடிமக்களாக உருவாவதைவிட, அவர்களின் உரிமைகளை மறுத்து அவர்கள் மீது கொடூர போரை ஏவிவிட்டு அவர்களை கொல்வதையே உங்கள் தெரிவாக எடுத்திருக்கிறீர்கள்!

உங்களது பாதுகாப்பு கொள்கை மற்றும் வெளிவிவகார கொள்கைகளானது, தமிழர்கள் எதுவித உரிமையையும் பெற்றுவிடக்கூடாது என்பதை உறுதிப்படுத்துவதையே அடிப்படையாக கொண்டு வரையப்பட்டு வருகிறது.



Gajan MP.indd 36 03.11.2024 22:23:45

அதன் மூலம், அந்த 32 வருடங்களுக்கும் மேலான அடக்குமுறை மற்றும் போர் மூலம் நீங்கள் நினைத்த இலக்கை அடைந்து விட்டீர்கள் என நீங்கள் நினைக்கிறீர்கள்!

ஆனால் இந்த முறை நீங்கள் முஸ்லிம்களை இலக்காக தெரிவு செய்திருக்கிறீர்கள்.

இப்போது நீங்கள் முஸ்லிம்களை தீவிரமயப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள்.

ஏனெனில் உங்களுக்கு அப்படி ஒரு எதிரி பிம்பம் ஒன்றை எதிரில் வைத்திருக்கும் தேவை ஒன்று இருக்கிறது. அப்படி ஒன்றை உருவாக்கி கொள்வதன் மூலம் தான் உங்கள் ஊழல் மிக்க மற்றும் இனவாத கொள்கைகளை முன்னெடுக்க முடியும்.

இந்த நாட்டின் மக்கள் அல்ல . நீங்கள் தான் உங்களுக்கே பொய்யை கூறி அதை நம்பும் நேர்மையீனத்தை தொடர்ந்து செய்துவருகிறீர்கள்.

இப்போது யுத்தமொன்று இல்லாத இந்த காலகட்டத்திலும் , தொடர்ந்தும் நீங்கள் இராணுவமயமாக்கலை செய்து வருகிறீர்கள் ?

ஏன்?

ஏனெனில் இப்போது உங்கள் சொந்த சிங்கள மக்களிடமிருந்து உங்களை பாதுகாக்கவேண்டிய தேவை எழுந்துள்ளது.

நாம் எதிர்த்தரப்பில் இருந்து கொண்டு காலம் காலமாக இதை சொல்லிக்கொண்டு வருகிறோம் ஆனால் அதை ஆளும் தரப்பில் இருப்பவர்கள் ஒருபோதும் செவிமடுப்பதற்கு தயாராக இருந்தது கிடையாது . ஏனெனில் எதிர்த்தரப்பில் இருக்கும் நாம் தமிழர் அல்லது முஸ்லிம் அல்லது கிறிஸ்தவர் ஆக இருப்பதால் ஏன் நீங்கள் எங்களுக்கு செவிமடுக்க வேண்டும் என எண்ணியிருந்திருக்கலாம்.

ஆனால் இப்போது முன்னெப்போதும் இல்லாதவாறு நிலமை மோசமாகி இருக்கிறது கடந்த 73 வருடகாலச் சரித்திரத்தில் பெரும்பாலான காலத்தை தமிழர்கள் மீதும், இப்போது முஸ்லீங்கள் மீதும் குற்றஞ்சாட்டுவதன் மூலமே கடத்தியிருக்கிறீர்கள். இனிக் குற்றஞ்சாட்டுவதற்கென உங்களுக்கு முன்னால் எந்தத்தரப்பும் இருக்கப்போவதில்லை. இம்முறை இதற்கான விலையை நீங்கள் கொடுக்கப்போகிறீர்கள்.

கடந்த 73 வருடகாலமாக தமிழர்கள் கூறிவருவதனை மக்கள் விளங்கிக்கொள்ளவும் நம்பவும் ஆரம்பித்திருக்கிறார்கள். இன்று முஸ்லீம்கள் எதிர்நோக்கிவருவதனை மக்கள் விளங்கிக்கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள்.

தமிழ் மக்கள் தாக்கப்பட்டபோது அரசாங்கங்களை, அது எந்த அரசாங்கமாயிருந்தாலும் ஆதரித்து வந்த முஸ்லீம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இப்போது கண்திறக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் தங்களது மக்களுக்கு உண்மையைக்கூறப் புறப்பட்டிருக்கிறார்கள். இனவாத, ஊழல் அரசாங்கங்களுக்கு முட்டுக்கொடுத்துவந்த சிங்கள நாடாளுமன்ற உறுப்பினர்களும் தங்களது மக்களுக்கு உண்மையைக்கூற தலைப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறான நிலையில் நாம் இன்றிருக்கிறோம்.

நீங்கள் இப்பாதையிலிருந்து விலகவில்லை எனில் மக்கள் வீதிக்கு இறங்குவார்கள். ஒரு தனிநபராக அமைச்சர் கம்மன்பிலவை குற்றஞ்சாட்டுவதில் எந்த அர்த்தமுமில்லை. தனித்து இந்த அரசாங்கத்தைக் குற்றஞ்சாட்டுவதிற்கூட எவ்வித அர்த்தமுமில்லை. எழுபத்திமூன்று வருடகாலமாக ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் கொள்கைத்திட்டத்தையே கேள்விக்கு உள்ளாக்க வேண்டும்.

இனியும் தொடர்ந்தும் நீங்கள் இந்த பாதையிலேயே செல்வீர்களேயானால் நாங்கள் சொன்னதும் செய்ததும் சரியானது என்பதனையும் நீங்கள் சொன்னதும் செய்ததும் தவறானது என்பதனையும் காலம் உங்களுக்கு உணர்த்தும்!

நன்றி



Gajan MP.indd 38 03.11.2024 22:23:45

# ஆசிரியர்களின் சம்பள முரண்பாடு தீர்க்கப்படுவதற்கான உத்தரவாதமொன்றை அரசு உடன் வழங்க வேண்டும்.

# வடக்கு கடலில் இந்திய மீனவர்களால் தமிழ் மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்படுவதும் வாழ்வாதாரம் அழிக்கப்படுவதும் உடன் தடுத்து நிறுத்தப்படல் வேண்டும்.

05-08-2021 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

எனக்கு மிக குறுகிய நேரமே வழங்கப்பட்டு இருப்பதால் , சில விடயங்களை சுருக்கமாக சொல்ல விளைகிறேன்.

கொரோனோ தொற்றினால் நாடு ஒரு பொருளாதார சிக்கலில் இருக்கும் போது ஆசிரியர்கள் சம்பள உயர்வுக்கு போராடிவது நியாயமற்றது என சிலருக்கு தோன்றலாம்.

ஆனால் ஆசிரியர்கள் அப்படி ஒரு நியாமற்ற ,யதார்த்தமற்ற கோரிக்கையை முன்வைத்து போராடவில்லை. இந்த கோவிட் பெருந்தொற்றுக்கால பொருளாதார நெருக்கடிக்குள் தமது ஊதிய உயர்வை உடனடியாக தருமாறு கூட அவர்கள் கேட்கவில்லை.

ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினை தீர்ப்பதற்கான உத்தரவாதத்தை அரசு உடனடியாக வழங்க வேண்டும். உங்களது அரசாங்கமே 2001 ஆம் ஆண்டு நியமித்த சுபோதினி ஆணைக்குழுவினால் பிரேரிக்கப்பட்ட ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டினை தீர்ப்பதற்கான உத்தரவாதத்தை அரசு உடனடியாக வழங்க வேண்டும்.

நீங்கள் நியமித்த அந்த ஆணைக்குழுவின் சிபாரிசுகள் நியாயமானவை என்பதை ஏற்று அதனை நடைமுறைப்படுத்துவதற்கான உத்தரவாதமொன்றையே அவர்கள் கேட்கிறார்கள்.

அவர்களின் கோரிக்கைக்கு இந்த அரசாங்கம் உடனடியாக செவிசாய்த்து நியாயமான முறையில் அனுக வேண்டும். அந்த உத்தரவாதத்தை உடனடியாக வழங்க வேண்டும். அதன் மூலம் இந்த பிரச்சினையை இலகுவாக முடிவுக்கு கொடுவரலாம்.

அடுத்த விடயம்.

வடக்கு கடற்பரப்பில் நிகழ்ந்துவரும் ஆபத்தான நிலமைகுறித்து இந்த சபையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.



Gajan MP.indd 39 03.11.2024 22:23:45

கடந்த சில காலமாக, குறிப்பாக ஜூலை 22 ம் திகதி முதல் இந்திய மீனவர்கள் பாரிய ட்ரோலர் படகுகளில் சிறிலங்கா கடற்பரப்புக்குள் நுழைந்து மீன்பிடித்து வருகிறார்கள். இந்த றோலர்கள் எமது மீனவர்களின் மீன்பிடி வலைகளை வெட்டியும் உபகரணங்களை உடைமைகளையும் அழித்து வருகின்றார்கள். குறிப்பாக மன்னார் முதல் யாழ்ப்பாணம் ஊடாக முல்லைத்தீவு வரையான தமிழ் மீனவர்கள் இதனால் பெரும்பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறார்கள்.

ஒரு சிறிய உதாரணத்தை இங்கு முன்வைக்கிறேன்.

கடந்த ஜூலை 22 ம் திகதி வடமராட்சி கொட்டடி கடற்தொழிலாளர் சங்கத்தினைச் சேர்ந்த 27 தமிழ் மீனவர்களின் 40 லட்சம் ருபா பெறுமதியான 277 வலைகள் உட்பட மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கிறது. பருத்துத்தித்துறை முனை கடற்றொழிலார் சங்கத்தினை சேர்ந்த அந்த குறுகிய மீன்பிடிக்கான பகுதியில் மட்டும் ஏறத்தாழ நாற்பது இலட்சம் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்திய ட்றோலர்களால் தும்பளை கிழக்கில் இருந்து கொட்டடி வரைக்குமான பகுதிகளில் அந்த ஒரே நாளில் இந்திய ட்றோலர்களால் ஏறத்தாழ 15 மில்லியன் ரூபா பெறுமதியான மீன்பிடி உபகரணங்கள் அழிக்கப்பட்டிருக்கிறது.

இந்த அழிவுகள் ஓரிரு நாட்கள் அல்ல, ஒவ்வொரு நாளும் எமது கடற்பரப்பில் நடந்துகொண்டிருக்கிறது. அப்படியாயின் வடக்கு கிழக்கில் என்ன நடந்துகொண்டிருக்கிறது.
வடக்கு கிழக்கு கரையோரம் முழுவதும் கடலை பாதுகாப்பது எனும் பெயரில் எமது மக்களின் நிலங்களை அபகரித்து பாரிய கடற்படை முகாம்களை அமைத்து வைத்திருக்கிறீர்கள். ஆனால் எமது மக்களின் உடமைகள் அழிக்கப்படுகின்றன. எமது மக்களின் வளத்தையும் உடமைகளையும் அழிக்கும் வெளிநாட்டு ஊடுருவல்களை தடுக்க முடியாவிட்டால், கடற்படை உண்மையில் என்ன செய்து கொண்டிருக்கிறது? அப்படியாயின் கடற்படை என்ன நித்திரையா கொள்கிறது?

இந்த அரசு இப்படியாக தமிழ் மீனவர்களின் வலைகளும் மீன்பிடி உபகரணங்களும் அழிக்கப்படுவதை வேண்டுமென்றே இந்த அரசு அனுமதிக்கிறதா எனும் கேள்வி எழுகின்றது.

ஒரு புறம் எமது மக்களின் வாழ்நிலங்களை ஆக்கிரமித்து முகாம்களை அமைத்து அவர்களை நிலமற்றவர்களாக ஆக்கிக்கொண்டு மறுபுறம், அதே மக்களும் அவர்களது உடமைகளும் அழிக்கப்படுவதையும் அனுமதித்துக்கொண்டிருக்கிறீர்கள். இது ஒரு மிக மோசமான ஒரு செயற்பாடு என்பதை இங்கு வெளிப்படுத்த விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல,

கடல் அட்டை பண்ணைகள் பாரிய அளவில் வடக்கு பிரதேசத்தில் அமைக்கப்பட்டு வருகின்றன. பாரிய அளவில் அவற்றை அமைப்பதற்கான அனுமதியையும் வழங்கிவருகிறார்கள். இதன் மூலம் அந்த பிரதேசத்தின் கடற்படுக்கை மீன்பிடி, முழுமையாக அழிக்கப்படக்கூடிய ஆபத்து இருக்கிறது. அதன் மூலம் எதிர்கால மீன்ன்பிடித்தொழில் மிகக்கடுமையாக பாதிப்புகளை எதிர்கொள்ளநேரிடும்.

உண்மையில் எமது மீனவர்கள் இருபுறத்தாலும் ஒடுக்கப்படுகின்ற அச்சத்தில் வாழ்கிறார்கள்.

ஒரு புறம் கடந்த 32 வருட போரிற்கு பின்னர் தற்போது தான் சிறிது சிறிதாக எழுந்து தமது சொந்த கால்களில் நிற்க முற்படுகின்ற மீனவர்களின் உடமைகளும் உபகரணங்களும், எமது கடற்பரப்புக்குள் ஊடுருவும் இந்திய மீனவர்களினால் அழிக்கப்படுகின்றன.

மறுபுறமாக அபிவிருத்திக்கு அனுமதிப்பது எனும் பெயரில் பாரிய அளவில் கடலட்டை பண்ணைகளை அனுமதிப்பதன் மூலம் எமது கடற்படுக்கைகள் அழிக்கப்பட்டு, எமது மீனவர்களின் மீன்வளத்தை அழிக்கிறீர்கள்.

வடக்கில் குறிப்பாக யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தின் ஏறத்தாள அரைப்பங்கு மீன்வளத்தில் தங்கிகியிருக்கின்ற நிலையில், இப்படியான செயற்பாடுகளுக்கு இடம்கொடுப்பதானது, சிறிலங்கா அரசானது எமது மக்களின் வாழ்வாதாரத்தை சிதைத்து வறுமைப்படுத்துவதன் மூலம் எமது மக்களை கடற்கரை பிரதேசத்தில் இருந்து , அவர்களது சொந்த வாழ்நிலத்தில் இருந்து , அவர்களது தொழில் நிலத்தில் இருந்து அவர்களை தாங்களாகவே வெளியேற்ற நிர்ப்பந்திக்கிறதா எனும் கேள்வியை எழுப்புகின்றது.

அதன் மூலம் அந்த வளமான பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை மேற்கொள்ளும் நாசகார செயற்திட்டத்தை மேற்கொள்ள முனைகிறதா எனும் சந்தேகம் எழுகிறது. எனவே இந்த விடயத்தை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் இந்த அவையை கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு, எமது கடற்பரப்புக்குள் ஊடுருவி, எமது மக்களின் சொத்துக்களை அழிக்கும் இந்திய ரோலர்களிடமிருந்து பாதுகாப்பு கொடுக்கமுடியாவிடின், இந்த கடற்படை எமது மண்ணில் இருந்து வெளியேறட்டும். எமது கடலை பாதுகாப்பதை எமது மக்கள் பார்த்துக்கொள்வார்கள்.

நன்றி



Gajan MP.indd 41 03.11.2024 22:23:45

# இலங்கை என்பது தனியே சிங்கள பௌத்தத் தீவு என்ற மனோபாவமும், ஒற்றையாட்சி முறைமையுமே கடந்த 74 வருடங்களாக நாட்டை பேரழிவுக்குள்ளே தள்ளி வந்திருக்கிறது.

19–11–2021 அன்று இடம்பெற்ற வரவு செலவுத்திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**அவைக்குத் தலைமை தாங்கும் கௌரவ கலாநிதி ஹரினி அமரசூரிய அவர்களே!**

இந்த அவையில் மிகவும் மதிக்கப்படுபவரும் இந்த அவையில் தொடர்ச்சியாக அறிவுபூர்வமான கருத்துகளை முன்வைத்துவரும் தாங்கள் இந்த அவைக்குத் தலைமை தாங்கும் சந்தர்பத்தில் உரையாற்ற இன்று சந்தர்ப்பம் கிடைத்தமையையிட்டு நான் பெருமையடைகிறேன்.

கோத்தாபாய அரசு, கடந்த வருடம் தமது முதலாவது வரவுசெல்வுத்திட்டத்தை முன்வைத்தபோது, 35 வருடகால போரினால் மிகவும் பாதிப்படைந்த, முழுமையாக அழிக்கப்பட்ட பிரதேசமான வடக்கு கிழக்கு பிராந்தியத்தை, நாட்டின் ஏனையபகுதிகளுடன் ஒரே தட்டில் வைத்து ஒப்பிடமுடியாது, ஒப்பிடவும் கூடாது எனநான் கூறியிருந்தேன். வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதாரம் என்பது நாட்டின் ஏனைய பகுதிகளோடு ஒப்பிடுகையில் முதலீடுகளில் மற்றும் பலவழிகளில் 35 வருடங்கள் பின்தள்ளப்பட்டிருக்கிறது.

இந்த பின்புலத்தில், வெறுமனே யுத்தம் முடிவடைந்து விட்டது என்பதற்காக, பொருளாதாரத்தில் 35 வருடங்கள் பின்தள்ளப்பட்ட வடக்கு கிழக்கு பிராந்தியத்தை நாட்டின் ஏனைய பகுதிகளுடன் ஒரே தட்டில் வைத்து ஒப்பிடுவது என்பது, அந்த பகுதிக்கு இழைக்கப்பட்ட அநீதிகளையும் பாதகங்களை மேலும் தொடர்ச்சியாக நீடித்துச் செல்வதாகவே அமையும். நீங்கள் ஏற்கனவே அவர்களின் நிலமையை பாதாளத்திற்குள் தள்ளி இருக்கிறீர்கள்.



Gajan MP.indd 42 03.11.2024 22:23:45

அப்படிப்பட்ட நிலையில் அவர்கள் கீழே வீழ்த்தப்பட்டு இருக்கிறார்கள் என்பதை ஏற்றுக்கொண்டு அவர்களிடம் எஞ்சி இருப்பதை முதலில் பாதுகாக்க வழிவகை செய்து, அவர்களது பொருளதாரத்தை வலுப்படுத்தக்கூடிய திட்டங்களை முன்வைத்து படிப்படியாக அவர்கள் நாட்டின் ஏனைய பகுதிகளுடன் சமமாக போட்டியிடக் கூடியநிலைமையையே உண்மையில் உருவாக்கியிருக்க வேண்டும்.

ஆனால், அப்படிப்பட்ட ஒரு அணுகுமுறையை கையாளாது, தொடர்ச்சியான போரினால் அந்த மக்கள் 35 வருடங்கள் பிந்தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதை சிறிதளவும் கருத்திலெடுக்காது, அவர்களையும் சமனாக வைத்து நாட்டின் ஏனைய பகுதிகளுடன் பொருளாதாரத்தில் போட்டியிட தள்ளுவதன் மூலம், அந்த மக்களின் வறுமையையும் பொருளாதார்த்தில் பின்தங்கிய நிலையை வேண்டுமென்றே மேலும் பாதாளத்திற்குக் கொண்டுசெல்கிறீர்கள்.

அந்த மக்களின் பொருளாதார்த்தை வலுப்படுத்தி முதலில் அவர்களை நிலைப்படுத்தும் திட்டங்களிற்குப் பதிலாக, நாட்டின் ஏனைய பகுதியினர் வந்து வடக்கு கிழக்கு மக்களிடம் எஞ்சியிருக்க்கும் வளங்களையும் அள்ளிச் செல்வதற்கும் அந்த பகுதியும் பொருளாதாரத்தை கையகப்படுத்துவதற்கும் வசதியாக வீதிகளையும் அதற்கான திட்டங்களையும் மட்டுமே அமைக்கிறீர்கள். எம்முடையதையெல்லாம் எமக்குள்ளேயே பொத்திப் பாதுகாக்கவேண்டுமென்றோ பிறருடன் எதனையும் பகிரக்கூடாதென்றோ சொல்பவன் அல்ல நான். ஆனால் நாட்டின் பிரதேசங்களும் மக்களும் ஒரே மாதிரியாக கவனிக்கப்படாது ஒரு பகுதி மக்களை நலிவடையச் செய்யப்பட்டுள்ள சூழ்நிலையிலே, அந்த நலிவடைந்த மக்களிடம் எஞ்சியிருப்பதையாவது பாதுகாக்கவேண்டுமெனில் அப்படியான ஒரு செயல்திட்டத்தையே நாம் கருத்தில் கொள்ளவேண்டியிருக்கிறது.

ஆனால் கடந்த வருட வரவுசெலவுத்திட்டம் அதனை செய்திருக்கவில்லை. இந்த வருட வரவு செலவுத்திட்டம் இந்த விடயம் குறித்து எதையும் கருத்திலெடுக்காது முன்னைய வருடத்தைவிட இன்னமும் கீழே சென்றிருக்கிறது.

இது குறித்து அரசு சொல்லக்கூடிய ஒரே சமாளிப்பு கோவிட் தொற்றுக்கரணமாக முழு நாட்டின் அனைத்துப் பகுதிகளும் பாதிப்படைந்து முழு நாட்டின் பொருளாதாரமும் நலிவடைந்திருக்கிறது என்பதாகும். ஆனால் நீங்கள் இந்த பொருளாதார பாதிப்பு விடயத்தில் அப்படி ஒப்பிடவே முடியாது.

உண்மையில் கோவிட் நிலமையினால் வடக்கு கிழக்கின் நிலமை ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது ஆகக் குறைந்தது இன்னமும் பத்து மடங்கிற்கு மேல் மோசமானது என்பது தான் யதார்த்தம். ஆனால் இந்த அரசு அது குறித்து கிஞ்சித்தும் கவனமெடுக்கவில்லை. அரசதரப்பில் இருந்து இது குறித்து ஒரு சிறு குரலேனும் ஒலித்ததாக தெரியவில்லை. மாறாக வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதார அத்திவாரத்தையே அழிக்கின்ற வேலைத்திட்டங்களையே சிறிலங்கா அரசு கொண்டு செல்லுகிறது.

வடக்கு கிழக்கு மக்களின் பொருளாதாரத்தின் மூன்று தூண்களாக மீன்பிடியையும் விவசாயத்தையும் வர்த்தகத்தையும் குறிப்பிடலாம். இதில் முக்கியமாக மீன்பிடித் தொழிலை திட்டமிட்ட முறையிலே கட்டமைக்கப்பட்ட வகையில் தொடர்ச்சியாக அழித்து அவர்களின் வாழ்வாதாரத்தை சிதைக்கிறது சிறிலங்கா அரசு.

வடக்கு கிழக்கு கடற்பரப்புக்குள் வேறுபகுதிகளில் இருந்து சட்டவிரோதமாக நுழைந்து, வடக்கு கிழக்கு மீனவர்களின் மீன்பிடி வலைகளையும் ஏனைய உடைமைகளையும் அழிப்பதோடு தடைசெய்யப்பட்ட மீன்பிடி முறைமைகளில் மீன்பிடித் தொழிலை செய்யும் மீனவர்களை ஒருவகையில் பாதுகாக்கின்ற வகையிலேயே சிறிலங்கா கடற்படை செயற்பட்டுவருகின்றது. அதுமட்டுமல்லாது வெளிநாட்டு மீனவர்களை, குறிப்பாக இந்திய மீனவர்களை வடக்கு கிழக்கு கடற்பகுதிக்குள் உள்நுழைந்து வடக்கு கிழக்கு மீனவர்களின்



Gajan MP.indd 43 03.11.2024 22:23:45

உடமைகளை அழித்து தடைசெய்யப்பட்ட முறைகளில் மீன்பிடித்தொழில் செய்வதை வேண்டுமென்றே சிறிலங்கா கடற்படை அனுமதித்து வருகிறது.

இது குறித்து நானும் என் சக பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்வராஜா கஜேந்திரன் அவர்களும் மற்றும் வடக்கு கிழக்கை சேர்ந்த ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரும் பலதடவை இந்த சபையின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தோம். ஆனால் அரசு எந்தவொரு நடவடிக்கையையும் எடுத்திருக்கவில்லை.

கடந்த 35 வருட போரின் போது எமது மக்களின் மீன்பிடித்தொழிலை தடைசெய்து வைத்திருந்தீர்கள். இப்போது போர் முடிவடைந்திருக்கிற நிலமையில், அந்த 35 வருடங்களுக்கு முன்னரான பழைமையான முறைகளிலேயே தமது மீன்பிடி தொழிலை மீள ஆரம்பிக்க முயலுகிற எமது பிரதேச மீனவர்களை, அந்தப் பிரதேசத்துக்குள் அத்துமீறி பிரவேசித்து, நவீன மற்றும் தடை செய்யப்பட்ட சட்டவிரோத மீன்பிடி முறைகள் மூலம் மீன்வளத்தை சுரண்டி அது மட்டுமல்லாது எமது மீனவர்களின் உடமைகளை சேதப்படுத்தி அழிக்கும் வேறுபிரதேச மீனவர்களோடு போட்டியிட நிர்ப்பந்திக்கிறீர்கள். இது எவ்வகையில் நியாயமானது ? அந்த மீனவர்களால் தமது வாழ்வாதாரத்தை எப்படி கொண்டுசெல்லமுடியும்?

இதே நிலமைதான் எமது விவசாயத்துக்கும் நிகழ்ந்துகொண்டிருக்கிறது. போர் நடந்த காலத்தில் எமது மக்களின் வாழ்விடத்தில் இருந்தும் விவசாய நிலத்தில் இருந்தும் எமது மக்களை இராணுவம் மூலம் விரட்டியடித்தீர்கள், இப்போது மக்கள் வாழ்வின்றி, கவனிப்பின்றி அந்த இடங்கள் மரங்கள் வளர்ந்து நிற்கையில், நூற்றுக்கணக்கான ஏக்கர் அளவான எமது மக்களிற்கு சொந்தமான தனியார் நிலங்களை, அனுமதிப்பத்திரங்கள் உள்ள நிலங்களை காடு என பெயர் சூட்டி வனவளத்துறை மூலம் சுவீகரிக்கிறீர்கள். இதுகுறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுவந்தபோது அவர் அது குறித்து கிஞ்சித்தும் கவனமெடுக்கவில்லை. மாறாக, உண்மையில் அரசுக்கு சொந்தமான அனுமதிப்பத்திர காணிகள் இருக்கின்ற சந்தர்ப்பங்களில், அவையெல்லாம் எல்லைக் கிராமங்களுக்கு வழங்கப்பட்டு, அங்கு வடகிழக்கை சாராத பிறமாவட்ட மக்களை கொண்டுவந்து குடியமர்த்துகிறீர்கள்?. இதன் மூலம் திட்டமிட்ட முறையில் எமது வடக்கு கிழக்கு பிரதேசத்தில் மக்களின் குடிசனப்பரம்பலை செயற்கையாக மாற்றியமைக்கவே தொடர்ந்தும் முயல்கிறீர்கள். இது தான் களத்தில் நடக்கின்ற யதார்த்தம்.

ஆனால் இந்த யதார்த்தத்தையெல்லாம் நாம் வெளிக்கொண்டு வருகின்றபோது, இங்கு ஆளும் தரப்பில் இருப்பவர்கள் மட்டுமல்ல ஏன் இப்போது எதிர்க்கட்சி வரிசையில் இருகின்ற முன்னாள் ஆளும் தரப்பினர் கூட எம்மை இனவாதிகள், குறுகிய இனவாத சிந்தனை கொண்டவர்கள் என நாமம் சூட்டி அவமதித்து தட்டிக்கழித்தனர். வடக்கு கிழக்கில் சிங்களவர்கள் வருவதை முற்றுமுழுதாக எதிர்ப்பவர்கள் என திரிபுபடுத்தினர்.

ஆனால் உண்மை அதுவல்ல. ஏனையபகுதி மக்களின் நன்மைக்காக வடக்கு கிழக்கு பகுதி மக்களை தொடர்ந்தும் எதுவவித உரிமையும் வரப்பிரசாதமுமற்ற இரண்டாம் தர குடிமக்களாக நடத்துவதையும் அதைபயன்படுத்தி ஏனைய பகுதி மக்கள் வந்து எமது பிரதேசத்தை கையகப்படுத்துவதையும் ஏற்றுக்கொள்ளமுடியாது என்றே நாம் கூறுகின்றோம். ஆனால் அது தான் நடந்துகொண்டிருக்கிறது.

நாம் இதுகுறித்து இங்கு திரும்ப திரும்ப எடுத்துக்கூறியும், நாம் கூறுவதெல்லாம்



Gajan MP.indd 44 03.11.2024 22:23:45

வேண்டுமென்றே பிழையாக அர்த்தப்படுத்தப்படுவதும், எதுவித தடைகளுமின்றி இத்தகைய செய்ற்பாடுகள் தொடருகின்றமையும் இந்த அவையின் இனவாத செயற்திட்டத்தின் ஒரு அங்கமே என்பதை வெளிப்படுத்தி நிற்கிறது.

அடுத்து ஒற்றையாட்சி முறைமை குறித்து எமது நிலைப்பாட்டை பகிரவிரும்புகிறேன். சிறிலங்கா இன்று வீழ்ந்துகிடக்கின்ற மோசமான (பொருளாதார) நிலமைக்கு, சிறிலங்காகவுக்கு சுதந்திரம் கிடைத்த முதல் பத்து ஆண்டுகளை தவிர்த்து இந்த நாட்டை மாறி மாறி ஆட்சி செய்த அனைத்து தரப்பினருமே பொறுப்பேற்க வேண்டும் என இங்கு பேசிய அமைச்சர் டளஸ் அழகப்பெரும கூறியிருந்தார். அது உண்மையான கூற்று, அதை வெளிப்படையாக நேர்மையுடன் கௌரவ டலஸ் அழகப்பெரும ஒத்துகொண்டிருந்ததை நான் அவதானித்தேன். அதுதான் உண்மை. உண்மையில் இந்த நாடு கோவிட் பெருந்தொற்றினால் இந்த நெருக்கடிக்குள் வீழவில்லை. சிறிலங்காவுக்கு சுதந்திரம். கிடைத்த பத்து வருடங்களிலேயே இந்த வீழ்ச்சி ஆரம்பித்து விட்டது. அது உங்கள் அனைவராலுமேயே ஆரம்பித்தது.

இங்கு மாறி மாறி ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு அரசாங்கமும், இந்த நாட்டில் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்துவரும் குடிமக்களின் ஒரு பகுதியினரை உங்கள் எதிரிகளாக நீங்களே உருவகித்துக் கொண்டீர்கள். அவர்களின் அடையாளத்தையும் அவர்களையும் அழிப்பதே உங்களின் முழுமுதற் கடமையாக கொண்டு அக்கேற்ப சட்டதிட்டங்களை உருவாக்கினீர்கள். அதன் மூலம் அவர்கள் இந்த நாட்டின் வடக்குக் கிழக்கு பகுதியை தனது வரலாற்று தாய்நிலமாக கோரமுடியாது எனும் நிலைக்கு அவர்களை தள்ளி அதன் மூலம் முழு இலங்கைத் தீவுமே சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே சொந்தமானது எனும் இலக்கை அடையும் திட்டத்தை முன்னெடுத்தீர்கள்.

அந்த இலக்கை அடைவதற்காக, சொந்த நாட்டின் ஒரு பகுதி மக்களை நீங்களே எதிரிகளாக்கி, அவர்களை கொன்றொழிப்பத்றகாகவும் இந்த நாட்டை சிங்கள பௌத்த நாடு என மாற்றுபவர்களாகவும் இறுதியில் இராணுவ இயந்திரத்தையும் பெரும் செலவில், மிக மிக பெரும் அரச செலவில் கட்டவிழ்த்து விட்டீர்கள். அதன்மூலம் அந்த இராணுவ யுத்ததின் இலக்கை நீங்கள் அடைந்திருக்கலாம். ஆனால் இன்று யுத்தம் முடிந்து 12 வருடங்கள் ஆகின்றது. இதுவரைக்கும் அதன்மூலம் நீங்கள் கண்டடைந்தது என்ன? இப்போது நீங்கள் குறைகூறி தப்பிக்கொள்வதற்கு இங்கு விடுதலைப் புலிகள் இல்லை. ஆனால் நீங்கள் சாதித்தது என்ன? எதனை அடைந்தீர்கள்? ஆயுத மோதல் முடிவடைந்து ஐந்து ஆறு வருடங்களுக்கு மகிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தபோதோ அல்லது அதன் பின்னர் ரணில் – மைத்திரிபால சிரிசேன அரசு ஆட்சியில் இருந்த போதோ நீங்கள் எதனை சாதித்தீர்கள்? ஒவ்வொரு வருடமும் முந்தைய வருடத்தை விட மோசமானதாகவே அமைந்தது. ஒவ்வொரு வருடங்களும் நீங்கள் கீழ்நோக்கியே சென்றீர்கள்.

இப்போது, இந்த கோவிட் பெருந்தொற்றினால் தலைகுப்புற வீழ்ந்து கிடக்கிறது இந்த நாடு. இப்போது அனைத்தையும் இழந்துவிட்டு, அடிமட்டத்தையும் சுரண்டிப்பார்க்க முற்பட்டிருக்கிறீர்கள். இந்த நிலமையில் கூட நீங்கள் கடந்து வந்த பாதையை திரும்பி பார்த்து திருத்திக்கொள்ள நீங்கள் தயாரில்லை. இந்த மனோபாவமும் ஒற்றையாட்சி முறைமையும் கடந்த 74 வருடங்களாக நாட்டை பேரழிவுக்குள்ளேயே தள்ளி வந்திருக்கிறது, ஆகவே, சிறிலங்கா தனது கட்டமைப்பை மாற்றி மீளுருவாக்கம் செய்யவேண்டும் என நாங்கள் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக்கொண்டிருந்தபோதும் நீங்கள் அதே ஒற்றையாட்சி முறைமையை



Gajan MP.indd 45 03.11.2024 22:23:45

கொண்டு சென்று நாட்டை தரைமட்டத்துக்கு கொண்டுவந்து நிறுத்தியிருக்கிறீர்கள். இப்போதாவது உங்கள் பாதைகளை சீர்செய்துகொள்ளுங்கள், ஏற்கனவே அதல பாதாளத்தில் இந்த நாடு விழுந்துகிடக்கிறது, இனியும் நீங்கள் இழப்பதற்கு எதுவுமில்லை. இந்த சந்தர்ப்பத்திலாவது நீங்கள் உங்கள் பாதைகளை சரிசெய்வது குறித்து சிந்தியுங்கள். இந்த இலங்கைத்தீவு பல்தேசமுடைய நாடு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள், அதை அங்கீகரியுங்கள், அதன் மூலம் இந்த நாட்டின் ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் வளர்ச்சிக்கு பங்களிக்க முடியும் என்பதை உணர்ந்துகொள்ளுங்கள். அப்படி செய்தால் , தமிழ் தேசம், தனது புலம்பெயர் தமிழ் உறவுகளை இந்த நாட்டில் முதலீடுகளை மேற்கொண்டு இந்த நாட்டின் வளர்ச்சிக்கு உறுதுணை புரியுமாறு கேட்க முடியும். ஆனால் நீங்கள் அதை செய்யப்போவது இல்லை.

இந்த இலங்கைத்தீவு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டுமே உரித்தானது என்கிற சிந்தனைப்போக்கில் ஒற்றையாட்சியை பிடித்து தொங்கிக்கொண்டிருக்க போகிறீர்கள். அந்த சிந்தனை போக்கில் இருந்து கொண்டு தமிழர்களை அழித்தீர்கள், இப்போது முஸ்லிம்களுக்கு எதிராகவும் உங்கள் நடவடிக்கைகளை தொடங்கிவிட்டீர்கள். அது மட்டுமல்ல, உங்கள் சுயநல போக்கும் இந்த நாட்டை மேலும் அழிவுப்பாதையிலேயே தள்ளும், உங்கள் சொந்த இருப்பையையே அது அழிக்கத்தொடங்கியிருக்கிறது.

மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்களை இழைத்தேனும் தமிழர்களை அழித்து தமிழர்களுக்கு எதிரான போரை வெற்றி கொள்வதற்காக நீங்கள் உலகில் பலநாடுகளிடம் கடன்பட்டு, கடமைப்பட்டீர்கள். இன்று அந்த கடமைப்பாட்டுக்காக உங்கள் சொந்த நாட்டையே அந்த நாடுகளுக்கு விற்கதொடங்கியிருக்கிறீர்கள். அதன் மூலம் நீங்கள் வலிந்து உருவாக்கிய இந்த பூகோள அரசியல் போட்டிக்கான களத்தினை சமாளிக்க, குறித்த சக்தி மிக்க நாட்டுக்கு மட்டுமின்றி, இந்த பூகோள அரசியல் போட்டியின் மறுதரப்பினரான நாடுகளுக்கும் ஏன் வேறு சில நாடுகளுக்கும் இந்த நாட்டை பாகம் பாகமாக விற்கவேண்டிய கடப்பாட்டுக்குள் உங்களை நீங்களே தள்ளிவிட்டிருகிறீர்கள். இதை பார்க்க உங்களுக்கே வெட்கமாய் இல்லையா? இப்படியான ஒரு நாட்டில் உங்கள் பிள்ளைகளுக்கு எதிர்காலம் இருக்கிறதா நெஞ்சை தொட்டுபார்த்து நேர்மையுடன் சொல்லுங்கள்? இந்த நாட்டின் எந்த ஒரு குடிமகனும் தனக்கு சந்தர்ப்பம் கிடைத்தால் எப்படியாவது தன் பிள்ளைகளை நாட்டைவிட்டு வெளியேற்றி கல்விகற்க வேண்டும் என்றே நினைக்கூடிய நிலைக்கே இந்த நாடு இன்று வந்துநிற்கிறது. சிறிலங்காவுக்கு சுதந்திரம் கிடைத்து 74 ஆண்டுகளில் நீங்கள் பெற்றுக்கொண்ட அடைவு இது தான்! உண்மையில் இதை பார்க்க உங்களுக்கே வெட்கமாக இல்லையா?

உண்மையில் இப்போதே இந்த நாட்டை தரை மட்டத்துக்கு கொண்டுவந்து விட்டீர்கள். ஆனால் இதே சிந்தனைப்போக்கிலும் இதே பாதையிலும் நீங்கள் தொடர்ந்தும் சென்றால், இன்னும் அதல பாதாளத்துக்குள் நாட்டை அமிழ்த்தி விடுவீர்கள். அதுமட்டுமல்ல, இந்த போக்கினால், நீங்கள் உங்கள் இலக்காக வரித்துக்கொண்டு செயற்பட்ட அந்த சிங்கள பௌத்த தேசம் எனும் கருதுகோளே சிதைந்து போகும் அளவுக்கு நீங்கள் அதலபதாளத்துக்குள் மூழ்கிவிடுவீர்கள். அந்த சிங்கள பௌத்த தேசத்தின் உடைவு இப்போதே ஆரம்பித்து விட்டது என்பது தான் உண்மை. இங்கு உரையாற்றிய எதிர்த்தரப்பு மட்டுமல்ல அரசதரப்பு அங்கத்தவர்கள் கூட, கடவுச்சீட்டு பெற்று நாட்டைவிட்டு வெளியேறுவதற்காக மக்கள் வரிசையில் நிற்கிறார்கள் என கூறியிருந்தார்கள். யார் அவர்கள்,?, அங்கு வரிசையில் நிற்பவர்களுள் மிக பெரும்பாலனவர்கள் சிங்களவர்களேயன்றி தமிழர்கள் அல்ல.

இப்போதாவது மீள சிந்திக்க தலைப்படுங்கள். இந்த நாடு இந்த நிலையில் வீழ்ந்துகிடக்க காரணமான, கடந்த 74 வருடங்களாக நீங்கள் செய்து வரும் முட்டாள்தனத்துக்கு இனியாவது முற்றுப்புள்ளி வையுங்கள். இந்த நாடு பல தேசங்களை கொண்டது என்பதை அங்கீகரிக்க மறுத்தும் சமஷ்டி முறையான ஆட்சி தனியான நாட்டுக்கு வழிக்கும் என்றும் நம்பிக்கொண்டு ஒற்றையாட்சியில் தொங்கிக்கொண்டு இருந்தீர்கள். ஆனால் அந்த ஒற்றையாட்சி முறைமைதான் இங்கு ஒரு தனி நாட்டுக்கான போராட்டத்தை உருவாக்கியது. உங்களின் அந்த ஒற்றையாட்சி முறைமைதான் இன்னொரு நடைமுறை அரசை இந்த தீவுக்குள் உருவாக்கியது.

தனிநாட்டை அல்லது அதற்கான தேவையை உருவாக்குவது ஒற்றையாட்சியோ அல்லது சமஷ்டியோ அல்ல. மாறாக, இந்த நாடு எம் அனைவருக்கும் சொந்தமானது, இது எங்களின் நாடு என இந்த நாட்டின் மக்கள் அனைவரும் சந்தேகமின்றி உணரக்கூடியவகையில் அவர்களை நடத்துவது தான் தனிநாட்டுக்கான தேவையை இல்லாமல் ஒழிக்கும். ஆனால், நீங்கள் அதை செய்திருக்கவில்லை. மாறாக இது சிங்கள பௌத்த நாடு என்பதையே மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கொண்டிருக்கிறீர்கள். இப்படியான உங்களின் நடவடிக்கை மூலம் ஒரு வேளை இந்த ஒற்றையாட்சி முறையை காலம் காலமாக பேணக்கூடியதாக இருக்கும், ஆனால், அதனால், இந்த நாடு ஒருபோதும் ஸ்திரநிலைக்கு வராமல் இருப்பதையும் நீங்களே உறுதிப்படுத்திக்கொள்கிறீர்கள் என்பதை மனதில் வைத்திருங்கள். அப்படிப்பட்ட ஒற்றையாட்சியை தொடர்வதன் மூலம் இந்த நாட்டின் சட்டபூர்வ அங்கீகாரம் என்பது தொடர்ந்தும் கேள்விக்குள்ளாக்கபட்டுக்கொண்டே இருக்கும் என்பதையும் மறவாதீர்கள்.

என்றோ ஒருநாள், இந்த பூகோள அரசியல் போட்டியின் களயதார்த்தங்களின் விளைவாக, உலகின் பலம் பொருந்திய சக்தியொன்று, சிறிலங்கா இனிமேலும் ஒரு தனி அலகாக கருதப்பட தேவையில்லை எனும் முடிவுக்கு வரக்கூடும். அப்படித்தான் உலகில் நாடுகள் பிரிவடைந்திருக்கிறது. கடந்த 74 வருடங்களாக கொண்டு செல்லும் அழிவை நோக்கிய, நரகத்தை நோக்கிய பாதையையே தொடர்ந்தும் முற்கொண்டு செல்லப்போகிறீர்களா என்பதை இந்த நாட்டின் 75 வீதமான மக்களாகிய நீங்களே உங்கள் தெரிவை எடுத்து கொள்ளுங்கள்.

யுத்தம் முடிந்து 12 வருடங்களுக்கு பின்னர் கூட இன்னமும் நாட்டையும் மக்களையும் மேலும் அதல பாதாளத்துக்குள் தள்ளப்போகிறீர்களா அல்லது இந்த நாட்டின் அனைத்து குடிமக்களும் சமனான உரித்துகளை அனுபவித்து இது எமது நாடு என பெருமையுடன் சொல்லக் கூடியவாறு இந்த நாட்டினை அனவருமாக சேர்ந்து முன்னேற்றப்பதையில் செல்லகூடிய ஒரு புதிய அடித்தளத்தை நேர்மையாக இடப்போகிறீர்களா என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள்.

முடிவு உங்களுடையது!

நன்றி



Gajan MP.indd 47 03.11.2024 22:23:45

# வைத்தியசாலைகளுக்கு இடையிலான வளப்பங்கீட்டில் பாரிய பாகுபாட்டை காட்டுவது உண்மையில் ஒரு மிகப்பெரிய அநீதியாகும்.

**2022 வரவு செலவுதிட்டத்தின் சுகாதாரத்துறை ஒதுக்கீட்டின் மீதான விவாதத்தில் 30.11.21 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

இந்த நூற்றாண்டில் நாம் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான காலப்பகுதியில் தம்மை அர்ப்பணித்து அளப்பரிய சேவையாற்றும் வைத்தியதுறைசார்ந்தவர்களிற்கும் சுகாதார துறை சார்ந்த அனைத்து உத்தியோகத்தர்களுக்கும் எமது நன்றிகளையும் மரியாதையும் இந்த அவையில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

குறிப்பாக போரால் பாதிக்கப்பட்டு, குறைந்த வசதிகளுக்கு மத்தியிலும் மிகச்சிறப்பான பணியை மேற்கொண்டுவரும் வடக்கு கிழக்கு மாகாணத்தில் பணியாற்றும் வைத்தியர்கள். மற்றும் அனைத்து சுகாதார உத்தியோகத்தர்கள் மற்றும் துறை சார்ந்த அனைவருக்கும் தலைசாய்த்து.

எனது பெருமதிப்பையிம் நன்றியையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த இடத்தில் வடக்கு மாகண சுகாதாரத்துறை குறித்த சில விடயங்களை சுகாதார அமைச்சரின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

வடக்கு மாகாணத்துக்கு மட்டுமல்லாது, வடக்கு மாகாணத்துக்கு வெளியே வசிக்கும் மக்களுக்கும் மிக முக்கியமான உயர்நிலை வைத்தியசாலையாக விளங்கும் யாழ் போதனா வைத்தியசாலையின் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் அங்கு நிலவுகின்ற குறைபாடுகள் உடனடியாக கருத்திலெடுக்கப்பட்டு ஆவன செய்யப்பட வேண்டியது அவசியமானதாகும்.

ஆனால் துரஸ்ட்டவசமாக இத்தகைய உயர்நிலை வைத்தியசாலையான யாழ் போதனாவைத்தியசாலை தொடர்ந்தும் பல்வேறு வள மற்றும் ஆளணிபற்றாக்குறை களுடனேயே தொடர்ந்தும் இயங்கிவருகிறது.

அவற்றில் சிலவற்றை இந்த அவையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.



Gajan MP.indd 48 03.11.2024 22:23:45

முக்கியமாக , யாழ் போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று விடுதிக்கென உரிய நிரந்த கட்டடம் இன்னமும் இல்லை என்பது மிகவும் கவலைக்குரிய மிக முக்கியமான விடயமாகும். மிக பழைமையான பழுதடைந்த நிலையில் இருந்த யாழ் போதனாவைத்தியசாலையின் மகபேற்று விடுதியானது 2013 இல் இடிக்கப்பட்டிருந்தது. அந்த மகப்பேற்று விடுதி இன்னமும் கட்டப்படாது, உரிய மகப்பேற்று விடுதிவசதியின்றியே ஒரு தற்காலிக விடுதி வசதியுடன் யாழ் போதானவைத்திய சாலை இன்னமும் இயங்கிவருகிறது.

இதனால், ஏறத்தாழ 50 வீதமான கர்ப்பிணிதாய்மார்கள், உரிய கட்டில் வசதியின்றி நிலத்தில் வைத்தே வைத்தியம் செய்யப்படவேண்டிய கவலைக்குரிய, ஆபத்தான நிலையில் போதனாவைத்தியசாலை இருக்கிறது.

ஒரு போதானாவைத்தியசாலை என்கிற வகையில் இது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். எனவே புதிய மகப்பேற்று விடுதி அமைப்பது குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் காலதமாதமின்றி உடனடியாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தாதிய உத்தியோகத்தர்கள் குறித்து எனது கரிசனையை பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

வைத்தியநிபுணர்கள், வைத்தியர்கள் போலவே, தாதிய உத்தியோகத்தர்களுடைய பணியும் மிக முக்கியமானது.

யாழ் போதனாவைத்தியசாலையில் தாதிய உத்தியோகத்தர்களுக்கான அனுமதியளிக்கப்பட்ட ஆளணி 657 ஆகும் . ஆனால் , இந்த ஆளணியில் 573 பேர் மட்டுமே உத்தியோக பூர்வமாக நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த 573 தாதிய உத்தியோகத்தர்களுள், எந்த ஒரு காலாப்பகுதியினை எடுத்தாலும் இயல்பாகவே ஏறத்தாழ ஐம்பது பேர்வரை பணி விடுப்பில் (leave) இருப்பார்கள்.78 பேர் வரையான தாதிய உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்று இடம் மாறுதலுக்காக காத்திருக்கிறவர்களாக இருக்கிறார்கள் .இவற்றை தவிர்த்து பார்த்தால் கூட , ஆளணி மீள் மதிப்பீடு செய்யப்படாது, மிக பழைய குடிசனமதிப்பீட்டின் அடிப்படையில் இந்த ஆளணியை எடுத்துக்கொண்டால் கூட யாழ் போதனா வைத்தியசாலையில் இன்னமும் 134 தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம், உடனடியாக நிரப்பப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது.

657 தாதிய ஆளணியே தற்போது அனுபதிக்கப்பட்டுள்ளது என நான் கூறியிருந்தேன். ஆனால் தற்போதைய சனத்தொகைக்கும் தாதிய உத்தியோகத்தர்களுக்குமான விகிதாசாரத்தை எடுத்துப்பார்த்தால் உண்மையில் ஆயிரத்து இருநூற்றுக்கு அதிகமான தாதிய உத்தியோகத்தர்கள் இங்கு தேவைப்படுகிறார்கள்.

இந்நிலையில் உடனடியாக, போதனாவைத்தியசாலையின் சேவைவழங்கலின் முன்னேற்றத்துக்காக, தாதிய ஆளணியை உடனடியாக மீள் கணிப்பீடு செய்து ஆகக்குறைந்தது , இன்னொரு 300 பேருக்கான ஆளணியையாவது உடனடியாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என சுகாதார அமைச்சரை கேட்டுக்கொள்கிறேன்.



Gajan MP.indd 49 03.11.2024 22:23:45

வைத்தியர்களைப் பொறுத்தவரை 300 வைத்தியர்களுக்கும் 72 வைத்திய நிபுணர்களுக்குமான ஆளணியே யாழ் போதனாவைத்தியசாலையிற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் 175 வைத்தியர்களும் 63 வைத்தியநிபுணர்களுமே இங்கு நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

கனம் அமைச்சர் அவர்களே, இது குறித்தும் மிக முக்கியமாக கவனம் செலுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இப்போது நிலவும் கடின சூழ்நிலையை உணர்ந்து கொண்டதால், யாழ் போதானவைத்தியசாலை மட்டுமல்ல வடக்கின் அநேக வைத்தசாலைகள், தமக்கான தேவைகளை முன்வைத்து போராடுவது குறைவு.

உண்மையில் மேலே நான் குறிப்பிட்ட இந்த தரவுகளை கூட நாம் இலகுவாக பெற்றிருக்கவில்லை. (இந்த இடத்தில் சுகாதார அமைச்சர் எழுந்து, வடக்கு மாகாணத்துக்கு ஏனைய மாகாணஙக்ளை விட அதிவைத்தியர்களை இம்முறை நியமித்து இருப்பதாக கூறினார். இந்த நடவடிக்கை வெற்றிகரமாக நிறைவேற்றபபட்டால் அதற்காக தங்களுக்கு வாழ்த்து தெரிவிப்பதாக திரு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்). வடக்கு மாகாண சுகாதரதுறையை பொறுத்தவரை, யுத்தகாலத்தில் ஏறத்தாழ 900 தன்னார்வ சுகாதார தொண்டர்கள் அளப்பெரும் பணியாற்றி இருந்தார்கள்.

ஆனால் அவர்கள் எவருக்கும் நிரந்தர உத்தியோகத்துக்கான அழைப்பு விடுக்கபடாது வீட்டுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறார்கள்.

இன்றைய சூழலில் , வடக்கு மாகாண சுகாதாரத்துறையிக் சுகாதார சிற்றூழியர்களுக்கு ஏறத்தாழ 73% வீத பற்றாக்குறை நிலவுகிறது.

இப்படியாக சுகாதாரத்துறை சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்ற இந்த காலப்பகுதியில் ஒதுக்கிவைக்கப்பட்ட அந்த 900 சுகாதார சேவை தொண்டர்களை இலகுவாக உள்ளீர்க்க முடியும். அவர்களுக்கான கல்வித்தகமைகள் என எந்தவொரு தடைகளும் இல்லாத நிலையில் அவர்களை இலகுவாக உள்ளீர்க்க முடியும்.

தமது சுகாதாரத்துறையில் நிரந்தரமாக உள்ளீர்க்குமாறு கோரி அத்தொண்டர்கள் போராட்டம் நடத்திவருகிறார்கள். அண்மையில் அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே யாழ்ப்பாணம் வந்திருந்த போதும் இது குறித்து அவரின் கவனத்துக்கு நாம் கொண்டுவந்திருந்தோம். அதை தொடர்ந்து அவர் இப்பிரச்சினையை தான் அமைச்சரைவையில் சமர்ப்பித்து அதற்கான அமைச்சரவை பத்திரமும் பெறப்பட்டதாக மகிந்தானந்த அளுத்கமகே என்னிடம் தெரிவித்து இருந்தார்.

ஆனால், அமைச்சரவை பத்திரம் அனுமதிக்கப்பட்ட நிலையிலும் இது குறித்து எந்தவொரு முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் இதுவரை எடுக்கப்படவில்லை. அதனால் அத்தொண்டர்கள் தொடர்ந்தும் தமது போராட்டத்தை தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். உண்மையில் சுகாதார சிற்றூழியர்களுக்கான ஆளணியில் 73% பற்றாக்குறை நிலவுகின்ற இன்றைய நிலமையில்,அந்த 900 தொண்டர்களிற்கு நிரந்தர பணியுரிமை வழங்குவதில்



Gajan MP.indd 50 03.11.2024 22:23:45

எந்தவொரு காலதாமதமும் இருக்க தேவையில்லை என்பதை இந்த அவையில் வலியுறுத்த விரும்புகின்றேன்.

வடக்கு மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் வருகின்ற 117 வைத்தியசாலைகளில் 15 வைத்தியசாலைகளிற்கு வைத்தியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை.

இந்த 117 வைத்தியசாலைகளில் ஆக மொத்தம் 41 வைத்தியசாலைகளிர்கு மட்டுமே தாதிய உத்தியோகத்தர்களுக்கான ஆளணி அனுமதிக்கப்பட்டிருக்கிறது. 76 வைத்தியசாலைகளுக்கு தாதிய ஆளணியே கொடுக்கப்படவில்லை.

இது தவிர இன்னொரு முக்கியமான விடயமாக, மாகாணசாபைகளின் கீழ் இயங்கிவந்த பல வைத்தியசாலைகள், மீண்டும் மத்திய அரசின் கீழ் உள்ளீர்க்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. நான் அறிந்தவகையில், வடமாகானத்தை சேர்ந்த தெல்லிப்பழை, கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் வைத்தியசாலைகள் மத்திய அரசின் கீழ் உள்ளீர்க்கப்பட இருக்கிறது.

மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் இருக்கும் வைத்தியசாலைகளை விட, மத்திய அரசின் கீழ் இருக்கும் வைத்தியசாலைகளுக்கு மிக பலமடங்கு அதிகமான நிதி மற்றும் பல ஒதுக்கீடு காணப்படுவதால் , வைத்தியர்களும் அந்த பிரதேச மக்களும் வைத்தியசாலைகள் மத்திய அரசால் உள்ளீர்க்கபப்டுவதை விரும்பக்கூடும்.

ஆனால், இப்படியாக மத்திய மாகாண வைத்தியசாலைகளுக்கு இடையிலான வளப்பங்கீட்டில் இப்படியான பாரிய பாகுபாட்டை காட்டுவது உண்மையில் ஒரு மிகப்பெரிய அநீதியாகும். இப்படியாக மத்திய மாகாண சுகாதாரத்துறை மற்றும் கல்வித்துறைகளுக்கிடையில் வளப்பங்கீட்டில் பாகுபாட்டை காட்டும்போது மக்கள் மத்திய அரசின்கீழ் இருப்பதன் மூலம் அதிக நிதி மற்றும் வள ஒதுக்கீட்டை பெறவிளைவது புரிந்துகொள்ளக்கூடியதே.

இப்படியான நிதி மற்றும் வள பாகுபாட்டுக்கு மத்தியிலும் வடமாகான வைத்தியசாலைகள் மிகச்சிறப்பான பணியை ஆற்றிவருகின்றது.

அவ்வாறு சிறப்பாக செயற்படுவதால் தெல்லிப்பழை , மன்னார் , கிளிநொச்சி, முல்லைதிவு மற்றும் வவுனியா வைத்தியசாலைகளை மத்திய அரசு தன் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளீர்க்க அதனூடு அதனை மேலும் வலுப்படுத்தவும் முயல்கிறது.

மத்திய அரசின் கீழ் வருகின்ற யாழ் போதனா வைத்தியசாலையில் கூட மிகுந்த ஆளணி மற்றும் வள பற்றாக்குறை நிலவுகின்றமையே யதார்த்தம் என்பதால், வெறுமனே மத்திய அரசின் கீழ் வைத்தியசாலையை உள்ளீர்ப்பது விட மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் வருகின்ற வைத்தியசாலையாக இருந்தால் கூட அவற்றிற்கான ஒதுக்கிடுகளை போதுமான அளவில் செய்து உரிய அனுமதிகளை அளித்து மாகாணசபை நிர்வாகம், அந்த வைத்தியசாலைகளை திறம்பட கொண்டுநடத்த வழிவகை செய்வதே உண்மையில் நீண்டகால வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.



Gajan MP.indd 51 03.11.2024 22:23:45

இதன்போது சுகாதார அமைச்சர் "மத்திய அரசின் கீழ் வைத்தியசாலைகளை உள்ளீர்ப்பது குறித்த தீர்மானம் மத்திய சுகாதார அமைச்சிற்குரியது அல்ல, அம்மாகாண ஆளுநரும் மாகாணசபையுமே அந்த முடிவிற்கு பொறுப்பானவை.

தெல்லிப்பழை ஆதாரா வைத்தியசாலையை எடுத்துக்கொண்டால், அங்கு பணியாற்றும் வைத்தியர்களும் அப்பிரதேச மக்களும், மாகாணசபை வைத்யியசாலைகளுக்கான வளப்பங்கீட்டில் மிகப்பாரிய பாகுபாடு இருப்பதனால், தமது வைத்தியசாலை மத்திய அரசின் கீழா உள்ளீர்க்கபடுவதையே நோக்கியே இயல்பாக விரும்பவேண்டிய நிலைக்கு தள்ளப்படுகிறார்கள் . அதனால் ஆளுநருக்கும் அந்த அழுத்தம் வழங்கப்படுகிறது.

ஆதலால் நான் சொல்லவருவது என்னவெனில், இப்படியாக மாகாணசபை வைத்தியசாலைகளுக்கான வளப்பங்கீட்டில் பாகுபாட்டை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை மத்திய அரசை நோக்கி போவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதை விடுத்து, அவர்களுக்கான உரிய ஒதுக்கீடுகளை செய்து மாகாணசபை அந்த வைத்தியசாலைகளை நிர்வகிக்க வசதி செய்து கொடுக்கவேண்டும்.

நன்றி

பதிலளித்த சுகாதார அமைச்சர்.

இந்த கோரிக்கைகளை உடனடியாக கவனத்தில் எடுப்பதாகவும், பேச்சின் பிரதியை தன்னிடம் கையளிக்குமாறும் இது குறித்து நிதிஅமைச்சர் மாகாண அமைச்சர் இணைந்து கவனிக்க வேண்டும் எனவும் சபையில் தெரிவித்தார்.

## கொலைக்குற்றம் உறுதிப்படுத்தப்பட்டவர்கள் உங்கள் இனத்தவர், நண்பர்கள் என்பதனால் வெளியே!

## உங்கள் சட்டத்தாலேயே குற்றம் இழைத்ததாக உறுதிப்படுத்த முடியாதவர்கள் தமிழர்கள் என்பதால் உள்ளே!
## இது தான் இந்த நாட்டின் நீதியின் இலட்சணம்!

**09-12-2021 அன்று நீதி அமைச்சு மீதான வரவு செலவுதிட்ட குழு நிலை விவாதத்தில் தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

நீதி அமைச்சு மீதான விவாதத்தில் எனது உரையை 'இந்நாட்டின் நீதித்துறைக்கு இருக்கின்ற மதிப்பு குறித்த ஒரு உதாரானத்துடன் ஆரம்பிக்கின்றேன்.

மிருசுவிலில் நடந்த கொரூரமான படுகொலையின் குற்றவாளியாக இந்த நாட்டின் அனைத்து சட்ட நடைமுறைகளின் ஊடாகவும், இந்த நாட்டின் அதி உயர் நீதிமன்றின் ஊடாகவும் குற்றவாளியாக இனங்காணப்பட்ட ஒருவரை, ஜனாதிபதி தலையிட்டு அவரைபொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்து அனுப்புகின்ற அளவுக்குத்தான் இந்த நாட்டின் நீதித்துறையின் மதிப்பு இருக்கிறது.

தெரிந்தவர்கள் நண்பர்கள் கொலையாளிகள் போன்றோர்கள் மன்னிப்பளித்து இலகுவாக விடுதலை செய்யப்படுகிறார்கள்.

உண்மையில் பொதுமன்னிப்பு என்பது, ஒரு நாட்டில், ஏற்கனவே இருக்கின்ற சட்டமானது குறித்த ஒரு வழக்கில் உண்மையான நீதியை வழங்க முடியாதவாறு ஒரு நிரபராதி பாதிக்கப்பட்டிருக்குமிடத்து, அதனால் எதிர்காலத்தில் அந்த சட்டம் மாற்றத்துக்குள்ளாக வேண்டிய நிலை இருக்குமிடத்து, அந்த சட்டத்தின் கீழ் குற்றவாளியாக காணப்பட்ட ஒருவரை தண்டனையில் இருந்து மன்னிப்பளிப்பதற்காகவே இந்த பொதுமன்னிப்பு என்பது பாவிக்கப்படுவது உலக வழமை என்பது நீதி அமைச்சருக்கு நன்கு புரியும். ஆனால் அது உலக வழக்கு மட்டும் தான், இலங்கைக்கு அது மறுபக்கமாக செயற்படுகிறது.

அதாவது இலங்கையில் கொலைகாரர்களையும் கொள்ளைக்காரர்களையும் குற்றமிழைத்த உங்கள் நண்பர்களையும் அல்லது உங்கள் இனத்தவர்களையும் விடுவிக்க மட்டுமே இந்த பொதுமன்னிப்பு வழங்கப்படுகிற மோசமான நிலமைகாணப்படுகிறது.

அதே போல, நீங்கள் சிறைச்சாலை மறுசீரமைபுக்கென ஒரு இராஜாங்க அமைச்சரை வைத்திருக்கிறீர்கள். சிறைக்கைதிகள், குற்றவாளிகளோ அல்லது குற்றம் சுமத்தப்பட்ட



Gajan MP.indd 53 03.11.2024 22:23:45

சந்தேக நபர்களோ என்பதற்கு அப்பால், அவர்கள் முற்று முழுதாக அரசின் பாதுகாப்பில் அரசின் கட்டுப்பாட்டில் இருப்பவர்கள். அவர்களை பராமரிப்பதற்கென ஒரு தனியான அமைச்சு இந்நாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

ஆனால் அந்த குறித்த சிறைச்சலை மறுசீரமைப்பு சிறைக்கைதிகள் நல்வாழ்வு அமைச்சர் சிறைச்சாலைகளுக்குள் தன்னிச்சையாக நுழைந்து சிறைக் கைதிகளை அச்சுறுத்தி இருந்தார். அதனையடுத்து அந்த இராஜாங்க அமைச்சு தனது குற்றத்தை ஒப்புக்கொண்டு குறித்த அமைச்சுப் பதவியிலிருந்து இராஜினாமா செய்திருப்பதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்திருந்தது.

ஆனால் தனது அமைச்சுப் பதவியைப் பாவித்து இத்தகைய குற்றத்தை இழைத்தமையை ஒப்புக்கொண்ட பின்னரும் குறித்த இராஜாங்க அமைச்சர் இந்த அரசில் ஏனைய துறைகளுக்கான இராஜாங்க அமைச்சராக தொடர்ந்தும் இருக்கிறார். அதுமட்டுமல்லாது, இனறு நீதித்துறை குறித்து இந்த சபை விவாதித்துக் கொண்டிருக்கின்ற, இந்த சமயத்திலே குற்றம் இழைத்த குறித்த இராஜாங்க அமைச்சர் திமிருடன் இந்த சபைக்கு வந்ததோடல்லாது நீதித்துறைக்குப் பொறுப்பான அமைச்சருக்கு அருகிலேயே உட்கார்ந்துமிருந்தார். அது இந்த நாட்டின் நீதித்துறையின் நிலைமையை தெளிவாக படம் பிடித்து காட்டுகிறது. குற்றம் பகிரங்கமாக உறுதிப்படுத்தபட்ட குற்றவளிகள் இன்று வெளியே விடப்பட்டு இருக்கிறார்கள்.

அனால் இந்த நாட்டில் நீங்கள் கொண்டு வந்த சட்டங்கள் மூலம் கூட குற்றஙக்ள் உறுதிப்படுத்தப்பட முடியாதவர்கள், பயங்கரவாத தடை சட்ட சந்தேக நபர்கள் இன்று நீண்டகாலமாக சிறைகளுக்குள்ளே தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இந்த பயங்கவாத தடைச் சட்டம் சர்வதேச நியமங்களுக்கேற்ப மாற்றி உருவாக்கப்பட்டால் கூட பயங்கரவாதத் தடைசட்டத்தின் கீழ், இங்கு ஒரு கைதியையும், சந்தேகநபராகக்கூட தடுத்துவைக்கபட்டிருக்க முடியாது. அனைவருமே விடுதலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

நீங்கள் உருவாக்கிய சட்டத்தின் மூலமே குற்றவாளிகளாக இனம் காணப்படாதவர்கள் உள்ளே இருக்கின்றார்கள், ஆனால் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டு இந்த சபைக்குள்ளே வருவதற்கே அருகதையற்ற குற்றாவாளிகள் இங்கே வந்திருக்கிறார்கள்! இது தான் இந்த நாட்டின் நீதியின் நிலமை. இதை நீதித்துறை அமைச்சரும் நன்கு அறிவார்.

அடுத்து, இந்த நாட்டிலே கைதிகளை பராமரிப்பதற்கென 10 முகாம்களும், அதில் இரண்டு திறந்த வெளி முகாம்களும், இளைஞர்களுக்கான சீர்திருத்தப் பள்ளிகளும் இருக்கின்றன. ஆனால் இவற்றில் ஒன்று கூட வடக்கு கிழக்கில் இல்லை.

நான் அண்மையில் ஓய்வுபெற்ற சில தமிழ் நீதிபதிகளுடன் நீதித்துறை குறித்த அவர்களின் கரிசனைகள் கவலைகள் குறித்து சில தெளிவுபடுத்தல்களை பெற்றுக்கொள்வதற்காக அவர்களுடன் உரையாடியிருந்தேன். திருகோணமலையில் ஆரம்பகாலத்திலிருந்து, ஒரு நீதிவான் நீதிமன்று மட்டுமே இருந்தது, பின்னர் அது இரண்டாக அதிகரிக்கப்பட்டது. இரண்டாவதாக கொண்டுவரப்பட்ட நீதிமன்று சிங்களத்தில் மட்டும் இயங்குகின்ற ஒரு நீதிமன்றம். அப்பகுதியில் சிறிதளவு சிங்களவர்கள் வாழ்கின்றனர் அந்த சிங்கள நீதிமன்று அங்கு தேவையென நியாயப்படுத்தப்பட்டது.



Gajan MP.indd 54 03.11.2024 22:23:45

அது போலவே வடக்கு கிழக்கு தமிழர் பகுதியில் அமைந்திருப்பதால் தமிழில் இயங்கி வந்த கந்தளாய் நீதிமன்று, இப்போது சிங்கள நீதிமன்றாக இயங்குகிறது. அங்கு இருக்கின்ற அனைத்து பதிவுகளும் சிங்கள மொழியிலேயே மேற்கொள்ளப்படுகிறது. கந்தளாயில் சிங்களவர்கள் கணிசமான எண்ணிக்கையில் வாழ்வதால் அது சிங்கள மொழியில் இயங்குவதாக காரணம் கூறப்பட்டது. காலங்காலமாக அரச குடியேற்றத் திட்டங்கள் மூலம் திட்டமிட்டுக் குடியேற்றப்பட்ட சிங்கள மக்களுக்காக அந்த நீதிமனறு தமிழ் மொழியில் இருந்து சிங்கள மொழிக்கையாளுகைக்கு மாற்றப்பட்டது.

ஆனால் கொழும்பில் உள்ள நீதிமன்றுகளில் அரைவாசிக்கும் மேற்பட்ட வழக்குகள் தமிழர்கள் சம்பந்தப்பட்டவையே. ஆனால் கொழும்பு நீதிமன்ற நடைமுறைகள் பதிவுகள் உட்பட அனைத்தையுமே சிங்களத்திலேயே நடைபெறுகின்றது. கொழும்பு, கல்கிசை மட்டுமல்ல, நுவரெலியா அவிசாவளை, ஹட்டன், வலப்பனை போன்ற இடங்களில் அநேகமாக முழுவதுமே தமிழர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் கூட நீதிமன்ற நடைமுறைகள் தனிச்சிங்களத்தில் மட்டுமே நடைபெறுகின்றது. ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு.

தமிழர்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கில் உருவாக்கப்பட்டுள்ள நீதிமன்ற நடைமுறைகள் தமிழில் நடைபெறவேண்டியதாக இருக்கையில், வடக்கு கிழக்கில் குடியேறியுள்ள சிங்களவர்களின் வசதிக்காக சிங்கள் மொழி மூல நீதிமன்றங்களை உருவாக்கி இருக்கிறீர்கள். அப்படியாயின் அதே நியாப்படுகளின் அடிப்படையில் தெற்கில் தமிழர்கள் வாழும் பகுதிகளில் தமிழர்களின் வசதிக்காக ஏன் தமிழ் மொழி மூல. நீதிமன்றுகளை நீங்கள் உருவாக்கவில்லை? ஆனால் அப்படிச் செய்ய மாட்டீர்கள். ஏனெனில் இதன் பின்னால் உங்களுக்கு ஒரு நீண்டகால திட்டம் இருக்கிறது, அதன் அடிப்படையிலேயே நீங்கள் இவ்வாறாக செயற்படுகின்றீர்கள்.

வடக்கு கிழக்கில் இருக்கும் நீதிமன்றுகளில் திட்டமிட்டப்பட்ட வகையில் சிங்களவர்கள் பணிக்கு அமர்த்தப்படுகிறார்கள். வவுனியா நீதிமன்றத்தில் நீதிமன்ற உத்தியோகத்தர்கள், பணியாளர்களாக சிங்களவர்களே பெருமளவில், நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஆனால் அங்கிருக்கும் நீதிபதி தமிழ் மொழி பேசுபவர், ஆனால் பெரும்பாலான நீதிமன்ற, உத்தியோகத்தர்கள் சிங்களம் பேசுபவர்களாக இருப்பதால், நீதிமன்ற குறிப்புகளையும் தீர்ப்புகளை சிங்கள மொழியிலும் எழுதுமாறு அந்த தமிழ் பேசும் நீதிபதி கேட்கபடுகிறார்.

இது ஒரு திட்டமிடப்பட்ட முறையில் நடைபெறுகின்ற செயற்பாடு. இங்கு, நீதிக்கு பொறுப்பான அமைச்சே நீதியற்ற முறையில் செயற்படுகிறது. இவற்றையெல்லாம் எப்போதாவது திருத்தியமைக்க முடியுமென்றால் அது தனிப்பட்ட ரீதியில், அலி சப்ரி போன்றவர்களால் தான் முடியுமே தவிர அரச இயந்திரத்தின் மூலம் அரச அமைச்சு மூலம் ஒருபோதும் திருத்த முடியாது.

ஏனெனில் இது திட்டமிடப்பட்ட ஒரு செயல்முறை.

அரச நீதி சேவை ஆணைக்குழுவானது வடக்கு கிழக்குக்கூட, அனைத்து சுற்றறிக்கைகளையுமே சிங்கள மொழியிலேயே அனுப்புகிறது. இப்படியாக நீதித் துறையனது வெளிப்படையாகவே இரட்டை நிலைப்பாடு எடுத்து செயற்படுகின்றமை மிக தெளிவானது.

நன்றி



Gajan MP.indd 55 03.11.2024 22:23:45

# இனவாதத்தை கைவிட்டு இலங்கை ஆகக்குறைந்தது இரு தேசங்களை கொண்ட நாடு என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள்.

22.03.2022 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

இங்கு பிரேரிக்கப்படும் சட்ட மாற்றங்கள் நடைமுறையில் இருக்கும் பயங்கரவாதத் தடைச் சட்டமூலத்தில் எவ்வகையான முன்னேற்றத்தை ஏற்படுத்தும் என வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ்தெரிவித்த கருத்துகளிலிருந்து எனது உரையை ஆரம்பிக்கிறேன்.

இரண்டு முக்கிய விடயங்களைப் பற்றி வெளிவிவகார அமைச்சர் குறிப்பிட்டார்.

ஒன்று அன்றாடம் நடத்தப்படும் வழக்குகள், மற்றையது கைதிகள் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைச்சாலைகளுக்கும், தடுப்புக்காவல் நிலையங்களுக்கும் நீதிபதிகள் நேரிற் சென்று பார்வையிடுதல் பற்றியது.

நீதிபதிகள் நேரில் சென்றுபார்வையிடும்போது, கைதிகள் தாக்கப்பட்டிருப்பதற்கான அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் சட்ட மருத்துவ அதிகாரிகளை பரிசீலனை செய்யுமாறு கோரமுடியும். தாக்குதலுக்கு உள்ளானமை உறுதிப்படுத்தப்பட்டால் மேற்கொண்டு செய்யப்படவேண்டிய நடவடிக்கைகள் பரிந்துரைக்கப்பட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

இவ்விரு திருத்தங்களினாலும் காத்திரமான முன்னேற்றம் ஏற்படும் எனவும், கைது செய்யப்பட்டவர்கள் தடுத்துவைக்கப்படும் காலம் கணிசமாகக் குறைக்கப்படும், சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுவதனையும் ஏதொவொரு வகையில் தடுக்கமுடியும் எனவும் தெரிவித்தார்.

இவ்விடயத்தை முழுமையாகப் பரிசீலனை செய்யும்போது இம்மாற்றங்கள் உண்மையில் நடைமுறைச்சாத்தியமானவையா எனப் பார்க்கப்பட வேண்டும்.



Gajan MP.indd 56 03.11.2024 22:23:45

தற்போது நடைமுறையில் உள்ள சட்டங்களைப் பார்ப்போம். உதாரணத்திற்கு, அடிப்படை மனிதவுரிமை மீறல் வழக்குகள் ஒரு மாதகாலத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டும் அவ்வழக்குகள் ஒரு வருடகாலத்திற்குள் விசாரிக்கப்பட்டு தீர்ப்பு வழங்கப்படவேண்டும் என அரசியல் யாப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறு நடைபெறுவதில்லை. குறித்த வழக்கு முழு நாட்டினதும் கவனத்திற்கு உள்ளானதாக அமைந்திராதவிடத்து இவ் வழக்குகள் பல ஆண்டுகணக்காக இழுபட்டு செல்கின்றன.

இப்போதுள்ள சட்டங்களின்படி நீதிபதிகள் காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று பார்வையிட முடியும் ஆனால் அவ்வாறு நடைபெறுவதில்லை. இவ்வாறு நடந்துகொள்வதற்கு அவர்களுக்கு நேரம் இருப்பதில்லை. அவ்வாறு நடந்துகொண்டாற்கூட, இப்போது நடைமுறையில் உள்ள முறைமை நேர்மையானதாக உள்ளதா என்பதனையும் பார்க்கவேண்டும்.

சிறிலங்கா நீதித்துறையின் நேர்மைத்தன்மை குறித்து ஐநா மனித உரிமை பேரவையின் முன்னாள் ஆணையாளர் தெரிவித்த கருத்துகளை இங்கு மேற்கோள்காட்ட விரும்புகிறேன். சிறிலஙகாவின் குற்றங்கள் தொடர்பாக ஐ.நா. மனிதவுரிமைகள் பேரவை ஒரு விசாரணையினை நடத்திவெளியிட்ட அறிக்கையினை மனித உரிமை பேரவையில் சமர்ப்பித்த அதன் முன்னாள் உயர் ஸ்தானிகர் இளவரசர் செயிட், ஒரு ஊடகச்சந்திப்பில் சிறிலங்கா நீதித்துறை மற்றும் உள்நாட்டு குற்றவியல் விசாரணைப்பொறிமுறை ஊழல்கள் நிரம்பியதாக இருப்பதாக கூறி அதை நிராகரித்திருந்தார்.

இன முரண்பாடுகளினால் உள்நாட்டு நீதிப்பொறிமுறை, சட்டம் ஒழுங்கு என்பவை இனப்பாகுபாடு கொண்டதாகவும், பாரியளவில் ஊழல்கள் நிறைந்தாகக் காணப்படுவதாக அவர் தெரிவித்திருந்தார். நீதித்துறையில் இனத்துவ அடிப்படையில் சார்பாக நடந்து கொள்ளுதல் ஊழல்கள் நிரம்பியதாகவும் இருப்பதால் உள்ளகப் பொறிமுறை நம்பகத்தன்மையுடையதாக இருக்காது எனவும்குறிப்பிட்டார். இவ்வாறான காரணங்களால் அவர் இரு கலப்பு நீதிமன்ற விசாரணையினை பிரேரித்து இருந்தார்.

இங்கு இந்த பயங்கரவாத தடைசட்டம் மற்றும் அது குறித்த திருத்தங்கள் குறித்து பேசும் போது பலரும் தேசியபாதுகாப்பு குறித்து பேசியிருந்தனர். இங்கு பேசும்போது தேசிய பாதுகாப்பு என எதிர்க்கட்சி உறுப்பினர்களும் குறிப்பிட்டிருனர்.

– உண்மையில் தேசிய பாதுகாப்பு என நீங்கள் கருதுவது எதனை ?

– தேசிய பாதுகாப்பு என்பது , சிங்கள இனத்தின் பாதுகாப்பை மட்டுமா குறிக்கிறது ?

– இங்கு நாடு என நீங்கள் கருதுவது ஒரு இனத்தை மட்டும் தான் குறிக்கிறதா?

– அல்லது இந்த நாட்டின் அனைத்து குடிமக்களையும் குறிக்கின்றதா?

அனைத்து இன குடிமக்களையும் உள்ளீர்த்து அவர்களுக்குமான பாதுகாப்பு என கருதினால், அது ஒருபோதும் பெரும்பான்மைவாத (majoritarian) கருத்தியலில் இருந்து உருவாக முடியாது .

உதாரணத்துக்கு இந்த அவையில் பெரும்பான்மையானவர்கள் ஒன்றை கேட்கிறார்கள் என்பதற்காக அது முழுநாட்டுக்கும் உரித்தானது என கருதவே முடியாது. துரதிர்ஸ்டவசமாக இங்கு இருக்கின்ற எதிர்க்கட்சியினரும் அதே எண்ணப்பாங்கிலேயே கருத்துரைத்திருக்கிறார்கள்.



Gajan MP.indd 57 03.11.2024 22:23:45

இங்கு இந்த நாடு என கூறும் போது, இங்கு பல்லின அடையாளங்களை வெளிப்படுத்துபவர்கள் இருக்கிறார்கள் என்பதை ஏற்பதில் இருந்து ஆரம்பிக்க வேண்டும். எம்மை பொறுத்தவரை இந்த நாடு ஆகக்குறைந்தது இரு தேசங்களை கொண்ட பல்தேச நாடாகும். எனவே , ஒரு நாட்டின் கருத்து என வரும்போது , ஒவ்வொரு இனத்தினரினதும் எண்ணங்களும் எதிர்பார்ப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

இந்த நாட்டில் அரசுக்கு எதிராக போராட்டம் நடந்தது என்பதை நாம் அனைவரும் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அந்த போராட்டம் ஏன் நடந்தது என பாருங்கள். இந்த அரசு, தொடர்ச்சியாக ஒரு இனக்குழுமத்தை மட்டும் கருத்தில் கொண்டு மற்றைய சமூகத்தை ஏற்றுக்கொள்ள மறுத்து ஒதுக்கி ஒடுக்கியதாலேயே இங்கு போராட்டம் உருவானது.

இந்த நாட்டை நாம் எப்படி உருவாக்கிபார்க்க விரும்புகிறோம் என்பதை வடக்கு கிழக்கின் மக்கள், ஜனநாயக ஆணையாக தொடர்ச்சியாகவும் மிக தெளிவாகவும் வெளிப்படுத்தி வந்திருக்கிறார்கள்.

அவை ஆயுதத்துக்கோ பிரிவினைக்கோ ஆன கோரிக்கைகளாக இருக்கவில்லை. மாறாக பிரிவினைக்கும் ஆயுதத்துக்கும் எதிரான ஆணைகளாகவே முன்பு இருந்திருந்தது. இந்த அவைக்கு வந்திருந்த தமிழ் பிரதிநிதிகள், வன்முறையையும் பிரிவினையையும் நிராகரித்தே குரல்கொடுத்திருந்தார்கள்.

அவர்கள் கேட்டதெல்லாம், எமது விருப்புகளையும் செவிமடுங்கள், (எம்மையும் இந்த நாட்டின் சம பிரஜைகளாக மதித்து) எம்மையும் உள்வாங்குங்கள் என்பதே ஆகும்.

ஆனால் அங்குதான் நீங்கள் தவறிழைத்தீர்கள்.

அன்று மட்டும் அல்ல, இன்று வரைக்கும் அதே தவறையே தொடர்ந்தும் இழைத்துக்கொண்டு இருக்கிறீர்கள்.

இந்த நாடு பல தேசங்கள் உடைய நாடென்றும் இங்கு எமக்கு சமஷ்டி முறையான ஆட்சியே தேவை எனவும் மிகதெளிவானதும் மிக உறுதியானதுமான ஜனநாயக ஆணையை மீளவும் மீளவும் எமது மக்கள் அளித்துவருகின்றபோதும் உண்மையில் இந்த அரசாங்கள் மக்களிடம் பெற்ற ஆணையை விட எமது மக்கள் அளித்த ஆணை ஜனநாயக ரீதியில் வலுவானது.

அதை மீளவும் மீளவும் நீங்கள் கருத்திலெடுக்காது நிராகக்ரிக்கின்ற போது, எமது பிரதிநிதிகள் இங்கு வந்து அந்த ஆணையை பற்றி பேசுவது முட்டுச்சுவரில் தலையை மோதுவதாகவே இருக்கின்ற போது, எம்மை ஒதுக்கி நடப்பதையே தொடர்ந்தும் உங்கள் செல்நெறியாக கொண்டிருக்கின்ற போது எமது மக்கள்வேறு என்ன செய்ய முடியும்?

எமது தாய்நிலத்தில் இருக்கும் மக்கள் தொடர்ச்சியாக உரிமை மறுக்கப்படுகின்ற போது, அவர்களது தாய்நிலம் அவர்களிடம் இருந்து பறிக்கப்படுகின்ற போது, அவர்களது சமய வழிபாட்டிடங்கள் அபகரிக்கப்படுகின்ற போது, காலம் காலமாக உழுது பயிரிட்ட நிலத்தில் இருந்து போரினால் வெளியேறி இப்போது மீள வரும்போது, அவை காட்டு நிலமெனவும் அதில் பயிரிடமுடியாதெனவும் மறுதலித்து, அதே நேரம் வேறு பிரதேசத்தில் இருந்து வருகின்ற ஏனைய இனத்தவருக்கு நிலத்தில் வளர்ந்திருக்கும் மரங்களை வெட்டி உழுது



Gajan MP.indd 58 03.11.2024 22:23:45

பயிரிட அனுமதிக்கும் போது அந்த மக்கள் வேறு என்னதான் செய்ய முடியும்? ஆனால் இது தான் இன்றும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கிறது.

பிரதமர் யாழ்ப்பாணத்திற்குச் சென்றபோது பாரிய எதிர்ப்பைச் சந்திக்க நேர்ந்தது. அங்கு வன்முறையற்ற வகையில் எதிர்ப்பு காட்டப்பட்டது. உங்களது கவனத்தை ஈர்ப்பதற்காக இவ்வகையில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் நிர்மூலமாக்கப்பட்டபோதிலும், அவர்களது உறவினர்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளபோதிலும் அவர்கள் தங்கள் எதிர்ப்பினைக் காட்டத்தவறவில்லை. அவர்கள் ஜனநாயக முறையில், வன்முறையற்ற வகையில் தமது எதிர்ப்பினைபதிவு செய்துள்ளார்கள். அவர்கள் எவ்வளவு காலத்திற்கு இவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?

இந்த அரசு, இந்த நாடு ஒரு முழுமையான கட்டமைப்பு மாற்றத்துக்கு உள்படுவதன் மூலம் தான், இந்த நாடு மீண்டெழ முடியும்.

இந்த நாடு இன்று எதிர்நோக்கியிருக்கிற கடுமையான நெருக்கடிகளில் இருந்து மீளெழ வேண்டுமாயின் உங்கள் செல்நெறிகளையும் வழிமுறைகளையும் ஒருமுறை மீள சிந்தியுங்கள், ஒரு கட்டமைப்பு மாற்றத்துக்குத் தயாராகுங்கள். அனைவரையும் சமமாக இணைத்து ஒன்று பட்டு வாழ கூடிய ஒரு கட்டமைப்பை உருவாக்குங்கள்.

இந்த நாட்டின் வருமானத்தை விட, எமது புலம்பெயர் தமிழர்கள் அனைவரினதும் உழைப்பு வருமானமும் பலமடங்கு பெரியது.

நீங்கள் தமிழர்களை அங்கீகரித்து , தமிழர்கள் தனியான தேசம் என்பதை அங்கீகரித்து ஒரு கட்டமைப்புமாற்றத்துக்கு தயாரானால், எமது மக்களின் முதலீடுகள் இந்த நாட்டை பொருளாதார ரீதியில் மீட்டெடுக்கும்

– இதை உணர்ந்து செயல்பட தயாரகுங்கள்.

– இந்த நாடு ஒரு தனி இனத்துக்கானது அல்ல,

இந்த நாட்டின் பன்மைத்துவத்தை மதித்து ஏற்றுக்கொள்ளுங்கள், அதில் பெருமையடையுங்கள், அதன் மூலமே நாம், இணைந்து வாழ முடியும்.

என் சக சிங்கள மக்களே, உங்கள் தலைவர்கள் , உங்களுக்கு பொய்களையே சொல்லி வந்திருக்கிறார்கள் , இன்னமும் அதையே செய்கிறார்கள். குறிப்பாக தமிழர்கள் பற்றி உங்களுக்கு பொய்களையே ஊட்டி வந்திருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

இந்த நாடு வங்குரோத்தாக போவதற்கு உங்கள் தலைவர்களின் இந்த போக்கே காரணம் என்பதை புரிந்துகொள்ளுங்கள், அனைவரையும் இணைத்து கௌரவமாக சம உரிமை கொடுத்து வாழக்கூடிய கட்டமைப்பை உருவாக்குவதே இந்த நாடு முன்னே செல்வதற்கு இருக்கின்ற ஒரே வழி என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

நன்றி



Gajan MP.indd 59 03.11.2024 22:23:45

# ஜனாதிபதி பதவிவிலகவேண்டும். அதனைத் தொடர்ந்து இந்த அராசங்கம் பதவி விலகவேண்டும்.

06.04.2022 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

நாட்டின் அரச கட்டமைப்மைப்பை மாற்றுவதற்கு கிடைத்துள்ள பொன்னான வாய்ப்பு இன்றிருக்கிற நெருக்கடி, அரசாங்கத்தின் மீதுள்ளது போன்று தோன்றினாலும், உண்மையில் இலங்கையின் ஆட்சி அதிகார மையமே நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது.

வரும் நாட்களில் இந்த அரசாங்கம் பதவி விலகுவதாக முடிவெடுத்தாலும், புதிதாக ஆட்சிக்கு வருபவர்கள், அவர்கள் எந்தக் கட்சியினராக இருப்பினும், இப்போதுள்ள நெருக்கடியின் கூறுகளைப் பொறுக்கவேண்டிய நிர்ப்பந்தமிருக்கும். ஆகவேதான் இது அரசகட்டமைப்பின் நெருக்கடி என்று கூறவேண்டியுள்ளது.

ஆகவே இன்றைக்கு நாடாளுமன்றத்துக்கு வெளியில், வீதிகளில் வெளியிடப்படும் எதிர்ப்பு சாதாரண கிராமங்களிலும், பெரும் நகரங்களிலும், பெரும்பாலும் தெற்கிலும், ஏன் வடக்கு கிழக்கிலும் கூட மக்கள் தங்களை எதிர்ப்பை வெளியிட்டு வருகிறார்கள்.

பிரதானமாக இந்த அரசாங்கம் ஆட்சிசெய்ய வேண்டிய அதன் கடமையில் தோல்வியடைந்திருப்பதன் பிரதிபலிப்பாகவே இந்த நிலமை உருவாகியிருக்கிறது. ஆட்சிசெய்வதற்கான திறமையில்லாதமையாலேயே இந்த அரசாங்கம் தோல்வியடைந்திருக்கிறது.

அரசாங்கம் தவறுகளைச் செய்கிறபோது, அதுவும் அத்தவறுகள் வெளிப்படையாகத் தெரிகிறபோது, என்ன மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்பதனை எதிர்க்கட்சிகள் தொடர்ச்சியாக சுட்டிக்காட்டியிருக்கின்றன. ஆனால் இந்த அரசாங்கம் அவற்றை கவனத்தில் எடுப்பதில்லை என முடிவெடுத்திருந்தது. இச்சபையில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைக் கொண்டிருப்பதனாலும், ஜனாதிபதி 1.3 மில்லியன் வாக்குகள்



Gajan MP.indd 60 03.11.2024 22:23:45

அதிகமாகப் பெற்று வெற்றிபெற்றமையினாலும் தாங்கள் எதனையும் செய்யலாம். அவற்றைச் செய்துவிட்டு தப்பிவிடலாம் என அவர்கள் எண்ணினார்கள். இந்த வாக்கு பலத்தைவைத்து எதனையும் செய்யமுடியும் என அவர்கள் எண்ணியதால், இலங்கை அரசகட்டமைப்பானது வரலாற்றில் எப்போதும் இல்லாதவகையில் நெருக்கடிக்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

ஆனால் அவர்கள் தோல்வியடைந்து விட்டார்கள். இத்தோல்வியை வெகுமக்கள் விளங்கிக்கொண்டுள்ளார்கள்.

ஆதலால்தான் பெருமளவில் வாக்களித்து, கோத்தபாய இராஜபக்சவை வெற்றிபெறச் செய்த மக்கள், இந்த நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றுக்கொடுத்த அவர்கள் இன்று வேறு வழிவகை தெரியாமல் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளார்கள். அதன் மூலம் இந்த அரசாங்கத்திற்கு வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள். அதனை இந்த அரசாங்கம் விளங்கிக் கொள்ள வேண்டும் எனவும் எதிர்பார்க்கிறார்கள்.

ஜனநாயக முறையில் ஒவ்வொரு நான்கு அல்லது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதன் மூலம் அரசாங்கத்திற்கு ஆணை வழங்குகிறார்கள். இலங்கையில் இது ஐந்து வருடங்கள். குறித்த காலத்திற்கு முன்னர் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெறுவதாக அறிவிப்பதற்கு தெருவுக்கு இறங்கிப் போராடுவதுதான் அவர்களுக்கிருக்கிற ஒரே வழிமுறை.

ஆகவே பொறுப்புக்கூறல் எந்த வடிவத்திலாவது நிலைநாட்டப்பட வேண்டுமாயின் ஜனாதிபதி பதவி விலகவேண்டும். அதனைத் தொடர்ந்து இந்த அராசங்கம் பதவி விலகவேண்டும். இவை கேள்விக்கிடமில்லாதவை. மக்களின் போராட்டங்களை தணித்து, எதிர்காலத்தில் இவ்வாறு நடைபெறுவதனைத் தவிர்க்க வேண்டுமாயின், இந்த அரசாங்கம் இச்செய்தியை உடனடியாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

ஜனாதிபதி கோத்தாபாய இராஜபக்ச பதவி விலக வேண்டியது மிகவும் அவசியமானது. அதுபோன்று இந்த அரசாங்கமும் விலக வேண்டியது அவசியமானது. ஆனால் ஒரு இடைவெளியிருக்கிறது. கெடுவாய்ப்பாக நாங்கள் இதில் போதாமையை உணர்கிறோம். இப்போதுள்ள நெருக்கடிக்கு அரசியல்யாப்பு என்று நாங்கள் அறிகிற விதிகளில் இதற்குத் தீர்வு எதுவுமில்லை. இந்த அவையின் இருக்கும் விடயங்கள், அவைக்கு வெளியில் உள்ள நிலவரத்தை பிரதிபலிக்கவில்லை. இந்த அவையில் உள்ள விடயங்களை வெளியிலுள்ளவை பிரதிபலிக்கவில்லை. ஏனெனில் இரண்டு வருடகாலத்திற்கு முன்னர் அமைக்கப்பட்ட இந்த அவை (அரசாங்கம்) காலத்திற்கு பிந்தியதாக மாறிவிட்டது. இந்த அவையிலுள்ளவர்களுக்கு வாக்களித்த மக்கள் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற்றுள்ளார்கள்.

ஜனாதிபதி பதவி விலகுவாரேயாயின் இந்த அவையிலிருந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்க வேண்டும். ஆனால் நான் ஏற்கனவே கூறியது போன்று இந்த அவை காலவதியாகிவிட்டது. நாளைக்குத் தேர்தல் நடைபெறுமாயின், இன்றைக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மையைக் கொண்ட இந்த அரசாங்கம் வெற்றிபெறுமென கனவுகூடக் காணமுடியாது. ஆகவே ஜனாதிபதி கோத்தாபாய இராஜபக்ச பதவி விலகினால் அவருக்குப் பதிலாக இந்த அவையிலிருந்து ஒருவரை ஜனாதிபதியாக நியமிக்கவேண்டும் என யாரும் எதிர்பார்க்க முடியாது.



Gajan MP.indd 61 03.11.2024 22:23:45

ஆகவே சில இடைக்கால நகர்வுகளைச் செய்ய வேண்டும்.

முதலில், இன்றைக்கு ஆட்சி செய்ய முடியாத நிலைக்க இட்டுச் சென்றுள்ள, மக்களால் சுட்டிக்காட்டப்படும் உடனடிப் பிரச்சினைகளுக்கு ஏதாவது வகையில் பரிகாரம் காணவேண்டும். தான் உடனடியாகப் பதவி விலகுவார் என்பதனை உத்தராவதப்படுத்தும் வகையில் ஜனாதிபதி அறிவிப்பினை மேற்காள்ளவேண்டும்.

இரண்டாவதாக, இந்த அரசாங்கமும் பதவி விலகுவதாக உறுதியளிக்க வேண்டும்.

மூன்றாவதாக, அடுத்த மூன்று மாதத்திற்குள் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதற்கான திகதி ஒன்றை தேர்ந்தெடுக்க வேண்டும்.

இம்மூன்று உத்தரவாதங்களும் வழங்கப்படுமாயின், அடுத்த மூன்று மாதங்களில் என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளவது என்பதனை நாங்கள் அமர்ந்திருந்து சிந்திக்கலாம்.

உண்மை என்னவென்றால், இப்போதுள்ள சூழ்நிலையில் அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்க்கட்சிகள்கூட விரும்பவில்லை. அரசாங்கத்தை அமைப்பதற்குத் தேவையான எண்ணிக்கையான உறுப்பினர்கள் அவர்களிடமிருப்பதாக அவர்கள் உணரவில்லை. அதுபோன்று உங்களிடம் நாற்பது வரையிடலான உறுப்பினர்கள் இருக்கிறார்கள். நேற்றைய தினம் அவர்கள் எழுந்து நின்று தாங்கள் பக்கச்சார்பற்று இயங்கப்போவதாக அறிவித்திருந்தனர். ஆனால் அவர்கள் கடந்த காலங்களில் எல்லாவிடயங்களிலும் ஜனாதிபதியையும், இந்த அரசாங்கத்தையும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரித்தவர்கள். இன்றைக்கு மக்கள் வீதிக்கிறங்கிப் போராடுகிற நிலையில் தங்களை பக்கச்சார்பற்றவர்களாகக் காட்டுவதற்கு அவர்கள் முனைகிறார்கள். இதனைக் கணக்கில் எடுக்கவேண்டியதில்லை. ஆகவே எதிர்கட்சியிலிருக்கும் சரியாகச் சிந்திக்கக் கூடிய யாரும் இவர்களுடன் இணைந்து அரசாங்கத்தை அமைக்க முடியும் என நம்ப மாட்டார்கள்.

இறுதியாக, இன்றைக்கு எதிர்ப்புப் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் பொதுமக்களிடம் இந்த வேண்டுகோளை விடுக்கிறேன். இந்த நாட்டின் வரலாற்றில் முதற்தடவையாக, பொருண்மிய பிரச்சனைகளுக்காக மட்டுமன்றி, இந்த அரசாங்கமும், அரச கட்டமைப்பும் எவ்வாறு நடந்துகொள்கின்றன என்பவற்றுக்கு எதிராகவும் போராடுகிறார்கள்.

முதற்தடவையாக, இராணுவபலமும், இந்த அரசகட்டமைப்பில் பெரும்பலமும் அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளன. இது எவ்வளவு ஆபத்தானது என்பதனையும், அவர்கள் குரலற்றவர்களாக ஆக்கப்பட்டுள்ளார்கள் என்பதனையும் அவர்கள் உணர்ந்துள்ளார்கள்.

ஆட்சிக் கட்டமைப்பில் உள்ள அரசியல்வாதிகளை தங்களைப் பற்றியே சிந்திக்கிறார்கள், இவ்வரசியல்வாதிகள் உண்மைக்கு புறம்பான விடயங்களை தெரிவித்து வருகிறார்கள். இது கடந்த ஒரு சில வருடங்களாக அல்ல பல பத்துவருடங்களாக நடைபெறுகிறது அவர்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை உணர்ந்து கொள்வார்கள்.

வடக்கு கிழக்கில் அவர்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக தமிழ் மக்கள் 74 வருடங்களாக கொள்ளையடிக்கப்பட்டுள்ளார்கள், அவர்கள் மட்டுமல்ல சிங்கள மக்களும் கொள்ளையடிக்கப்பட்டுள்ளார்கள் என்பதனை உணர்தே அவர்கள் வீதிக்கு வந்திருக்கிறார்கள்.



Gajan MP.indd 62 03.11.2024 22:23:46

இது இந்த நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான பொன்னான சந்தர்ப்பம். இலங்கை நாடானது இந்தத்தீவிலுள்ள எல்லா மக்கள் குழுமங்களையும் பிரதிதித்துப்படுத்துவதான ஒரு புதிய ஆரம்பத்திற்கான நல்ல சந்தர்ப்பம். சிங்களம் பேசும் தேசமாக, தமிழ்பேசும் தேசமாக இலங்கையில் மாறுப்பட்ட அடையாளங்களைக் கொண்டாடுவதற்கான நல்ல சந்தர்ப்பம். இந்த உண்மைநிலமையை கவனத்திலெடுக்கத் தவறக்கூடாது. வரலாற்றில் முதற்தடைவை இத்தகைய மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தமிழ்மக்கள் ஆதரவளிக்கத் தயாராகவிருக்கிறார்கள். ஆனால் நீங்கள் எங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை அகற்றுவதற்கு மட்டுமல்ல, கூட்டாட்சி முறையில் தமிழ்பேசும் தேசம், சிங்களம் பேசும் தேசமும் கொண்ட முறைமையை ஏற்படுத்துவதற்கு நீங்கள் இணங்கவேண்டும். ஒற்றையாட்சி முறைமை என்பது காலத்திற்குப்பிந்தியது, நீங்கள் அதனை 74 ஆண்டுகளாக வைத்திருக்கிறீர்கள். விடுதலைப்புலிகளை நீங்கள் அழித்தற்குபின்னரும், கடந்த பன்னிரண்டு வருடங்களாக அதே அரசகட்டமைப்பைத் தொடர்கிறீர்கள். கடவுளின்பேரால் கேட்கிறேன் விழித்தெழுங்கள்.

கூட்டாட்சி முறைமை என்பது பிரிவினைவாதம் எனத் தவறாகக் கூறிவருகிறீர்கள்.

அம்பாந்தோட்டை மாவட்டத்தை மேம்படுத்துவதற்கு அந்த மாவட்டத்தைச் சேர்ந்த இராஜபக்ச குடும்பத்தினர் ஆட்சிக்கு வரவேண்டியுள்ளது. இதுபோன்று நாட்டின் இதரபகுதிகள் மேம்படுத்தப்பட வேண்டாமா? நாட்டின் எல்லாவிடங்களும் மேப்படுத்தப்பட வேண்டுமானால் ஒற்றையாட்சி முறைமை என்ற கருதுகோளை நீங்கள் கைவிடவேண்டும். கூட்டாட்சி முறைமைதான் இதற்கு ஒரே வழி என்பதனை நீங்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

நன்றி



Gajan MP.indd 63 03.11.2024 22:23:46

# இந்த தீவில் தமிழ் பேசும் தேசமும் சிங்களம் பேசும் தேசமும் இருக்கின்றன எனும் யதார்த்தத்தை ஏற்று அதன் அடிப்படையிலான சமஷ்டிக்கட்டமைப்பு ஒன்றை கொண்டுவாருங்கள்.

06-05-2022 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

சர்வதேச நாணய நிதியத்துடனான தமது கலந்துரையாடலின் பின்னர், நிதி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்ட நிதிநிலை தொடர்பான அமைச்சக அறிக்கை தொடர்பாக இன்று விவாதித்துக் கொண்டிருக்கிறோம். அந்த அறிக்கையில் நிதி அமைச்சர் இன்றைய பொருளாதார நெருக்கடிக்கு காரணமாக இருந்திருக்குமென தாம் கருதும் விடயங்களை, தமது அரசாங்கத்தின் தவறான முடிவுகள் உள்ளடங்கலாக, பட்டியலிட முனைந்திருக்கிறார். அத்துடன் நின்றுவிடாது, வழமைபோன்று, இந்த அரசாங்கத்தின் மீதுமுழுப்பொறுப்பையும் சுமத்தாது, தொடர்ச்சியாக ஆட்சிசெய்த முன்னைய அரசாங்கங்கள் மக்களைக் கவருவதற்காக மேற்கொண்ட பல்வேறு தவறான நடவடிக்கைகளும், ஈற்றில் இந்நிலை உருவாவதற்குக் காரணமாக அமைந்துள்ளன எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒருவராலும் மறுதலிக்க முடியாத ஒருவிடயம் ஒன்றுள்ளது. உண்மையில் அதனை நிதி அமைச்சர்கூட ஒப்புக்கொண்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தல் முடிந்த கையோடு பாராளுமன்ற தேர்தல் அறிவிக்கபட்ட காலப்பகுதியில் அந்ததேர்தலை இலக்கு வைத்து அறிவிக்கப்பட்ட வரி நீக்கம் மற்றும் வரிவிலக்கு நடவடிக்கைகளும் இன்றைய பொருளாதார நெருக்கடி நிலை உருவாவதற்கு காரணமாக இருந்தது என்பதனை இவ் அவையில் உள்ள எவராலும் மறுதலிக்க முடியாது.

இந்த நாட்டின் பொருளாதாரம் அடிமட்டத்துக்கு சென்று, கடன் சுமை கழுத்தை நெரிக்குமளவுக்கு சென்றமைக்கு இதுவும் ஒரு காரணமாக அமைந்திருக்கிறது. இவையே, இலங்கைக்கான சர்வதேச சந்தைகளின் கதவுகள் மூடப்பட்டு, கடன்படுதிறன் சுட்டி கீழ் நிலைக்குச் சென்றுள்ளமையும் கடன்கள் மறுக்கப்படும் நிலையை உருவாக்கியுள்ளமையும் இந்த நாட்டை இன்றைய நிலையில் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறது.



Gajan MP.indd 64 03.11.2024 22:23:46

இவ்வாறானநடவடிக்கைகள்இறுதியில்பாரியபொருண்மியநெருக்டியையேற்படுத்துமென, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கட்சி வே றுபாடின்றி எச்சரித்திருந்த நிலையிலும் அவற்றைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தாது இந்த முடிவுகள் எடுக்கப்பட்டு அரசாங்கம் செயற்பட்டமையின் விளைவே, இன்று நாடு எதிர்நோக்கும் இந்தநெருக்கடியாகும்.

இந்நிலையில் கோவிட் நிலவரமும் சேர்ந்துவிட, நாட்டின் பொருளாதாரம் முடங்கல் நிலைக்குச் சென்றது.

எனக்கு நன்கு ஞாபகமிருக்கிறது. ஜனாதிபதி தேர்தலின் பின்னர் பாராளுமன்ற தேர்தல்கள் நடக்கவிருந்த போது, கோவிட் பெருந்தொற்றுக் காரணமாக பின்போடப்பட்டது. அப்போது எதிர்க் கட்சியிலிருந்தவர்கள், வடக்கு கிழக்கிலிருந்து தெரிவானவர்கள் உள்ளடங்கலாக, இவ்வாறான வரிவிலக்கு நடவடிக்கைகள் நாட்டைபெரும் பொருண்மிய இக்கட்டுக்குள் சிக்க வைத்துவிடும் என திரும்பத் திரும்ப எச்சரிக்கை விடுத்திருந்தார்கள். அப்போது நாங்கள் (தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி) நாடாளுமன்ற உறுப்பினர்களாக இங்கு இருக்கவில்லை. ஆனால், இந்த அரசாங்கம், குறிப்பாக ஜனாதிபதி எதிர்தரப்பினரின் ஆலோசனைகளை செவிமடுத்திருக்கவில்லை. ஜனாதிபதித்தேர்தலில் கிடைத்த பெரும்பான்மை அவர்களுக்கு அதிகாரபோதையை ஏற்படுத்தியிருந்தது.

வர்த்தக சமூகத்தினரும் பல முன்னணி பொருளியலாளர்களும் ஜனாதிபதிக்கு இதுகுறித்து பல கடிதங்கள் கூட எழுதியிருந்தார்கள். ஆனால், அவற்றுக்கு பதில்கூட அளிக்கப்பட்டிருக்கவில்லை என்பதை பொறுப்புடன் இங்கு குறிப்பிடவிரும்புகிறேன். இவ்வாறு எவரையும் மதிக்காத திமிர்த்தனமான அணுகுமுறையுடன்தான், ஜனாதிபதி விடயங்களைக் கையாண்டார். அதேவேளை , அவரது அரசாங்கம் ஒரு படி மேலே சென்று ஜனாதிபதி எதைச் செய்தாலும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரவு தெரிவிப்பதையே கடமையாக கொண்டிருந்தது .

இவைதான் யதார்த்தமாக இருக்கின்ற நிலையில் , இந்த கடும் பொருளாதார நெருக்கடிக்கு நேரடியாக முகம்கொடுக்கும் சாதாரண மக்கள், தாம் எத்தகையதொரு தவறை இழைத்து விட்டோம் என இப்போது உணரத்தொடங்கியிருக்கிறார்கள் .

இந்த ஜனாதிபதியினதும் இவ்வரசாங்கத்தினதும் முடிவுகளால் நாடு வங்குரோத்து நிலையை அடைந்திருக்கின்ற இந்த சந்தர்ப்பத்தில், இந்நாட்டின் மக்கள், இனிமேலும் இவ்வரசாங்கம் ஆட்சியில் இருக்கக்கூடாது என கூறுகிறார்கள்.

அதை செவிமடுக்ககூட இந்த ஜனாதிபதியும் அரசங்கமும் தயாராக இல்லாத போது, தமது ஜனநாயக ரீதியான எதிர்ப்பை காட்டுவதற்கு வீதிகளில் இறங்குவதை தவிர இந்த மக்களுக்கு வேறுதெரிவுகள் இருக்கவில்லை.

ஜனநாயக முறையின் படி மக்கள் ஒரு குறித்த காலத்துக்கு ஆட்சிபுரிவதற்கான ஆணையை வழங்கிய நிலையில், தாம் வழங்கிய ஆணை மீறப்பட்டதை உணரும்போது, தாம் மோசடிக்கு உள்ளாக்கப்பட்டிருப்பததை உணரும்போது, மக்களுக்கிருக்கும் ஒரே தெரிவு தாம் வழங்கியஆணையை மீள பெற்றுக்கொள்வது மட்டும்தான். ஆனால் இவ்வாறு தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற்றுக்கொள்வதற்கு சட்டரீதியாக ஏற்பாடுகள்

எதுவும் இல்லாதிருப்பதால், மக்களின் முன் இருக்கும் ஒரே தெரிவு வீதிகளில் இறங்கி தாம் ஆணைவழங்கியவர்களை ஆட்சியில் இருந்து விலகுவதை உறுதிப்படுத்தும்வரை போராடுவது மட்டும் தான்.

வீதிகளில் மக்கள் இறங்கி போராடிக்கொண்டிருக்கின்ற அதே நேரம், நாங்கள் இங்கே பாராளுமன்றத்தில் ஒருநாடகத்தை அரங்கேற்றிக் கொண்டிருகின்றோம். அது என்ன நாடகம்?

யதாத்தம் என்னவெனில் இப்பாராளுமன்றம் காலாவதியாகிவிட்டது. இந்த அவை உண்மையில் நாட்டுமக்களின் பொறுப்புகளை பிரதிபலிக்கவில்லை. ஆனால், தமக்கு நம்பகத்தன்மை இருக்கின்றது எனகாட்டிக்கொள்வதற்காக இங்கு ஒரு நாடகம் அரங்கேற்றப்படுகிறது.

மூன்று நான்கு வாரங்களுக்கு முன்னர்வரை இந்த அரசாங்கதிற்கும் ஜனாதிபதிக்கும் கண்ணை மூடிக்கொண்டு மூர்க்கத்தனமாக ஆதரவு வழங்கிய மிக நெருக்கமான கூட்டாளிகளாக இருந்த சில அரச தரப்பு உறுப்பினர்கள், திடீரென தாம் சுயாதீனமாக இயங்குவதாக அறிவித்து எதிர்த்தரப்பில் வந்து அமர்ந்துகொண்டார்கள்.

சரியாக ஒரு மாதத்திற்கு முன்னதாக இதே அவையில் இந்த சுயாதீன உறுப்பினர்கள் என தம்மைதானே அழைத்துகொள்ளும் இந்த உறுப்பினர்கள் தாம் எதிர்த்தரப்பில் அமரவிருப்பதாக அறிவித்தபோது , இதுஒரு நாடகம் என்பதை நான் அந்த இடத்திலேயே குறிப்பிட்டிருந்தேன் என்பதை ஞாபகப்படுத்த விரும்புகிறேன்.

எனக்கு முன்னர் பேசிய கௌரவ ஜகத் புஷ்பகுமார அவர்கள் இன்றைக்கு எதிர்க்கட்சிகளின் பக்கத்தில் வந்து அமர்ந்திருக்கிறார். ஆனால் அவர் இன்று இங்கு பேசியவையெல்லாம், இந்த அரசாங்கம் தொடர்ந்தும் பதவியில் இருப்பதை உறுதிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.

அவர் என்ன கூறினார் என்பதை பாருங்கள்.

முதல் விடயமாக அவர் கூறியது ஜனாதிபதிக்கெதிராக நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவது அர்த்தம் இல்லையென்றும் அதன்மூலம் ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்ய முடியாதென்றும் கூறினார். ஜனாதிபதியை பதவி நீக்கம் செய்யவேண்டுமாயின், குற்றவியல் பிரேரணை கொண்டுவரப்பட்டு 2.3 பெரும்பானையுடன் நிறைவேற்றப்படவேண்டும், ஆனால் இங்கு எதிர்த்தரப்பிடம் 2.3 பெரும்பான்மை இல்லை, ஆகவே ஜனாதிபதியை பதவி நீக்கம்செய்யும் இந்த முயற்சிகள் எல்லாம் நடைமுறை சாத்தியமற்றவை, மக்களை ஏமாற்றும் முயற்சி எனக் கூறியிருந்தார். இத்தனைக்கும் தான் எதிர்த்தப்பில் இருப்பதாக தன்னை அடையாளப்படுத்திக்கொள்கிறார்.

சரி, அப்படி ஒரு சட்டவலுவுள்ள நம்பிக்கையில்லா தீர்மானத்தை கொண்டுவருவதாயின் அதை அரசங்கத்துக்கெதிராக கொண்டுவர முடியும் .அதற்கு இந்த “எதிர்க்கட்சி“ உறுப்பினர் கூறுகிறார். எஸ்.ஜே.பி. கட்சியின் அடுத்த கட்ட நகர்வு எதுவெனத் தெரியாமல், அரசாங்கத்துக்கெதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு தாம் ஆதரவு தரமுடியாதெனக் கூறுகிறார். இது மிக இலாவகமாக தப்பிக்கும் செயலாகும், இப்படித்தான்



Gajan MP.indd 66 03.11.2024 22:23:46

கூறித்தப்ப போகிறீர்க்ள் என்றால், நீங்கள் எல்லாரும் எதற்காக எதிர்த்தரப்பில் வந்து அமர்ந்திருக்கிறீர்கள் ?

இவர்கள் உண்மையில் என்ன கூற விரும்புகிறார்கள் என்றால் – அவர்களின் சொற்களில் பொதிந்திருக்கும் அர்த்தம் என்னவென்றால், மக்களின் கருத்துகளுக்கு எதுவித மதிப்பும் அளிக்கத் தேவையில்லை, இப்போது இருக்கின்ற இதே நிலமையும் முறைமையும்தான் இனியும் தொடர வேண்டும் என்பதேயாகும்.

கனம் அவைத்தலைவர் அவர்களே.

இந்த சிக்கல் நிலையில் இருந்து நாடு வெளியில் வரவேண்டுமென்றால் இங்கு ஒரு தேர்தல் நடைபெறவேண்டும். இதையே நான் கடந்தமாத அமர்விலும் வலியுறுத்தியிருந்தேன். ஒரு புதிய தேர்தல் நடந்து, அதை தொடர்ந்து இந்த அவையில் இருப்பவர்கள் குறித்து மக்களுக்குநம்பிக்கைவரும் வரைக்கும், மக்கள் வீதிகளில் இருந்து கலைந்துபோகப்போவதில்லை.

இப்பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு ஏதாவது முயற்சி எடுக்கவேண்டுமாயின், இந்த நாட்டை இப்படி வங்குரோத்தடையச் செய்த அதே நபர்களுடன் தான் இணைந்து வேலைசெய்யவேண்டியதுர்ப்பாக்கிய நிலையில் இருப்பது தான் இன்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் முன் இருக்கின்ற மிகப் பெரியசவால்.

நாட்டை வங்குரோத்துக்குக்கு உள்ளாக்கியவர்களே இந்த அவையின் 2.3 பங்கினராக இருக்கின்ற நிலையில், எந்த கட்சியாவது, இந்த நடப்பு பாராளுமன்றத்தின் ஊடாக இந்த நிலமைகளை ஏதாவது ஒருவழியில் சீர்செயலாம் என எண்ணினால், அதில் இந்த நிலமைக்கு காரணமான அரச தரப்பின் அரைவாசிக்கும் அதிகமானோரோடு இணைந்து வேலை செய்ய வேண்டிய நிலை உருவாகும். அப்படி நாட்டை வங்குரோத்து அடையச்செய்தவர்களுடன் இணைந்தே, இந்த வங்குரோத்து நிலையை தீர்ப்பது என்பது எப்படிசாத்தியமாகும் ?

எனவே, ஒரு தேர்தல் நடத்தப்பட்டு புதியதொரு மக்கள் ஆணை பெறப்படுவதன் மூலமே இப்பிரச்சினையில் இருந்து மீளெழ முடியும் . அதற்குத்தான் இப்போது நாம் முன்னுரிமை கொடுக்க வேண்டும்.

எவ்வளவு தூரத்துக்கு நீங்கள் தேர்தல்களை பிற்போடுகிறீர்களோ, அவ்வளவிற்கு இன்று நாம் எதிர்கொண்டிருக்கின்ற இந்த அரசியல் நெருக்கடி, மேலும் மோசமான நிலையை எட்டும் . இந்த அவையானது தற்போது மக்களின் விருப்புகளை பிரதிபலிக்காத, நம்பக்கத்தன்மையை இழந்த ஒரு அவையாக இயங்குவதால், இந்த அரசியல் நெருக்கடி, ஒரு கலவரமாகவும் மாறக்கூடும் . கலவரங்கள் ஏற்படும் போது என்னநடக்கும்?

எங்களுக்கு இன்று ஒரு ஜனாதிபதி வாய்த்திருக்கிறார், அவர் இந்த அரசியல் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் , இராணுவ அதிகாரிகளை அமைச்சரவை அதிகாரிகளாகவும் செயலாளர்களாகவும் தொடர்ந்தும் நியமித்து அதில் மகிழ்ச்சியை கண்டுகொண்டிருக்கிறார். இப்படியான ஒரு பின்புலத்தில், மக்களின் குரல்கள் செவிமடுக்கப்படாத விசனத்தில் மக்கள் அடுத்த நடவடிக்கைகளில் இறங்கினால், என்ன செய்வீர்கள்?



Gajan MP.indd 67 03.11.2024 22:23:46

நீங்கள் இராணுவத்தை மக்கள் மேல் கட்டவிழ்த்து விடுவீர்கள். அதுதான் நடைபெறப்போகிறது.

அத்தகைய ஒரு தருணத்தை நோக்கித்தான் இந்த ஜனாதிபதியும் அரசாங்கமும் விடயங்களை நகர்த்தி வருகிறார்கள் . இந்நிகையில் இங்கு அவையில் எதிர்த்தரப்பில் இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினர்களும் தங்களது நம்பகத்தன்மையை தக்கவைக்க வேண்டுமாயின், இப்பாராளுமன்றத்தை கலைப்பதற்கு ஆதரவு கொடுக்கவேண்டும். அதற்கான 2.3 பெரும்பான்மையினை எமக்கு தாருங்கள், அப்போதுதான் நாம் ஒருபாராளுமன்ற தேர்தலைநடத்துமாறு ஜனாதிபதியைக் கோரமுடியும்.

ஏன் பாராளுமன்ற தேர்தல் வேண்டும் என கேட்கிறேன் ? என்பதற்கு இன்னொரு காரணம். ஏதோ ஒருகாரணத்துக்காக ஜனாதிபதி இன்றோ நாளையோ ராஜினாமா செய்கிறார் என வைத்துக்கொண்டால், இந்த நடப்பு பாராளுமன்றம்தான் இன்னொரு ஜனாதிபதியை தேர்வு செய்ய வேண்டியிருக்கும்.

இப்பாராளுமன்றமே மக்களின் நம்பகத்தன்மையை இழந்துள்ள நிலையில், காலாவதியான ஒரு நாடாளுமன்றம் எப்படி தம்முள் இருந்து ஒருவரை ஜனாதிபதியை தெரிவு செய்வது ?

எனவே புதிய தேர்தல் ஒன்றின் மூலம் புதிய மக்கள் ஆணை பெறப்பட வேண்டும். இது தான் எமது கட்சியின் நிலைப்பாடு, இவ்விடயத்திற்கு நாம் எமது முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோம்.

எதிர்தரப்பில் உள்ளவர்களுக்கு இதனை நாம் சவாலாகவே விடுகிறோம். கௌரவ புஸ்பகுமார போன்றவர்களுக்கு சவாலாக விடுகிறோம். அவர்கள் நம்பகத்தன்மை கொண்டவர்களாக இருப்பின் இந்த அவையை கலைப்பதற்கு ஆதரவு வழங்குங்கள். அதற்காக மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவைத் திரட்டுவீர்களானால். அது ஜனாதிபதியை பதவியிலிருந்து இறக்குவதற்கும் வழிவகுக்கும். இதனை நீங்கள் செய்யத்தவறுவீர்களானால் நீங்கள் இந்நிலைக்கு பொறுப்பாளிகளாவீர்கள். இதற்கான பொறுப்புக்கூறவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவீர்கள்.

இன்று இந்த நாட்டு மக்கள் அனைவரும் ஒரு தீர்க்கமான ஆட்சி கட்டமைப்பு மாற்றம் ஏற்படவேண்டும் என்பதையே விரும்புகின்றார்கள். இதையே இன்று காலை எதிக்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது ருவிட்டர் பக்கத்திலும் தெரிவித்திருந்தார். தீர்க்கமானதொரு மாற்றத்தையே அவர் கூறுகிறார் என்று நம்புகிறேன். ஏனெனில் இந்த நாட்டின் முழு கட்டமைப்புமே ஒரு தோல்வியடைந்த செயலிழந்த கட்டமைப்பாக மாறியுள்ளதென்பதை அரசியல்வாதிகளும் நாட்டு மக்களும் உணர்ந்துள்ளார்கள்.

இதனையே எதிர்த்தரப்பில் இருக்கும் தமிழ் கட்சிகள் இன்று மட்டுமல்ல , எப்போதும் கூறிவருகிறார்கள். இந்தநடப்பு அவையில் மட்டுமல்ல தொடர்ச்சியாக 70 ஆண்டுகளாக ஒவ்வொரு பாராளுமன்ற அவைகளிலும் இந்த நாட்டின் கட்டமைப்பு மாற வேண்டும் என்பதையே மீளவும் மீளவும் தெரிவித்து வருகின்றார்கள். இன்று நடைமுறையில் உள்ள ஆட்சிக் கட்டமைப்பானது ஒருபோதும் சீராக செயற்படப் போவதில்லை. ஏனெனில், இந்நாட்டு மக்களில் ஒருபகுதியினஎ இக்கட்டமைப்பை ஏற்றுக்கொள்வில்லை. தமிழர்கள்



Gajan MP.indd 68 03.11.2024 22:23:46

இக்கட்டமைப்பை நிராகரித்துவிட்டார்கள். முஸ்லிங்களும் இந்த ஆட்சிக்கட்டமைப்பை நிராகரிக்கும் குரலை தற்போது அதிகளவில் ஒலிக்க தொடாங்கியிருக்கிறார்கள்.

ஏனெனில், இந்த நாட்டினுடைய சிங்கள பேரினவாதத்தின்பேரில், அல்லது பாதுகாப்பின் பேரில்ஆட்சியிலிருக்கும் அரசாங்கங்கள் யாரை இலக்கு வைக்கிறார்களோ அவர்களை இக்கட்டமைப்பினால் பாதுகாக்கவே முடியாது. பல்வேறு காரணங்களினால் இக்கட்டமைப்பு தோல்வியடைந்திருக்கிறது. இக்கட்டமைப்பு மாற்றப்பட வேண்டுமானால், எவ்வாறு மாற்றப் பட வேண்டும்?

சிலவாரங்களுக்கு முன்னர் எதிக் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, தான் பதின்மூன்றாவது திருத்தச்சட்ட மூலத்தை அமுல்படுத்தப் போவதாகக் கூறியிருக்கிறார்.

பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலத்தை அமுல்படுத்துவது என்றால் என்ன? கடந்த முப்பத்திநான்கு வருடமாக இருக்கும் பதின்மூன்றாம்திருத்தச் சட்டமூலத்தில் எதனை அமுல்படுத்தப் போகிறீர்கள்?

இதுவரை அமுல்படுத்தாதவற்றை அமுல்படுத்தப்போகிறீர்களா?

அது உங்களால் முடியாது. பதின்மூன்றாம் திருத்தச்சட்டமூலம் ஒற்றையாட்சி முறைமையின் கீழ் உள்ளது. அது ஒற்றையாட்சிமுறையில் உள்ளவரை உங்களால் அதிகாரப் பகிர்வினை ஏற்படுத்த முடியாது.

உயர்நீதிமன்றம் ஒரு தடவையல்ல முப்பது தடவைகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. அதிகாரப் பகிர்வினை முறையாக அமுல்படுத்துவதானால், பதின்மூன்றாம் திருத்தச் சட்டத்தினால் முடியாது. அரச கட்டமைப்பானது மாற்றப்படவேண்டும்.

அரச கட்டமைப்பை மாற்றுவது என்றால் என்ன? ஏற்கனவே இருக்கும் ஒற்றையாட்சி முறையிலிருந்து நீங்கள் விலகி, புதியதொரு கட்டமைப்புக்கு செல்லவேண்டும். இன்று இந்த அரசியல் கட்டமைப்பானது அரசாங்கத்தினுடைய சொந்த இனமாகிய சிங்கள இனத்தை பாதிப்புக்குள்ளாகி வருகிறது. தங்கள் கண்களுக்கு முன்னாலேயே தாங்கள், தங்கள் தலைவர்களால்பொய்கள் சொல்லப்பட்டு ஏமாற்றப்பட்டு , அழிக்கப்பட்டு வருகின்ற அவலத்தை இன்று சிங்கள மக்கள் எதிர்கொண்டுவருகிறார்கள் . இது தவறவிடக்கூடாத முக்கியமான ஒரு தருணம் என நான் கருதுகிறேன் . சர்வதேச நாணய நிதியம் தொடர்பாகவும், இன்றைய பொருண்மிய நெருக்கடி தொடர்பானதுமான விவாதத்தில், நான் இவ்விடயத்தை வலியுறுத்திக் கூறுவதற்கு காரணமிருக்கிறது.

நான் இவ்வகையில் பலதடைவைகள் கூறியதுபோன்று, இப்போது முதற் தடவையாக இக்காரணங்களால் ஒருவாய்ப்பு உருவாகியிருக்கிறது. சிங்கள மக்கள் இன்று தங்களது தலைவர்கள் மீது நம்பிக்கையிழந்து விட்டார்கள். இதனை என்னை மகிழ்ச்சிப் படுத்துவதற்காக ஒரு பொய்யாக நான் கூறவில்லை.

ஆனால், இது முக்கியமானதொரு தருணம். தமது தலைவர்கள் இந்நாட்டை அழிவிற்கு கொண்டுசென்றுவிட்டாகள் என அவர்கள் உணர தொடங்கியிருக்கிறார்கள்.

இன்றைக்கு யுத்தம் நடக்கவில்லை. அப்படியாயின் கடந்த பதின்மூன்று வருடகாலத்தில்



Gajan MP.indd 69 03.11.2024 22:23:46

இந்த நாட்டை சீர்ப்படுத்தி உறுதி நிலைக்கு நீங்கள் கொண்டு சென்றிருக்க வேண்டும். ஆனால் நீங்கள் நாட்டை படுகுழிக்குள் கொண்டு சென்றிருக்கிறீர்கள். இன்றைக்கு நீங்கள் வங்குரோத்து நிலையை அடைந்திருக்கிறீர்கள். முதற்தடவையாக அவர்களது தலைவர்களை நோக்கி சிங்கள மக்கள் கேள்வியெழுப்பத் தொடங்கியிருக்கிறார்கள். தமது தலைவர்கள் எடுத்த தவறான முடிவுகளால் அவர்கள்மீது கோபத்தில் உள்ளனர்.

இந்நிலையில் நல்ல வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக நான் கூறுகிறேன்.

நாங்கள் சிங்கள பொதுமக்களை இது பற்றிச் சிந்திக்குமாறு கேட்கிறோம்.

தம் சொந்த இனத்திடமே பொய் கூறி அவர்களை ஏமாற்றி அவலநிலைக்கு உள்ளாகியிருக்கும் தமது தலைவர்கள், எப்படிப்பட்டவர்கள் என்பதனை இந்த தருணத்தில் உணர்ந்து கொண்டிருக்கும் சிங்கள மக்கள், இந்த நாட்டின் மற்றைய தரப்பினராகிய தமிழ் மக்கள் தொடர்பில் சிங்களத் தலைவர்கள் கூறிய விடயங்களில் உண்மைத்தன்மை இருக்குமா? என்பது தொடர்பில் சிந்திக்க வேண்டும். சமஸ்டி முறைமை என்பது பிரிவினைக்கு வழிவகுக்கும் என்று எதுவித கூச்சமுமில்லாமல் பொய் கூறி ஏமாற்றி வந்திருக்கிறார்கள் . இன்றைக்கும் அதையே கூறிவருகிறார்கள். எனவே தான் சொல்கிறேன் இக்கேள்விகளை சிங்கள மக்கள் தங்கள் தலைவர்களிடம் கேட்கவேண்டும்.

இன்றைக்கு இந்த நாடு பாதுகாப்புக்கு பாதீட்டில் 19 சதவீதத்தைச் செலவிடுகிறது. அதில் 13 சதவீதம் நேரடியாக இராணுவத்திற்கு ஒதுக்கப்படுகின்றது . இது வருடாந்தம் இரண்டு சதவீதத்தால் உயர்த்தப்படவிருக்கிறது. இது யுத்தத்திற்கு பின்னரான நிலமை. இந்த நாட்டில் கல்விக்கும் சுகாதாரத்துக்குமாக சேர்த்து பத்து சதவீதத்துக்கும் குறைவாகவே வரவு செலவுத்திட்டத்தில் நிதி ஒதுக்கப்படுகின்ற போது, யுத்தம் முடிவடைந்த பின்னர் கூட , பாதுகாப்பு செலவீனத்துக்கென 19 வீதம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

கல்விக்கும் சுகாதரத்துக்கும் ஒதுக்கும் பணத்தை விட மிகப்பெரிய பங்கை இன்றைய இக்கட்டானநிலையில்கூட, இராணுவத்திற்கென ஒதுக்கும் இந்த கட்டமைப்பு, ஒரு நிலைபேறான வளர்ச்சியைகொண்டுவரும் என எவராலும் எதிர்பார்க்க முடியுமா?

போர் முடிந்து இத்தனை காலத்துக்கு பின்னரும் நாட்டையே பிடுங்கி தின்கிற அளவுக்கு ஒரு பூதமாக வளர்ந்து வருகின்ற இராணுவக்கட்டமைப்பை பேணவேண்டிய தேவை என்ன?என்பதை சிங்கள மக்கள்தங்களைத் தாங்களே கேள்வி கேட்கவேண்டிய ஒரு முக்கியமான தருணம் இது.

இன்று கனிந்திருக்கிற இந்த சந்தர்ப்பத்தை தவறவிடவே கூடாது.

தோல்வியடைந்திருக்கிற இந்த நாட்டின் கட்டமைப்பை மாற்றி, இந்த ஒற்றையாட்சி கட்டமைப்பை மாற்றி இந்த அழகிய தீவு தனியே சிங்கள பௌத்தர்களுக்கு மாத்திரம் உரித்தானதல்ல என்பதை ஏற்று, இது சிங்களவர்கள் தமிழர்கள் முஸ்லிம்கள் மலையகத்தமிழஎகள் பறங்கியர்கள் என அனைவருக்கும் உரித்தானது என்பதை ஏற்று, இந்த தீவில் சிங்கள மொழிபேசும் தேசமும் தமிழ்பேசும் தேசமும் இருக்கின்றது என்பதை அங்கீகரிக்கும் ஒரு சமஷ்டி கட்டமைப்பை உருவாக்க வேண்டும். இல்லாவிடில் இந்த நாட்டைஒருபோதும் அழிவுப் பாதையில் இருந்து காப்பாற்றவே முடியாது போய்விடும்.

சாதாரண சிங்கள பொது மக்கள் மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் இனியும் சிந்திக்காது விடின், இந்தமாற்றங்களை இன்று நீங்கள் நிகழ்த்தாது விடின் , இந்த நாட்டின் பாதுகாப்பு செலவீனம் மேலும்மேலும் அதிகரித்து, நாட்டையே முழுமையாக

அழிவுப் பாதைக்கு இட்டுச் செல்லும்.

இன்றாவது சிங்களப் பொதுமக்கள் தமது தலைவகளுடைய உண்மை நிலையினை அறிந்து கொண்டதன் பிற்பாடு மேற்குறித்த கேள்வியை கேட்டு ஒரு சரியான முடிவை நீங்கள் எடுக்காது விடின் , நீங்கள்கூட இனவாத பாதையில் செல்வதாகவே நாம் முடிவெடுக்க வேண்டிவரும்.

சந்திரிகா பண்டாரநாயக்கவின் ஆட்சிக்காலத்தில் எனது தந்தையார் படுகொலை செய்யப்பட்டபோது, வெளிநாடுகளில் வாழும் எமது உறவினர்கள் என்னையும் எனது குடும்பத்தினரையும் வெளிநாடுகளுக்கு வந்துபுகலிடம் கோருமாறும் அங்கு வந்து குடியேறுமாறும் வற்புறுத்தினார்கள். இக்கட்டமைப்பு மாற்றமடைவது என்பது மிக மிக அரிதான விடயம் எனத் தெரிந்திருந்தும், எனது தந்தையாஉ படுகொலை செய்யப்பட்ட நிலையிலும் எனது உள்ளுணர்வு ஒன்றை சொல்லியது, “ இது தலைவர்களின் தவறு. சாதாரண மக்களுக்கு உண்மை கூறப்படவில்லை, என்றைக்காவது ஒரு நாள் இந்த உண்மைகளை அறியக்கூடிய வாய்ப்பு அவர்களுக்கு கிட்டும் பட்சத்தில் அவர்கள் மாற்றமடைவார்கள். சரியான முடிவுகளை எடுப்பார்கள்” என என்உள்ளுணஉவு கூறியதால், நான் நாட்டை விட்டு அகலும் முடிவை அன்று எடுக்கவில்லை.

நான் விரும்பியிருந்த அந்த அரிய தருணம் இப்போது கனிந்து வந்திருக்கிறது. இத்தருணத்திலாவது, சிங்கள் மக்கள் தங்களது கண்களைத் திறக்காவிடில், இலங்கை தனித்து சிங்கள மக்களுக்கு என்றில்லாமல், தமிழர்கள், முஸ்லீம்கள், பறங்கியர்கள் என அனைவருக்குமானது என்பதனை ஏற்றுக்கொள்ளாமலும், சிங்களம் பேசும் தேசமும், தமிழ்பேசும் தேசமும்இந்நாட்டில் இருப்பதனை ஏற்றுக்கொள்ளாவிடில், அதற்கேற்ற முறையில் அரசகட்டமைப்பு சமஸ்டி முறைக்கு மாற்றப்படாவிடில், இந்நாடு தோல்வியடைந்த நாடாகவே தொடர்ந்தும் இருக்கும். இவற்றை ஏற்றுக்கொள்ளாவிடத்து நீங்கள் பாதுகாப்புச் செலவீனங்களை தொடர்ந்தும் அதிகரிக்கவே வேண்டியிருக்கும் என்பதனால் நாடு தொடர்ந்தும் தோல்வியடையும். புதிய தலைமுறை தமிழ்ச்சமூகம், புதிய தலைமுறை புலம்பெயர் சமூகம், புதியவழிமுறைகளின் மூலம் இவ்வரசினை தோல்வியுறச் செய்ய எத்தனிக்கும்.

ஏனெனில், இந்தஅரசகட்டமைப்பு தங்களுக்கு எதிரானதான அமைந்திருப்பதாகவே அவர்கள் கருதுகிறாஎகள்.

இவ்வளவு காலமும் சிங்களத் தலைவர்களே இந்த நிலைக்கு காரணமானவர்கள் என்று கூறிவந்தோம். இன்றைக்கு தாங்கள் தங்களது தலைவஎகளால் ஏமாற்றப்பட்டுள்ளதனை நன்கு உணர்ந்திருக்கிற சிங்கள மக்கள், தமிழர்கள் மீதுதான் தவறு இருந்துவந்திருக்கிறதாகக் கூறமுடியாது. அவ்வாறு அவர்கள் கூறுவார்களேயானால், துரதிர்ஷ்டவசமாக அங்கும் இனவாதம் இருப்பதாகவே கருதவேண்டியிருக்கும்.

ஆனால், கொழும்பிலே பிறந்து அங்கேயே படித்து வளர்ந்து , மிக நெருக்கமான சிங்கள நண்பர்களைக் கொண்டவன் என்கிற வகையில், நான் மேலே சொன்னதை (நீங்களும் இனவாதிகள் தான் எனமுடிவெடுக்கவேண்டிவரும் என்பதை) பொய்யாக்குவீர்கள் எனும் நம்பிக்கை எனக்கு உண்டு என்பதையும் நான்இந்தஇடத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி



Gajan MP.indd 71 03.11.2024 22:23:46

# ஆசிரிய, அதிபர் சமூகத்துக்கு இந்த விடயத்தில் கடந்த 24 வருடமாக மிக பிழையானதொரு அநீதி இழைக்கப்பட்டு இருக்கின்றது

00.00.2022 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

கடந்த 88 நாட்களாக வீதியில் நின்று போராடும் ஆசிரியர்களுக்கு எதிராக பாடசாலைகளை ஆரம்பித்து மக்களை திருப்புவதற்கு அரசு சதித்திட்டம் வகுக்கிறது. மக்கள் அதற்குப் பலியாகக்கூடாதென வலியுறுத்தினார்.

24 வருடங்களாக போராடும் ஆசிரியர்களது கோரிக்கைகள் உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டும்.

இன்று நாட்டின் இடையாண்டு நிதிநிலை அறிக்கை குறித்து விவாதித்துக்கொண்டிருக்கின்ற இந்த வேளையிலே இந்த நாட்டின் ஆசிரிய மற்றும் அதிபர் சமூகத்தினர் கடந்த பலமாதங்களாக வீதிகளில் நின்று போராடிக்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில் எமது சமூகத்தில், தம்மை விடவும், தாம் அடைந்ததை விடவும் வல்லவர்களாக, சிறந்தவர்களாக தமது மாணவர்களை உருவாக்குவதையே தமது வேலையாக கொண்டவர்கள் ஆசிரியப்பெருந்தகைகள்.

தாம் அடைந்த சமூக அந்தஸ்திலும் பார்க்க கூடிய நிலையை தமது மாணவர்கள் அடைய வேண்டும் என்பதையே அவர்கள் தமது இலக்காக கொண்டு இயங்குகிறார்கள்.

தமது மாணவர்கள் தம்மை விடவும் சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு சென்று சாதிக்கிறார்களா என்பதையே ஆசிரியர்கள் தமது அடைவுக்கான அளவுகோலாக பார்க்கிறார்கள்.

அவர்களது அப்படிப்பட்ட மனோபாவத்தால் தான் நாம் போற்றத்தக்க நிலையில் ஆசிரியர்களையும் அதிபர்களையும் வைத்து பார்க்கின்றோம்.



Gajan MP.indd 72 03.11.2024 22:23:46

அப்படிப்பட்ட ஒரு உன்னதமான சமூகத்தினர் தான் 24 ஆண்டுகளுக்கு முன்னர் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட மிக மோசமான ஒரு தீர்மானத்தால் இன்றும் வீதிகளில் நின்று போராடிக்கொண்டு நிற்கிறார்கள். பி.சி பெரேரா ஆணைக்குழு, ஆசிரியர்களை தமது அறிக்கையிலிருந்து புறம் தள்ளத்தீர்மானித்திருந்தது. அதனைத் தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் அந்த தீர்மானத்தை ஏற்றுகொள்ளும் ஒரு பிழையான நடவடிக்கையையே தொடர்ந்தன.

இந்த அரசாங்கம் கூட, தான் ஆட்சிக்கு வந்தவுடன், சுபோதினி ஆணைக்குழு எனும் ஆணைக்குழுவை நியமித்து அந்த ஆணைக்குழு விரிவான ஆழமான ஆய்வுகளை மேற்கொள்ளவும் அனுமதித்திருந்தது.

அந்த ஆய்வுகளின் பயனாக ஒரு விரிவான அறிக்கையை சுபோதினி ஆணைக்குழு சமர்ப்பித்திருந்தது. அந்த அறிக்கையை ஆசிரியர் சங்கமும் ஏற்றுக்கொண்டிருந்தது. ஆனால் அரசாங்கம் அந்த அறிக்கையை நடைமுறைப்படுத்த தவறிவிட்டது. இந்த அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையை அமுல்படுத்துமாறும் அவ்வாறு அமுல்படுத்தினால் தாம் தமது போராட்டங்களை கைவிடுவதாகவும் இந்த அரசாங்கத்திடமே ஆசிரியர் சங்கங்கள் கேட்டிருந்தன.

ஆனால் கோவிட் பெருந்தொற்று மற்றும் நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அந்த அறிக்கையை அமுல்படுத்த முடியாதென கூறிய போது, ஆசிரியர் சங்கங்கள் நாட்டின் பொருளாதார நெருக்கடியைக் கருத்தில் கொண்டு தமது நிலைப்பாட்டிலிருந்து மேலும் இறங்கி வந்து, ஒரு இடைக்காலத் தீர்வாக, ஆகக்குறைந்தது 2018 ஆம் ஆண்டு அப்போதைய அரசின் அமைச்சரவை குழுவினால் இது குறித்து பல சிபாரிசுகள் முன்வைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட அறிக்கையையேனும் அமுல்படுத்துமாறு கேட்டிருந்தார்கள்.

ஆனால் அதற்கு இணங்குவதற்கு கூட இந்த அரசு இன்னமும் தயாராக இல்லை. ஆசிரியர் சங்க கோரிக்கைகளுக்கு பதிலாக, அந்த 2018 ஆம் ஆண்டு அறிக்கையின் சிபாரிசுகளை நான்கு கட்டங்களாக நான்கு ஆண்டுகளில் அமுல்படுத்துவதாக இப்போது கூறுகிறது. அப்படியிருக்கவும், 2018ம் ஆண்டு முன்வைக்கப்பட்ட அறிக்கையின் சிபாரிசுகளையேனும் ஒரே தடவையில் நிறைவேற்றி, அந்த அறிக்கையின் சிபாரிசுகளையும் சுபோதினி ஆணைக்குழுவுன் முன்மொழிவுகளுடன் இணைத்துக்கொள்ளுமாறும், அப்படி செய்தால், தாம் தமது போராட்டங்களை கைவிட்டு, மீண்டும் உடனடியாக பணிக்கு திரும்புவதாகவும் ஆசிரியர் சங்கங்கள் கேட்டிருக்கிறார்கள்.

உண்மையில் ஆசிரிய ,அதிபர் சமூகத்துக்கு இந்த விடயத்தில் கடந்த 24 வருடமாக மிக பிழையானதொரு அநீதி இழைக்கப்பட்டு இருக்கின்றது என்பதை ஒவ்வொரு அரசாங்கமும் ஏற்றுக்கொண்டிருக்கின்ற நிலையில், அப்படி கடந்த 24 வருடமாக தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்ற சமூகமான ஆசிரிய அதிபர் சமூகத்திடமிருந்து மேற்கூறியதை விட வேறொரு நியாயமான நிலைப்பாட்டை எதிர்பார்க்க முடியாதெனவே நான் கருதுகின்றேன்.

உண்மையில், இந்த நாட்டின் அடிப்படை வளர்ச்சிக்கும் ஆரோக்கியமான சமூகத்தின் உருவாக்கத்திற்கும் பொறுப்பான, உலகின் வளர்ச்சியுடன் போட்டியிட்டு இணைந்து செல்லக்கூடிய ஆளுமை உடையவர்களை உருவாக்க கூடிய ஆசிரிய, அதிப் சமூகத்தின்



Gajan MP.indd 73 03.11.2024 22:23:46

நலனை பேணுவதற்கு எந்தவொரு ஆர்வமுமற்றே அரசாங்கம் இருக்கிறது. ஆசிரியர்கள் அதிபர்கள் உள்ளிட்ட கல்வி சமூகத்தின் நலன்களை உரியவகையில் பேணினால் மட்டுமே, எமது பிள்ளைகளும் நாளை இந்த உலகத்துடன் போட்டியிட்டு முன்னேறக் கூடியவகையில் உருவாகுவார்கள் என நாம் எதிர்பார்க்க முடியும். ஆனால் யதார்த்தம் என்னவெனில் அப்படிப்பட்ட ஒரு உன்னதமான சமூகம், கவனிப்பாரற்று புறந்தள்ளப்பட்ட சமூகமாகாவே கடந்த 24 வருடங்களாக அரசாங்கங்களால் நடாத்தப்பட்டுவருகிறது.

2012 ஆம் ஆண்டு 3000 மில்லியன் ரூபாக்கள் ஆசிரியர்களிற்காக ஒதுக்கப்பட்டு அவர்களது நிலமை சரி செய்யப்படும் என அப்போதைய அரசாங்கத்தால் அன்றைய ஆசிரியர் சங்கத்துக்கு உறுதி மொழியொன்று வழங்கப்பட்டிருந்தது. ஆனால் ஒதுக்கப்பட்ட அந்த 3000 மில்லியன் ரூபா பணத்திற்கு என்ன நடந்தது என பார்த்தால் அது எங்குபோனதென ஒருவருக்கும் (ஆசிரியர் சங்கத்துக்கு) தெரியாது.

எப்படியான ஒரு பரிதாபகரமான நிலையில் ஆசிரியர் சமூகம் நடத்தப்பட்டிருக்கிறது என்பது இதிலிருந்து அனைவருக்கும் புரியும். இது நிச்சயமாக நிறுத்தப்பட வேண்டும். இந்த அரசங்கம் தனது குடிமக்களின் நலனில் உண்மையாக அக்கறை செலுத்துவதாக இருந்தால், இந்த ஆசிரியர் சமூகத்திற்கு ஏற்பட்டிருக்கும் இந்த நிலமை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதற்கு நீங்கள் பில்லியன் கணக்கில் செலவிடுகின்றீர்கள். அதற்கப்பால் ஊழல் மூலம் பெருமளவு கறுப்புப் பணத்தை பெற்றுக் கொள்கின்றீர்கள்.

ஆனால் தம்மை விட உயர்வானவர்களை உருவாக்குவதற்காக அடிமைகள் போல உழைத்துக்கொண்டிருக்கும் ஆசிரியர்களை நடுத்தெருவில் விட்டிருக்கிறது இந்த அரசு. இப்படியான பாதையிலேயே இந்த அரசு செல்லுமானால், நிச்சயம் வரலாற்றின் பழிச்சொல்லுக்கு இந்த நாடு இலக்காகும் என்பதை புரிந்து கொள்ளுங்கள்.

ஆசிரியர்கள் போராடிக் கொண்டிருக்கும் இந்த நிலமையில், இருநூறுக்கும் குறைவான மாணவர்களை கொண்ட பாடசாலைகளை எதிர்வரும் ஒக்டோபர் 21 ம் திகதி முதல் மீளத்திறக்கப்போவதாக அரசு அறிவித்திருக்கிறது. தமது உரிமைகளுக்காக ஒரு புறம் ஆசிரியர்கள் போராடிக்கொண்டிருக்க , அவர்களோடு பேசி ஒரு இணக்கப்பாட்டிற்கு வருவதற்கு தயாரற்ற நீங்கள், என்ன நோக்கத்தோடு பாடசாலைகளை மீளத்திறக்கும் அறிவித்தல்களை விடுக்கிறீர்கள்? ஆசிரியர்களுக்கு எதிராக மக்களை திருப்புவதற்காகவே நீங்கள் இந்த வேளையில் இதை செய்ய முற்படுகிறீர்கள்.

ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு செவி சாய்க்காது, பாடசாலைகளை திறப்பதன் மூலம் மக்களை ஆசிரிய சமூகத்திற்கு எதிராக திருப்ப முற்படும் இந்த அரசின் கபடத்தனமான பொறிக்குள் விழுந்து விட வேண்டாம் என இந்த நாட்டின் அனைத்து மக்களையும் நாம் கேட்டுக்கொள்கிறோம்.

தமது சட்டைப்பைகளை நிரப்பிக்கொண்டு, அதேவேளை, தொடர்ச்சியாக 24 ஆண்டுகளாக மிக மோசமான அநீதிக்கு உட்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்ற ஆசிரிய பிரச்சினைகளை கவனிக்க மறுக்கும் இந்த அரசின் மோசமான சூழ்ச்சியை

புரிந்து கொள்ளுங்கள். ஏற்கனவே தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட ஆசிரிய சமூகத்தை குற்றவாளிக்கூண்டில் ஏற்றும் அரசின் கபட முயற்சிக்கு தயவு செய்து துணை போகாதீர்கள் என மக்களை கேட்டுக்கொள்கிறோம்.

இந்த நிலையில் இன்று கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் அனுரகுமர திசநாயக்க அவர்களால் அறிக்கை 27/2 சமர்ப்பிக்கப்பட்ட போது, கல்வி அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களால் எதிர்வரும் நவம்பர் மாதம் 21 ம் திகதி வரவுசெலவு திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது ஆசிரியர்களின் பிரச்சினை கருத்தில் எடுக்கப்படும் என பதிலளிக்கப்பட்டிருந்தது.

அப்படியாயின் அந்த உறுதிமொழியை ஏன் இப்போதே இந்த சபையில் வழங்க முடியாது? அதுமட்டுமின்றி வரவு செலவு திட்டத்தில் என்ன வகையில் அவை தீர்க்கப்படும் என எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

உண்மையில் நவம்பர் 21 ம் திகதி ஆசிரியர் சங்கத்தின் கோரிக்கைகளுக்கான தீர்வுகள் வழங்கப்படுமென நீங்கள் உறுதியாக கூறுவீர்களானால், ஏன் இப்போதே அந்த உறுதி மொழியை ஆசிரியர் சங்கங்களிடம் தெரிவித்து அவர்களுடன் ஒரு உடன்பாட்டிற்கு வந்து அவர்களது போராட்டத்தை நிறுத்தக் கூடாது?

அதிலும், ஆசிரியர் சங்கங்கள், 2018 அமைச்சரவை குழு அறிக்கையையேனும் ஒரே தடவையில் நிறைவேற்றி, அந்த சிபாரிசுகளையும் சுபோதினி ஆணைக்குழு அறிக்கையுடன் இணைக்குமாறும் அப்படி செய்தால் தாம்போராட்டங்களை கைவிட்டு பணிக்கு திரும்புவதாகவும் மிக தெளிவாக தமது குறைந்த பட்ச கோரிக்கைகளை வெளிப்படுத்தியிருக்கிற இந்த நேரத்தில், நீங்கள் ஏன் தெளிவான ஒரு உறுதிமொழியை அவர்களுக்கு வழங்கமுடியவில்லை? மாறாக, நவம்பர் 21 ம் திகதி இந்த பிரசினைகள் கருத்திலெடுக்கப்படும் என்கிற தெளிவற்ற ஒரு மழுப்பலானபதிலையே மீண்டும் நீங்கள் முன்வைத்திருக்கிறீர்கள்.

உண்மையில் ஆசிரியர்களும் அதிபர்களும் போதுமான அளவு கஷ்டத்தையும் நெருக்கடியையும் அனுபவித்துவிட்டார்கள். அவர்கள் அனுபவிக்கும் துன்பத்தினால் எமது பிள்ளைகளும் துயரிற்கு உள்ளாகிறார்கள். இது உடனடியாக நிறுத்தப்பட்டு அவர்களுக்கு தீர்வளிக்க வேண்டும்

நன்றி



Gajan MP.indd 75 03.11.2024 22:23:46

# சிறிலங்கன் அடையாளம் என்பது ஏனைய அடையாளங்களை மறுதலிப்பதாக அமைந்திருக்கிறது!

03-08-2022 அன்று ஜனாதிபதி ரணில் விங்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் ஆற்றிய அக்கிராசன உரை மீதான விவாதத்தில் 12-08-2022 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடன உரையில் கூறப்பட்ட விடயங்களில் எங்களுக்கு மிகுந்த கரிசனைக்குரியனவற்றுக்குச் செல்கிறேன். அவரது உரையில் ஓரிடத்தில் வடக்கு கிழக்கு தொடர்பாகக் குறிப்பிட்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள்.

ஜனாதிபதியின் உரையின் இறுதிப்பகுதியில் ஒரு பந்தியில் அவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

'தமிழ்ச் சமூகத்தினர் நீண்ட காலமாக எதிர்நோக்கும் பிரச்சனைகளுக்கு அரசியற் தீர்வு காண்பதும் அவசியமாகிறது. யுத்தம் காரணமாக அவர்கள் பல சமூக, பொருளாதார பிரச்சனைகளுக்கு முகங்கொடுத்துவருகிறார்கள். காணிப் பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும். வடக்கின் பொருண்மிய மேம்பாட்டு விடயத்தில் நாங்கள் புதிய வழிமுறைகளைச் சிந்திக்க வேண்டும். இலங்கையை மீள்கட்டுமானம் செய்யும் வேலைத்திட்டத்திற்கு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களுடன் நெருக்கமாக இணைந்து பணியாற்றுவதன் மூலம் அவர்களின் ஆதரவினைப் பெறமுடியும் என நம்புகிறோம். அவர்களது வருகையினையும், தமது தாய் நாட்டில் அவர்களது முதலீடுகளையும் நாம் எதிர்பார்க்கிறோம்.

என்பதாக ஜனாதிபதியின் உரையில் வடக்கு கிழக்கு வாழ் தமிழர்கள் தொடர்பாக இந்தவொரு குறிப்பினை மட்டுமே காணமுடிந்தது.

நான் எனது கருத்துக்களை மேற்குறித்த விடயத்திலிருந்து ஆரம்பிக்றேன், மிக நீண்ட காலத்திற்கு முன்பு அல்ல, 2001 ம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பெரும்பான்மையை பெற்றிருந்தது. திரு. விக்கிரமசிங்க பிரதமராக நியமிக்கப்பட்டார். ஜனாதிபதி குமாரணதுங்க ஜனாதிபதியாகத் தொடர்ந்தார். அப்போது திரு.ரணில் விக்கரமசிங்க அவர்கள் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சமாதான



Gajan MP.indd 76 03.11.2024 22:23:46

உடன்படிக்கையில் கைச்சாத்திட்டார். சமாதான நடவடிக்கைகள் என அழைக்கப்பட்ட நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன. விடுதலைப்புலிகளுடனான பேச்சுவார்த்தைகளில் ஒஸ்லோ பரிவர்த்தனை (Oslo Communiqué) அறியப்பட்ட உடன்பாடு எட்டப்பட்டது.

அவைத்தலைவர் இவற்றை அறிவார் என நம்புகிறேன். உங்களுடைய முன்னைய தொழில்களில் ஒன்றாக அக்காலகட்டத்தில் நீங்கள் பேர்கோவ் பவுண்டேசன் அமைப்பில் பணிபுரிந்தீர்கள். அப்போதுதான் முதற்தடவையாக நான் உங்களைச் சந்தித்தேன்.

அந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்பட்டு ஒஸ்லோ பரிவர்த்தனை வெளியானபோது அந்தப் பரிவர்த்தனையில் குறிப்பிட்டட்ட விடயங்களுக்கும் நாட்டிலிருந்த நடைபெற்று வந்த விடயங்களுக்கும் இடையில் பாரிய இடைவெளி காணப்பட்டது.

இதுவிடயத்தில் விடுதலைப்புலிகளுக்கு மட்டுமல்ல தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் கரிசனையிருந்தது. நான் அப்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இணைந்திருந்தேன். சமஷ்டி முறையை பரிசீலிப்பதாக ஒரு பரிவர்த்தனையுடன் திரு. விக்கிரமசிங்க உடன்பட்டிருந்தாலும் நாட்டில் நடைபெற்ற சம்பவங்க்ள் அதற்கு நேரெதிராக அமைந்திருந்தது. நிலைமையை வழமைக்கு கொண்டுவருவதற்கான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அப்போது அராசாங்கத்துடன் முரண்பட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதியை குற்றசாட்டில் தப்பித்துக்கொள்ளும் அனுகுமுறையே அவரால் கையாளப்பட்டது.

அரசகட்டமைப்பை ஒரு சம்ஷ்டி முறையாக மாற்றுவது தொடர்பில் அரசுக்கோ அல்லது அரசாங்கத்திற்கோ எந்த அக்கறையும் இருப்பதனை நாட்டு நிலவரங்கள் வெளிக காட்டவில்லை. உண்மையில் ஒரு மாற்றத்திற்கு அவர்கள் தயாராக இருந்திருந்தால் நிலமை வேறுவிதமாக அமைந்திருக்கும்.

ஆனால் அரசாங்கம் வேறுவிதமான பரப்புரைகளை மேற்கொண்டுவந்தது. வசதியாக பழியை விடுதலைப் புலிகள் மீது சுமத்தித் தப்பிக்கொண்டது. அதன் நீட்சியாக பழி தமிழ் மக்கள் மீதும் போடப்பட்டது. தமிழர்களே சமஷ்டித்தீர்வு விடயத்தில் அக்கறை கொள்ளவில்லை என பழிசுமத்தப்பட்டது. இவ்விதம் சிங்கள மக்களுக்கு மட்டுமல்ல முழு உலகத்திற்கும் தெரிவிக்கப்பட்டது. தமிழர்கள் இதில் அக்கறையில்லாது இருக்கிறார்கள் அவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை வலியுறுத்துகிறார்கள் ஆதலால் அவர்களுக்கு எதிராக இராணுவநடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனக் கூறப்பட்டது.

அந்நேரத்தில் அவருடன் முரண்பட்டுக்கொண்டிருந்த அப்போதைய ஜனாதிபதியைக் காரணங்காட்டி பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதிலிருந்த தப்பியிருக்கலாம். ஆனால் இன்று நிலைமை முழுமையாக மாற்றமடைந்துள்ளது. அவர் மிக முக்கியமான நிறைவேற்று அதிகார ஜனாதிபதியாக உள்ளதால் முழு நாடும் அவரது விரல் நுனியில் இருக்கிறது. எங்களது கட்சியையும் வேறும் ஒருசிலரையும் தவிர மிகுதி உறுப்பினர்கள் அவருடன் இணைந்து பணிபுரியத் தயாராக இருக்கிறார்கள். அவருக்கு இந்த அவையின் முழு ஆதரவு இருக்கிறது. 2020 இலிருந்து இந்தநாட்டை சீர்குலைத்துவரும் இந்த அரசாங்கம் தஙகளைப் பிணையெடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவில் தங்கியிருக்கிறது.

இந்நாடாளுமன்றம் திரு. விக்கிரமசிங்கவில் தங்கியிருக்கிறது.



Gajan MP.indd 77 03.11.2024 22:23:46

திரு. விக்கிரமசிங்க தான் இணங்கிய ஒஸ்லோ பரிவர்த்தனைக்கு நேர்மையானவராக இருப்பின் அந்தவிடயத்தை மீள எடுக்கலாம். இந்தச் சபை மூலமாக அதனைச் சாதிக்கலாம். இச்சபை மூலமாக முழு நாட்டுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராக நடந்தவற்றைக் கூறி, அவர்களது உரிமைகள் வழங்கப்பட வேண்டும். சமஷ்டி முறைமை பிரிவினையல்ல என்பதனைத் தெரிவிக்கலாம். ஆனால் அதற்கு நேரெதிராக, இம்முறைமைய ஜனநாயகத்தைப் பேணுவதற்கும், இச்சபையை பொறுப்புக்கூற வைப்பதற்கும் அது உதவும். சமஷ்டி முறைமைமுறையான தலைவர்களை உருவாக்க உதவும். இவற்றை அவர் தெரிவித்திருகலாம். ஆனால் திரு. விக்கிரமசிங்க அதுபற்றி ஒரு வார்த்தையைத்தானும் கூறவில்லை அதற்கு மாறாக அவர் தன்னை ஒருசிறிலங்கனாகவும், சிறிலங்கன் என்ற அடையாளத்தைக் வேண்டுவதாகவும் தெரிவித்திருக்கிறார்.

அவர் குறிப்பிடும் சிறிலங்கன் அடையாளம் என்பது ஏனைய அடையாளங்களை மறுதலிப்பதாக அமைந்திருக்கிறது மற்றைய அடையாளங்களை பிளவுகளாக அவர் கருதுகிறார். எங்களுக்கிடையிலான வேறுபட்ட அடையாளங்களை மறந்துவிடுமாறு கூறுகிறார். மாறுபட்ட அடையாளங்கள் இலங்கையை பலவீனப்படுத்துவதாக அவர் கூறுகிறார். உண்மையாகவே 2001–2002 காலப்பகுதியில் அவர் கொண்டதாகக் கூறிய நிலைப்பாடும். சர்வவல்லமை கொண்ட ஜனாதிபதியாக அவர் இப்போது கூறுவதும் நேரெதிரான நிலைப்பாடுகள். இவை இரண்டும் ஒன்றாக இருக்கமுடியாது. இவற்றில் உண்மையான விக்கிரமசிங்க யார்?

இவ்விடயத்தில் நம்பகத்தன்மை தொடர்பில் பாரிய பிரச்சனையிருக்கிறது. இதனையை தமிழர்கள் தொடர்ந்து கேள்வியெழுப்பி வருகிறார்கள். எது எப்படியிருப்பினும், இறுதியில் அவர் எவ்வாறு இந்நாட்டின் ஜனாதிபதியானார் என்பதனைப் பிரதிபலிக்க வேண்டியவராக உள்ளார். போராட்டம் சில சமயங்களில் வன்முறைவயப்பட்டதாக இருந்தது உண்மைதான். ஆனால் அதனை அவர் இப்போது பயங்கரவாதம் என்றும் அழைக்கிறார். அவர் எதிரக்கட்சி வரிசையில் அமரந்திருந்தபோது இப்போராட்டத்தை அவர் பயங்கரவாதம் என அழைக்கவில்லை. மாறாக, மக்கள் போராட்டம் பாதுகாக்கப்பட வேண்டும் என திரும்பத்திரும்பக் கூறியிருந்தார்.

நான் , இதற்கு முன்னரும் ஒரு தடவை கூறியிருந்தேன், ‘ஒரு வன்முறையற்ற போராட்டம் வன்முறையற்ற வகையில் முன்னெடுக்கப்படும்போது, முழு நாடும் மாற்றம் அவசியம் என்று கூறும்போது ஏனெனில் இந்தப்போராட்டத்தின் நோக்கமே மக்கள் தாம் வழங்கிய ஆணையைத் திரும்பிபெறுவதாக இருக்கிறது. மக்கள் தாம் வழங்கிய ஆணையை மீளப்பெற விரும்புவதனை முழு உலகமும் அறியும். அவர்கள் புதிய ஆணையைக் கோருவதற்கு காரணம் தாம் நம்பிக்கை இழந்த இந்த அவையை கலைத்து மக்களின் நம்பிக்கையை பெற்ற அவையை அமைப்பதற்காகும். நீங்கள் அதற்கு வழிவிடுவதில்லை என முடிவுசெய்துள்ளீர்கள். மாறாக , நிலைமையை உங்களுக்கு ஏற்றவகையில் கையாண்டு ஜனாதிபதி எனும் இந்நிலைக்கு உயர்ந்துள்ளீர்கள்.

அப்படியாக பதவிக்கு வந்த பின்னர், எந்த வழிமுறையில் நீங்கள் ஜனாதிபதிப் பதவிக்கு வந்தீர்களோ அந்த வழிமுறையையே பயங்கரவாதம் என்றும் வன்முறை என்றும் வர்ணிக்கிறீர்கள். இதனை ஒருபோதும் ஏற்றுக்கொளள முடியாது.



Gajan MP.indd 78 03.11.2024 22:23:46

திரு ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு நடந்துகொள்வதற்குக் காரணம் ஆளும் கட்சியினருக்கு அவர் கடமைப்பட்டவராக இருப்பதேயாகும். அவர் பொதுசன முன்னணிக்கு கடமைப்பட்வராக இருக்கிறார். இந் நாடாளுமன்றம் ஜனநாயகமற்ற முறையில் வழங்கிய தீர்ப்புக்கு பதவிக்கு கட்டுப்பட்டவராக இருக்கிறார். மக்களின் குரலை நசுக்கி அதனைப் பூச்சியத்திற்கு கொண்டு வருவதன் மூலம் அக்கட்சியினருக்கு தனது நன்றியறிதலை வெளிப்படுத்துவதே இப்போது அவருக்குள்ள ஒரே வழியாக இருக்கிறது. அதனையே அவர் செய்கிறார்.

இந்த காரணங்களாலேயே நாம் கூறுகின்றோம். உடனடியாக அவசரகால சட்டத்தை நீக்கி கைதுசெய்து அடைக்கப்பட்ட அனைவரையும் உடனடியாக விடுவிக்க வேண்டும் அல்லாவிடின் நீங்கள் அழைப்பு விடுத்திருக்கின்ற சர்வகட்சி அரசு என்பது உங்கள் பதவியையும் அதிகாரத்தையும்பாதுகாக்கும் ஒரு நாடகம் என்றே எமது கட்சியின் உறுதியான நிலைப்பாடாகும்.

நன்றி



Gajan MP.indd 79 03.11.2024 22:23:46

# ஒற்றையாட்சியை கைவிட்டு சமஸ்டி அடிப்படையில் தீர்வு காண்பதற்கும் தயார் என்ற அறிவிப்பு சனாதிபதி வெளியிடாதவரை சனாதிபதியுடன் பேச்சுக்கு கூட்டமைப்பும் சி.வி.விக்னேஸ்வரனும் செல்லக்கூடாது.

**28-11-2022 அன்று வெளிவிவகார அமைச்சு மீதான விவாதத்தில் கலந்து கொண்டு அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

கடந்தவாரம் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் வடக்கு கிழக்கில் பெருமெடுப்பில் இடம்பெற்றது. அந்த நினைவேந்தல் நிழக்வுகளை தாம் தடுக்க மாட்டோம் என்று அறிவிக்க வேண்டிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டது.

ஆனால் மறுபக்கமாக இந்நிகழ்வை தடுப்பதற்கான அழுத்தங்கள் பாரியளவில் மக்கள் மீது அரச தரப்பினால் ஏற்படுத்தப்பட்டது. எனினும் எந்த விளைவுகள் வந்தாலும் பரவாயில்லை என்ற மனநிலையுடன் மக்கள் பல்லாயிரமாகத் திரண்டு மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்தியுள்ளனர்.

இலங்கையின் இனப்பிரச்சினை இனநல்லிணக்க விவகாரத்தினை அரசு வெளிநாட்டு அமைச்சின் கீழ் உள்ளடக்கியுள்ளதன் மூலம் இந்த விவகாரத்தினை வெளிநாட்டு விவகாரமாக அரசு கருதியுள்ளமையானது அரசின் நயவஞ்சகத்தினை வெளிப்படுத்திநிற்கிறது.

புலம்பெயர் தமிழ் மக்கள் செறிவாக வாழும் நாடுகளிலிருந்து வரக்கூடிய அழுத்தங்களை சமாளிப்பதற்கான நோக்கம் ஒன்றிற்காக மட்டுமே இந்த விடயம் வெளிநாட்டு அமைச்சின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஆதற்கு அப்பால் இனப்பிரச்சினை தீர்க்கும் நோக்கில் எந்த செயற்பாடும் இல்லை.

கௌரவ வெளிவிவகார அமைச்சர் ஜெனீவாவிற்கும் ஏனைய ஐநா அமைப்புக்கள் தொடர்பான சர்வதேச விஜயத்தை முடித்துக் கொண்டு நாடு திரும்பிய பின்னர் உண்மையும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குழு உருவாக்கம் பற்றி குறிப்பிட்டுள்ளார். ஆதற்கான உதாரணமாக சனாதிபதியும், அமைச்சரும் தென்னாபிரிக்காவில் முன்னெடுக்கப்பட்ட



Gajan MP.indd 80 03.11.2024 22:23:46

உண்மைக்கும் நல்லிணக்கத்திற்குமான ஆணைக்குவை உதாரணமாகக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் தென்னாபிரிக்க விவகாரமும் எமது பிரச்சினையும் முற்றிலும் நேரெதிரானவை. தென்னாபிரிக்காவில் நிறவெறிக்கு எதிராகப் போராடியவர்கள் அதில் வெற்றிபெற்றிருந்தார்கள். ஆப்பத்தயிட் எனப்படும் வெள்ளை நிறவெறி முற்றாக தோற்கடிக்கப்பட்டது. அங்கு சனநாயகம் நிலைநாட்டப்பட்டது. ஒடுக்கப்பட்டவர்கள் ஆட்சி அதிகாரத்தினைப் பெற்றுக் கொண்டார்கள்.

அவ்வாறு ஆட்சி அதிகாரத்தனை பெற்றுக்கொண்ட பின்னர் அவர்கள் அவ்வாறான தொரு விடயத்திற்குச் சென்றார்கள். ஆனால் இலங்கையில் நிலைமை முற்றிலும் தலைகீழாகவே உள்ளது. இங்கு ஒடுக்குமுறையாளர்கள் வெற்றிபெற்றுள்ளார்கள். ஒடுக்கப்படும் தமிழ் மக்கள் தாம் தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்தினால் மட்டுமல்ல அதனுடன் தொடர்புடைய காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீட்டு அலுவலகம் உள்ளிட்ட பல கட்டமைப்புக்களால் நீதி மறுக்கப்படும் நிலையே தொடர்கின்றது.

ஆண்மையில் காணாமல் போனோர் அலுவலகத்தின் தலைவர் சரணடைந்தவர்கள் தொடர்பாக கூறிய கருத்துக்கள் பாரிய உண்மைகளை மூடிமறைக்கும் விதமாக அமைந்திருந்து. குறிப்பாக இலங்கை அரசின் உள்நோக்கங்களை அம்பலப்படுத்துவதாக அமைந்திருந்து. உண்மையும் நல்லிணக்கமும் என்ற பெயரிலான ஆணைக்குழு பேச்சானது முழுக்க முழுக்க சர்வதேச சமூகத்தின் நெருக்கடிகள சமாளிப்பதற்கான ஏமாற்று உபாயம் மட்டுமேயாகும்.

சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவர்கள் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக பேசுவதற்கு வருமாறு அண்மையில் தமிழ் கட்சிகளை நோக்கி அழைத்துள்ளார். அவரது அழைப்பினை நாம் கருத்தில் கொள்ள வேண்டுமாயின் சனாதிபதி உண்மையானவராக இருத்தல் வேண்டும். சிங்கள மக்களிடம் சென்று 75வருடகால இனப்பிரச்சினையால் நாம் எமக்குள் எதிரிகளை உருவாக்கியுள்ளோம் என்பதனையும், இனப்பிரச்சினையை தீர்க்காவிட்டால் நாட்டை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்பதுடன் நாடு மேலும் பாதாளத்தை நோக்கியே செல்லும் என்பதனையும் கூற வேண்டும்.

இனப்பிரச்சினை தீர்க்கப்படல் வேண்டுமாயின் ஒற்றையாட்சியை கைவிட வேண்டும் என்பதனையும் இலங்கையை பல் தேசங்கள் கொண்ட நாடாக அங்கீகரிக்கும் சமஸ்டி அரசியல் கட்டமைப்பை நாம் உருவாக்க வேண்டும் என்பதனையும் சிங்கள மக்களுக்கு அவர் வெளிப்படையாகக் கூற வேண்டும். சமஸ்டி பிரிவினை அல்ல என்பதனையும் அது பிரிவினையை தடுக்கவே வழிவகுக்கும் என்ற உண்மையையும் அவர் கூற வேண்டும்.

பிரிவினை பற்றிய அச்சம் சிங்கள மக்களுக்கு இருக்குமாயின் அரசியல் அமைப்பு ரீதியாக அதனை உறுதிப்படுத்திக் கொள்ள முடியும்.

ஒற்றையாட்சி கைவிடப்படும் என்பதுடன் சமஸ்டி அடிப்படையில் தீர்வுக்கான பேச்சுக்கள் இடம்பெறும் என்ற உத்தரவாதம் வழங்கப்படாத நிலையில் இடம்பெறும் பேச்சுக்கள் வெறுமனே ரணில் விக்கரமசிங்க அவர்கள் தனது இருப்பை தக்கவைத்துக் கொள்வதற்காகவும், சர்வதேச நெருக்கடியில் இருந்து கடந்து செல்வதற்காகவும், காலத்தை இழுத்தடித்து நெருக்கடிகளிலிருந்து கடந்து செல்வதற்கான வாய்ப்பினை ரணில் அரசுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதாகவே அமையும்.



Gajan MP.indd 81 03.11.2024 22:23:46

இச்சந்தற்பத்தில் வடக்கு கிழக்கை சேர்ந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் சி.வி.விக்னேஸ்வரன் ஆகியோருக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க விரும்புகின்றேன். தற்போதைய சூழலானது தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு தொடர்பில் பேரம் பேசுவதற்கான அரசியல் சந்தர்ப்பம் மீண்டும் கிட்டியுள்ளது. இதனை சரியாகப் பயன்படுத்த வேண்டும். சனாதிபதி அவர்கள் வெளிப்படையாக சிங்கள மக்களுக்கு முன் ஒற்றையாட்சியை கைவிடவும், சமஸ்டி அடிப்படையில் தீர்வு காணப்போவதாகவும் அறிவித்தாலேயே அன்றி பேச்சுக்களுக்குச் சென்று அவரை பிணை எடுக்கும் செயற்பாடுகளில் ஈடுபட வேண்டாமென மிகவும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.

அவ்வாறான உத்தரவாதங்கள் இல்லாது பேச்சுக்குச் செல்வதன் மூலம் தமிழ் மக்களுக்கான வாய்ப்புக்கள் பாழடிக்கப்படுமாயின் பாரதூரமான விளைவுகளை மக்களிடமிருந்து சந்திக்க நேரிடும்.

நன்றி



Gajan MP.indd 82 03.11.2024 22:23:46

# இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தான சில அடிப்படை உத்தரவாதங்கள் வழங்கப்படுமிடத்து மட்டுமே எமது அமைப்பு இந்த பேச்சுகளில் கலந்து கொள்ளும்.

05.12.2022 அன்று நீதி அமைச்சு மீதான பட்ஜெட் விவாதத்தில் அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

கனம் அவைத்தலைவர் அவர்களே.

ஜனாதிபதி.

–தனது பின்கதவு நியமனத்தை அங்கீகரிக்கப்பட்டதாகவும் சட்டபூர்வமானதாகவும் காட்டிக்கொள்வதற்கே அனைத்து தரப்பினரும் தம்மோடு இணைந்து பணியாற்றுவதாக காட்டிக்கொள்ள வேண்டிய தேவை இந்த அரசுக்கு உள்ளது. அதற்காகவே தமிழ்க் கட்சிகளை ரணில் பேச்சுக்கு அழைக்கிறார்.

–தமிழ் மக்களின் தீர்வுகுறித்து எதுவித தீர்க்கமான நிலைப்பாடுமின்றி, ஒரு காலம் கடத்தும் செயல்பாடாகவும் தனக்கான அங்கீகாரத்தை பெறும் செயலாகவுமே ரணில் இந்த பேச்சுவார்த்தை அழைப்பை விடுத்திருக்கிறார்

– தமிழரின் இனப்பிரச்சினை குறித்து எதுவித தீர்க்கமான நிலைப்பாடோ நேர்மையான அணுகுமுறையோ இல்லாது, இப்பேச்சுகளில் பங்கெடுத்து எம்மக்களுக்கு துரோகம் செய்து, ரணிலிற்கு அங்கீகாரம் கொடுப்பதற்கான தேவை எம் அமைப்புக்கு கிடையாது. எம் மக்களின் ஜனநாயக ஆணையை நாம் ஒரு போதும் விலைபேச மாட்டோம்.

–தமிழ் தேசிய மக்கள் முன்னணியை பொறுத்தவரை எமது மக்களுக்கு நாம் விசுவாசமாக இருக்க விரும்புகிறோம். நாம் வெறும் ஒப்புக்கு சப்பாணி அரசியல் செய்வதற்காக இங்கு இயங்கவில்லை.

–இனப்பிரச்சினைக்கான தீர்வு குறித்தான சில அடிப்படை உத்தரவாதங்கள்

வழங்கப்படுமிடத்து மட்டுமே எமது அமைப்பு இந்த பேச்சுகளில் கலந்து கொள்ளும்.
– அப்படியல்லாத நிலையில் மீண்டும் மீண்டும் ஏமாறி, காலத்தை கடத்தி ரணிலுக்கு அங்கீகாரம் பெற்றுக்கொடுக்க நாம் தயார் இல்லை.

– இந்த பேச்சுகளில் இந்த அரசு நேர்மையுடன் ஈடுபடுவதாக இருப்பின், அது துணிந்து உண்மைகளை பேசுவதில் இருந்து ஆரம்பிக்கட்டும்.

– தமிழர்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு ஒற்றையாட்சி அரசமைப்புக்குள் ஒரு போதும் சாத்தியம் இல்லை என்பதை வெளிப்படையாக சிங்கள மக்களுக்கும் கூறட்டும் . சமஷ்டி குறித்து பேசுவது பிரிவினை ஆகாது என்பதை சிங்கள மக்களுக்கு கூறட்டும்.

–ஒற்றையாட்சி தான் பிரிவினையை தடுக்கும், சமஷ்டி நாட்டை பிரிக்கும் என இனியும் பொய் பேசி ஏமாற்றாதீர்கள்.

நீங்கள் கடந்த 75 வருடங்களாக ஒற்றையாட்சி அரசியலமைப்பை இறுக்க கட்டியணைத்துக் கொண்டிருந்தீர்கள். ஆனால் அந்த நேரத்தில் தான், நாடு பிரியவேண்டும் எனும் கோரிக்கை பலமாக எழுந்து அதற்காக போராட்டமும் நடந்தது.

நாட்டின் ஒரு பாகத்தில் தனியான ஒரு அரசே இயங்கியது.
நாடு பிரிவதை தடுப்பது சமஷ்டியோ ஒற்றையாட்சியோ அல்ல.

குடிமக்களை எவ்வாறு கௌரவத்துடனும் சமத்துவத்துடனும் நீங்கள் நடத்துகிறீர்கள் என்பதே அதனை தீர்மானிக்கிறது.



Gajan MP.indd 84 03.11.2024 22:23:46

# அரசின் அதிகாரத்தை தமக்கே உரியதாக மட்டும் பாவித்துக் கொண்டு, உரிமையும் உரித்தும் உடைய ஏனைய இன மக்களை முழுமையாக உரிமையற்றவர்களாக்கியிருக்கிறது.

**25.5.2023 அன்று பொதுமக்களின் காணிகளை சட்டவிரோதமாக அபகரித்து தமிழர் நிலத்தில் கட்டப்பட்ட தையிட்டி பௌத்த விகாரை தொடர்பில் தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

யாழ்ப்பாணம் தையிட்டியில் கடந்த 23 மற்றும் 24 ஆம் திகதிகளில் நடந்த சம்பவங்கள் குறித்து இந்த சபையின் கவனத்துக்கு கொண்டுவர விரும்புகிறேன்.

இது குறித்து பல தடவைகள் இந்த அவையில் யாழ்.மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களால் பிரஸ்தாபிக்கப்பட்டிருப்பினும், எமது அமைப்பின் நிலைப்பாட்டை இங்கு நான் பதிவு செய்து கொள்ள விரும்புகிறேன்.

குறிப்பாக எமது கட்சி செயலாளரும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினருமான திரு. செல்வராஜா கஜேந்திரன் அவர்கள், சிறிலங்கா பொலிசாரால் காடைத்தனமாகவும் சட்டத்துக்கு புறம்பாகவும் தாக்கப்பட்டமை குறித்தும், அந்த பகுதியில் நடப்பவை பற்றிய உண்மை நிலவரம் குறித்தும் நான் இங்கு பதிவுசெய்ய விரும்புகிறேன்.

யாழ் மாவட்டம் தையிட்டி பகுதியில் சட்டவிரோதமான வகையில், பௌத்த விகாரை ஒன்று அமைக்கப்பட்டிருப்பது குறித்து நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

இதை ஏன் சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்டது என கூறுகின்றேனென்றால், இது ஏறத்தாழ 120 பரப்பு அதாவது 7 தொடக்கம் எட்டு ஏக்கர் பரப்பளவுடைய 15 குடும்பங்களின் சட்டபூர்வமான உறுதிகள் கொண்ட ஒரு காணியில் முழுக்க முழுக்க சட்டவிரோதமான முறையில் அமைக்கப்பட்ட விகாரை ஆகும்.



Gajan MP.indd 85 03.11.2024 22:23:46

ஆக்கிரமிக்கப்பட்ட பாதுகாப்பு வலயத்தினுள் சிறிலங்கா இராணுவத்தால் இவ்விகாரை கட்டப்படுவது குறித்து முதன் முதலில் கேள்விப்பட்ட உடனேயே, தற்போதைய பாதுகாப்பு பிரதானியாக இருக்கின்ற சவேந்திர சில்வாவினால் இந்த விகாரைக்கான அடிக்கல் நாட்டப்பட்டதாக செய்தி வெளிவந்த உடனேயே (2021) நானும் திரு. செல்வராஜா கஜேந்திரனும் இவ்விடயம் குறித்து யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் கவனத்திற்கு கொண்டு வந்திருந்தோம். அப்போதைய ஒருங்கிணைப்பு குழுவின் தலைவராக ஆளும் கட்சியுடன் இருந்த திரு அங்கஜன் ராமநாதன் இந்த விடயத்தை நாம் அங்கு முற்படுத்துவதனை தடுக்க முனைந்தாரெனினும், இறுதியில் அப்படியாக தனியார் காணிகளில் சட்டவிரோத விகாரை அமைக்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறாமல் இருக்க உரிய நடவடிக்கைகள் எடுப்பதாகவும் இச்சட்டவிரோத நடவடிக்கைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதி கூறி இருந்தார்.

ஆனாலும்.

இந்த உறுதிமொழிகளுக்கு மத்தியிலும் இந்த சட்டவிரோத விகாரை கட்டி முடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த பின்னணியிலேயே அப்பிரதேசத்தைச் சேர்ந்த மக்களும், இந்த சட்டவிரோத விகாரையினால் பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்களும் எமது அமைப்பின் அங்கத்தவர்களும் இந்த சட்டவிரோத விகாரைக்கு எதிராக 23 ஆம் திகதி போராட்டத்தை ஆரம்பித்து இருந்தார்கள்.

அந்த சந்தர்ப்பத்திலேயே பாராளுமன்ற உறுப்பினர் திரு செல்வராஜா கஜேந்திரன் அவர்கள் காடைத்தனமான முறையில் தாக்கப்பட்டிருக்கிறார். இது குறித்த செய்திகள் படங்கள் மற்றும் காணொலிகள் சமூகவலைத்தளங்களிலும் ஊடகங்களிலும் வெளிவந்திருக்கின்றன.

அதேநேரம், திரு கஜேந்திரன் அவர்களை கைது செய்வது பாராளுமன்ற சிறப்புரிமையை மீறும் செயல் என பொலிசாருக்கு யாரோ அறிவுறுத்தல் வழங்கியிருந் தார்களோ தெரியவில்லை, ஆனால் அவரை விடுத்து அங்கு போராட்டத்தில் ஈடுபட்டிருந்த எமது அமைப்பை சேர்ந்த சட்டத்தரணி சுகாஸ் உட்பட 9 பேரை, பொலிசார் கைது செய்திருந்தனர்.

அவரகள் நேற்று வரைக்கும் தடுத்து வைக்கப்பட்டிருந்து பின்பு நீதிமன்றினால் விடுவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

அத்தோடு, இந்த கைதின் போது செயற்பட்ட விதம் குறித்து பலாலி பொலிஸ் பொறுப்பதிகாரி மீது விசாரணை செய்யுமாறு யாழ் பொலிஸ் தலைமையகத்தை நீதிமன்று பணித்திருக்கின்றது.

எனக்கு கிடைத்த உறுதிப்படுத்தப்பட்ட தகவல்களின் பிரகாரம், இந்த அராஜக நடவடிக்கையை மேற்கொண்ட பலாலி பொலிஸ் பொறுப்பதிகாரி பல்வேறு மோசடிக் குற்றசாட்டுகளுக்கு உள்ளானவர் என்பதோடு ஒரு கொலை வழக்கும் அவர் மேல் பதியப்பட்டு இருக்கிறது.



Gajan MP.indd 86 03.11.2024 22:23:46

பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ செல்வராஜா கஜேந்திரன் உட்பட எமது அமைப்பை சேர்ந்து 9 பேர் சட்டவிரோதமான முறையில் தாக்கப்பட்டு கைது செய்யப்பட்டதன் பின்னணி இது தான்.

இங்கு முக்கியமாக கவனிக்க வேண்டிய விடயம் என்னவெனில் இங்கு பொலிசார் நடந்து கொண்ட முறைமை தான்.

உண்மையில் பொலிசார் எமது (மக்களின்) நலன்களை பேணுவதற்காகவே பொலிசார் பணிபுரிவதாக சொல்லப்படுகிறது, ஆனால் இங்கு நடந்தது அதற்கு நேர் எதிரானது,

இங்கு பொது அமைதிக்கு பங்கம் விளைவிக்க கூடிய நடவடிக்கைகள் நடப்பதாக கூறியே நீதிமன்றில் இருந்து குற்றவியல் சட்டக்கோவை 106 ஆம் இலக்க சட்டத்தின் பிரகாரம் எமக்கு எதிரான தடை உத்தரவை பெற்றுக் கொண்டு வந்திருந்தார்கள்.

இங்கு அமைதிக்கு பங்கம் விளைவிக்க கூடிய வகையில் நடந்தது உண்மையில் என்ன?

உண்மையில், தனியார் காணியில், அந்த மக்களின் சட்ட பூர்வ காணி உரித்தை முற்று முழுதாக தூக்கியெறிந்து சட்டவிரோதமாக அமைக்கப்பட்ட விகாரையை பாதுகாப்பதற்காக, ஒரு சட்ட விரோத நடவடிக்கையை பாதுகாப்பதற்காக, உண்மையான களநிலவரத்தை நீதிமன்றுக்கு மறைத்து, இந்த தடை உத்தரவை, பெற்று வந்திருக்கிறார்கள்.

ஒரு சட்டவிரோத நடவடிக்கையை பொலிசார் பாதுகாத்துக் கொண்டும் அந்த சட்டவிரோத நடவடிக்கையை எதிர்த்த இந்த அவையின் கௌரவ உறுப்பினர் ஒருவரையும் மக்களையும் தாக்கி கைது செய்திருக்கிறார்கள்.

இதில் முரண் நகை என்னவென்றால், எமக்கு இதுவரை காலமும் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கான விசாரணை என வரும்போது இத்தகையவர்கள் மீது தான், தமிழர்கள் நம்பிக்கை வைக்க வேண்டும் என இந்த அவையின் ஆளும் தரப்பும் ஜனாதிபதியும் கூறிக்கொண்டு வருகிறார்கள்.

உண்மையில் இப்படியான மிக கேவலமான விடயங்கள் தான் எமது மண்ணில் நடந்தேறிக் கொண்டிருக்கிறது.

எனக்கு முன்னர் இங்கு உரையாற்றிய உறுப்பினர் தென்னக்கோன் அவர்கள், இந்நாட்டில் நிகழ்ந்து கொண்டிருக்கும் பொருளாதார நெருக்கடிக்கு மூல காரணம் இன்னல்களுக்கிடையே ஏற்பட்ட முரண்பாடுகளும் அதன் விளைவாக வந்த பல்வேறுபட்ட ஆயுத கிளர்ச்சிகளும் போராட்டங்களும் என கூறியிருந்தார்.

ஆனால் அதற்கான அடிப்படை காரணம் என்ன என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்,

உண்மையில் இந்த நாட்டில் எண்ணிக்கையில் பெரும்பான்மையாக இருக்கிற ஒரு சமூகமானது, அரசின் அதிகாரத்தை தமக்கே உரியதாக மட்டும் பாவித்துக் கொண்டு, இந்த நாட்டில் அதேயளவு உரிமையும் உரித்தும் உடைய ஏனைய இன மக்களை முழுமையாக உரிமையற்றவர்களாக்கியிருக்கிறது.

நீங்கள் அப்படியான ஒரு பாதையை தேர்ந்தெடுத்து பயணிக்கின்ற போது, இந்த மண்ணுக்கு உரித்தான ஏனைய சமூகத்தினர்கள் அதை வெறுமனே கைகட்டி பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் என எப்படி எதிர்பார்க்க முடியும்?

அப்படி உங்கள் நடவடிக்கைகளால் சொந்த நாட்டிலேயே உரிமையற்றவர்களா ஆக்கப்பட்டவர்கள், அதற்கு எதிரான தமது எதிர்வினையை காட்டும் போது, அந்த எதிர்வினைகள் தான் இப்போது நாம் எதிர்கொள்ளும் இந்த நாட்டின் பொருளாதார பிரச்சினைக்கு காரணம் என சொல்லுகிறீர்கள்.

நீங்கள் இங்கே இப்படி பேசிக்கொண்டிருக்கின்ற போது, இந்த கொள்கைகளால் இப்படியான பொருளாதார நெருக்கடிக்கு பின்னரும், உங்களது சொந்த அரசாங்கம் அதே இனவாத கொள்கைகளினால், தனது இராணுவத்தைபயன்படுத்தி சட்டவிரோத நடவடிக்கைகள் மூலம் தமிழர்களின் பூர்வீக நிலத்தில் தமிழர்களை உரிமையற்றவர்களாக மாற்றும் நடவடிக்கைகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுக் கொண்டு வருகிறது.

ஆனால் நீங்கள் இங்கே இருந்து கொண்டு, கடந்த 75 வருட தவறை மீளவும் விடப்போகிறீர்களா என கேள்வி எழுப்பிக் கொண்டு இருக்கிறீர்கள்?

ஆனால் உண்மையில் நீங்கள் அதே தவறை , நாட்டை இந்தளவு நெருக்கடிக்குள் கொண்டு வந்து நிறுத்திய அதே தவறை நீங்கள் மறுபடியும் மறுபடியும் இழைக்கிறீர்கள் இழைக்கப் போகிறீர்கள்.

ஏனெனில் நீங்கள் வரலாற்றுச்சான்றாதாரம் பாடம் எதையும் கற்றுக் கொள்ள தயாராகவும் இல்லை.

நீங்கள் வரலாற்றில் இருந்து தவறுகளை திருத்திக் கொள்ளாதமையால், இந்த நாடு தனது சொந்த காலில் எழுந்து நிற்கமுடியாது.

இனிவரும் அடுத்த 75 வருட காலத்துக்கும் உலக நாடுகளிடம் கையேந்திக் கொண்டே இருக்க வேண்டியிருக்கும்.

உங்களுக்கு வாக்களித்த மக்களின் நலன் குறித்து கிஞ்சித்தும் கவலையின்றி இந்த நாட்டின் ஒவ்வொரு சொத்தையும். வெளியாருக்கு விற்பீர்கள், அதில் கொமிசன் மூலம் உங்கள் குடும்பத்தை மட்டும் கவனிப்பீர்கள். இந்தளவு அழிவுக்கு பின்னரும் அந்த பாதையை தான் நீங்க, தேர்ந்தெடுத்து இருக்கிறீர்கள்.

ஆகவே, கனம் அவைத்தலைவர் அவர்களே,

பொலிசாரால் இழைக்கப்பட்ட மிக மோசமான இந்த சட்டவிரோத காரியத்தை , நீதிமன்றிக்கு

பொய்யை கூறி, நீதவானுக்கு பல வெளிப்படையாக சான்றாதாரம் உடைய உண்மைகளை மறைத்து இந்தத்தடை உத்தரவை பெற்றிருக்கும் இந்த விடயத்தை சபாநாயகரின் கவனத்திற்கு கொண்டு வந்து இது குறித்து முழுமையான ஒரு விசாரணையை கோருமாறு கேட்டுக் கொள்கிறேன்.



Gajan MP.indd 88 03.11.2024 22:23:46

# தமிழர் தாய்நிலத்தின் இனப்பரம்பலை செயற்கையான முறையில் மாற்றி அமைத்து தமிழரின் தாயக கோட்பாட்டையே சிதைக்கிறது அரசு.

22.06.23 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

– போர் ஆரம்பித்த காலத்தில் 80 களின் ஆரம்பத்தில் இராணுவத்தை கொண்டு மக்களை கலைத்துவிட்டு, இப்போது ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த நிலையில், எஞ்சியிருக்கும் சிதிலங்களில் இருந்து தமது வாழ்வை கட்டியெழுப்பும் நோக்குடன் தமது நிலங்களுக்கு வந்த மக்களுக்கு அந்த நிலத்தை மீளளிக்காது, வேறு பிரதேசங்களை சேர்ந்த மக்களுக்கு, குறிப்பாக சிங்கள மக்களுக்கு அந்த நிலத்தை பகிர்ந்தளிக்கிறது சிறிலங்கா அரசு.

– திட்டமிட்ட வகையில் தமிழர் தாய்நிலத்தின் இனப்பரம்பலை இராணுவ இயந்திரத்தின் துணையோடு செயற்கையான முறையில் மாற்றி தமிழரின் தாயக கோட்பாட்டையே சிதைக்க முயல்கிறது அரசு.

– குருந்தூர் மலை பகுதி ஒரு ஆய்வுக்குரிய புராதன தொல்லியல் நிலமாக அடையாளப்படுத்தப்பட்டிருந்ததே தவிர எந்த ஒரு காலத்திலும் பௌத்த தொல்லியல் நிலமாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

முல்லைத்தீவு குருந்தூர் மலை பகுதியை அளவீடு செய்யவந்த ஒரு நில அளவையாளரால், ஒரு கடிதம் மூலம் , அது குருந்தூர் விகாரைக்கான பௌத்த தொல்லியல் நிலமாக அறிவிக்கபட்டிருக்கிறது. ஒரு தொல்லியல் நிபுணரால் கூட அல்ல , ஒரு நில அளவையாரால் தான் அந்த பகுதி குருந்தூர் விகாரை எனும் பௌத்த தொல்லியல் நிலையமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.



Gajan MP.indd 89 03.11.2024 22:23:46

உண்மையில் அது ஒரு பௌத்த தொல்லியல் நிலையமாக குருந்தூர் விகாரைக்கான பகுதியாக தகுதிசார் நிபுணர்களால் ஆதராபூர்வமாக அறிவித்திருந்தால் அதை நாம் எதிர்ப்பதில் முகாந்தரமும் இல்லை. அப்படி வரலாற்று ஆதாரபூர்வமாக அறிவியல் ரீதியாக அதை செய்தால் அப்படியான தொல்லியல் இடத்தை பாதுகாக்க வேண்டும் எனவே நாமும் கூறுகிறோம். ஆனால் இங்குநடப்பது தொல்லியல் குறித்து எதுவித சம்பந்தமுல் இல்லாத, வெறுமனே நிலம் அளக்க வந்த ஒரு நில அளவையாளர் ஒரு கடிதம் மூலம் அதை குருந்தூர் விகாரைக்கான பௌத்த தொல்லியல் நிலமாக பிரகடனப்படுத்துகிறார்.

அதற்கும் மேலாக, அது ஒரு தொல்லியல் நிலமாகையால் மேலதிகமாக எதுவித கட்டுமானமும் செய்யகூடாது என சிறிலங்கா நீதிமன்று அறிவித்திருக்க அதே சிறிலங்காவின் இராணுவம் தமது நாட்டின் நீதிமன்ற அறிவிப்பையே பகிரங்கமாக மீறி அங்கு ஒரு பாரிய விகாரையை கட்டி இருக்கிறது. இப்போது அதை சூழ இருக்கிற நிலங்களும் அந்த விகாரைக்கு சொந்தமானது என பௌத்த குருமார் அறிவிக்கிறார்கள். இனி அங்கு பௌத்தர்கள் மட்டுமே குடியமரலாமென எல்லவல மேதானந்த தேரர் அறிவிக்கிறார்.

இது தான் இந்த நாட்டின் யதார்த்தம். ஆரம்பத்தில் இராணுவத்தை பயன்படுத்தி மக்களை விரட்டி நிலத்தை அபகரித்து சிங்கள குடியேற்றங்களை செய்தீர்கள். இப்போது பௌத்த மதத்தையும் தொல்லியல் திணைக்களத்தையும் கருவிகளான பயப்படுத்தி சிங்கள குடியேற்றங்களை உருவாக்கி இனப்பரம்பலை மாற்றி தமிழர்களை நிலமற்றவர்களாக்குகிறீர்கள்.

நன்றி



Gajan MP.indd 90 03.11.2024 22:23:46

# இந்த கோரிக்கைகளுக்கு இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவும் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

10.08.23 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் தமிழ் சாராம்சம்.

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

மலையக மக்கள் இலங்கைக்கு வந்த 200 வது ஆண்டு நினைவை குறிக்கும் நடைப்வனி ஒன்று தலைமன்னாரில் இருந்து மாத்தளை வரை நடைபெறுகிறது.

அதற்கான ஆதரவு பேரணி ஒன்று யாழ்ப்பாணத்தில் நடந்த போது அதில் நானும் எமது அமைப்பினரும் அதில் பங்குபற்றியிருந்தோம்.

அதில் கலந்துகொண்டிருந்த ஒரு பொதுமகன் என்னிடம் “மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த சட்டத்திற்கு உங்கள் பாட்டனார் தலைமையில் உங்கள் கட்சி ஆதரவு வழங்கியமைக்காக இப்போதாவது மன்னிப்பு கேட்பீர்களா என கேட்டிருந்தார். எனக்கு மிக மனவேதனையை தந்த அந்த கேள்விக்கான தெளிவுபடுத்தலை நான் இங்கு செய்ய விரும்புகிறேன்.

இங்கு இந்த ஒத்திவைப்பு பிரேரணையை முன்வைத்திருக்கும் மலையக மலையக மக்களின் பிரதிநிதிகளாக இங்கு அமர்ந்திருக்கும் கௌரவ மனோ கணேசன் மற்றும் கௌரவ இராதாகிருஸ்னண் ஆகியோர் அம்மக்களின் பிரச்சினைகளையும் தேவைப்பாடுகளையும் மிக தெளிவாக முன்வைப்பார்கள் என நம்புகிறேன். மலையக மக்களின் பிரதிநிதிகள் தமது மக்களின் தேவைகளை வழமையாகவே மிகத் தெளிவாக முன்வைப்பவர்கள்.அதில் என்னுடைய தலையீட்டிற்கு தேவையிராது என நம்புகிறேன்.

ஆதலால், இந்த சந்தர்ப்பத்தில் மலையக மக்கள் குறித்தான எமது கட்சியின் நிலைப்பாட்டை தெளிவாக பதிவு செய்ய விரும்புகிறேன்.



Gajan MP.indd 91 03.11.2024 22:23:46

மலையக மக்களின் குடியுரிமையை பறித்த இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை (18.1948) எமது கட்சி எதிர்த்தே வாக்களித்திருந்தது.

அந்த சட்டத்தில் இரண்டு தலைமுறைகள் இலங்கையில் வாழ்ந்ததை சட்ட ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்தினாலேயே இலங்கை பிரஜா உரிமை மலையக மக்களுக்கு வழங்கப்படும் என சொல்லப்பட்டிருந்தது.

அது அக்காலப்பகுதியில் மலையக மக்களால் ஒருபோதும் செய்யப்பட கூடியது அல்ல.

அன்றைய சூழ்நிலையில் மட்டுமல்ல இன்றும் கூட அப்படியான ஆவண சமர்ப்பித்தல் எந்தவொரு நாட்டிலும் இல்லை.

மலையக மக்களை இந்த நாட்டில் உரிமையற்றவர்களாக மாற்றிய சட்டத்தை எனது பாட்டனார் ஜீ ஜீ பொன்னம்பலம் தலைமையிலான அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் முற்றுமுழுதாக எதிர்த்தே வாக்களித்திருந்தது என்பதை மிக தெளிவாக இந்த இடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

அதன் பின்னர் இலங்கையின் சுதந்திரத்துக்கு பின்னர் ஒரு பல்லின பிரதிநிதித்துவ அரசை அமைக்க அழைப்பு விடுத்த பிரதமர் டி.எஸ். சேனநாயக்காவுடன் நடந்த பேச்சுகளில் மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த இலங்கை குடியுரிமை சட்டத்தை மீளப்பெறுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் நிபந்தனை விதித்திருந்தது.

இந்த கோரிக்கைகளுக்கு இந்திய பிரதமர் ஜவகர்லால் நேருவும் தனது ஆதரவை வெளிப்படுத்தியிருந்தார்.

ஆனால் டி.எஸ். சேனநாயக்க அரசு, ஏற்கனவே நிறைவேற்றிய இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை மீள பெறுவதற்கு மறுத்திருந்தது.

அதற்கு பதிலாக இந்திய – பாகிஸ்தான் குடியுரிமை சட்டத்தை கொண்டுவரலாம் எனும் நிலைப்பாட்டை எடுத்தது (சட்ட இலக்கம் 3/1948). அதன் பிரகாரம் 10 வருடங்கள் இலங்கையில் இருப்பதை உறுதிப்படுத்துவதன் மூலம் இலங்கை பிரஜா உரிமையை பெற்றுக்கொள்ள முடியும் எனும் நிலைப்பாட்டை டி. எஸ். சேனநாயக்க அரசு எடுத்திருந்தது.

ஆனால், நவீன உலகில் இருக்கும் நடைமுறையான ஐந்து வருடங்கள் இந்த நாட்டில் இருந்தமைக்கான ஆதாரத்தை சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை குடியுரிமையை பெற்றுக்கொள்ள வழிவகை செய்யுமாறு அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் உட்பட ஏனைய தமிழ் கட்சிகள் தமது தீர்வை முன்வைத்திருந்தன.

ஐந்து வருட கோரிக்கைக்கு இணங்க மறுத்த டி. எஸ். சேனநாயக்க , தமிழ் கட்சிகள் மற்றும் இந்திய பிரதமர் ஜவகர்லால் நேரு ஆகியோரின் தொடர்ச்சியான அழுத்தம் காரணமாக, ஒரு குடும்பம் 7 வருடம் இலங்கையில் இருப்பதை உறுதிப்படுத்தினால் இலங்கை பிரஜா உரிமையை பெறலாம் எனும் நிலைப்பாட்டிற்கு இணங்கிவந்தார். தனிநபருக்கு அந்த கால எல்லை 10 வருடம் எனவும் கூறப்பட்டு இந்திய– பாகிஸ்தான் குடியுரிமை சட்டம் நிறைவேற்றப்பட்டது.



Gajan MP.indd 92 03.11.2024 22:23:46

இந்த இந்திய– பாகிஸ்தான் குடியுரிமை சட்ட மூலம் நிறைவேற்றப்பட்டு இரண்டு வருடங்களுக்குள் பதிவுகளை மேற்கொண்டால் மாத்திரமே அவர்கள் பிரஜா உரிமை பெற முடியும் என அரசு அறிவித்திருந்தது.

இதன் மூலம் ஏறத்தாழ 85% மலையக மக்கள் இலங்கை குடியுரிமையை பெறக்கூடிய வாய்ப்பை பெற்றுகொடுத்தது. 85% மலையக மக்கள் குடியுரிமையை பெறக்கூடிய அந்த சட்டத்திற்கே அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆதரவளித்திருந்தது.

துரதிர்ஷ்டவசமாக, அந்த சந்தர்ப்பத்தில் தமிழ் காங்கிரசில் பிளவு ஏற்பட்டு திரு செல்வநாயகம் அவர்கள் கட்சியில் இருந்து விலகி புதிய கட்சியை ஸ்தாபித்தார். அவர் தலைமையிலான தமிழரசுக்கட்சி, மற்றும் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகியன, மலையக மக்களில் ஏறத்தாழ 85 % ஆனவர்களுக்கு இலங்கை பிரஜா உரிமையை பெற்றுக்கொள்ள கூடிய அந்த சட்ட மூலத்தை எதிர்த்திருந்தார்கள். ஐந்து வருடம் இலங்கையில் இருந்தமைக்கான ஆதாரத்தை சமர்ப்பித்தல் மூலம் பிரஜா உரிமை வழங்கும் கோரிக்கைக்கு டி. எஸ். சேனநாயக்க அரசு இணங்காதபடியால் 3-1949 ஏறத்தாழ 85 % மலையக மக்கள் பிரஜா உரிமை பெறக்கூடியதாக இருந்த இந்திய – பாகிஸ்தான் குடியுரிமை சட்ட மூலத்தின் கீழ் பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்க வேண்டாம் எனும் பிரசார இயக்கத்தையும் ஆரம்பித்து மலையக மக்கள் பிரஜா உரிமையை பெறுவதற்கான விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதை எதிர்த்து இருந்தார்கள்.

டி.எஸ். சேனநாயக்க அரசு இந்த சட்டத்தை மாற்றப்போவதில்லை என ஈற்றில் புரிந்து கொண்ட இவர்கள், கடைசி ஆறு மாத காலப்பகுதிக்குள் தமது கோரிக்கையில் இருந்து பின்வாங்கி மலையக மக்களை பிரஜா உரிமைக்கு விண்ணப்பிக்குமாறு கோரிக்கை விடுத்திருந்தார்கள். அந்த ஆறுமாத காலத்துக்குள்ளேயே தொண்டமான் உட்பட்ட சிலர் பிரஜா உரிமையை பெற்றுக்கொண்டார்கள்.

ஆனால்

இந்த சட்டமூலத்தின் கீழ் விண்ணப்பிக்கவேண்டாம் எனும் கோரிக்கையை ஏற்ற சாமானிய மலையக மக்கள், விண்ணப்பத்திற்கான எதுவித ஆவணங்களின் ஆயத்தமும் இல்லாத நிலையில் திடீரென இறுதி ஆறுமாதங்களுக்குள் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க முடியாத துரதிர்ஷ்ட நிலைக்கு உள்ளானார்கள்.

ஏறத்தாழ 85% வீதமானோர் பிரஜா உரிமை பெற கூடிய சட்டமூலத்தை எமது கட்சி ஆதரித்ததே தவிர எதிர்க்கவில்லை.

உண்மையில் அதை எதிர்த்தது தமிழரசுக்கட்சிதான். அந்த நிலைப்பாட்டில் கூட இறுதி கட்டத்தில் மாற்றத்தை செய்ததால் வெறும் 15% ஆன மலையக மக்களே பிரஜா உரிமை பெறக்கூடியதாக இருந்தது. 85% மலையக மக்கள் பிரஜா உரிமை பெறும் சந்தர்ப்பத்தை வீணாக இழந்திருந்தோம்.

தமிழரசுக்கட்சியின் கோரிக்கையின் பிரகாரம் இந்த சட்டமூலத்தினை பகிஷ்கரித்தமையால் ஏறத்தாழ 85% மலையக மக்கள் நாடற்றவர்கள் ஆனார்கள்.



Gajan MP.indd 93 03.11.2024 22:23:46

இந்த 85% மலையக மக்கள் குறித்து தீர்மானம் எடுக்கப்படும் என எதிர்ப்பார்க்கப்பட்ட சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தம் மூலம் இந்த 85% மலையக மக்களின் ஏறத்தாழ அரைவாசிப்பேர் நாடற்றவர்களாக இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்கள்.

இந்த இடத்தில் மீண்டும் தெளிவாக ஒன்றை பதிவு செய்ய விரும்புகிறேன்.

மலையக மக்களின் பிரஜா உரிமையை பறித்த 18. 1948 இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை எமது தமிழ் காங்கிரஸ் கட்சி முழுமையாக எதிர்த்தே இருந்தது. பறிக்கப்பட்ட பிரஜா உரிமையை மீள வழங்கும் 3. 1949 இந்திய – பாகிஸ்தான் குடியுரிமை சட்டத்தையே எமது அமைப்பு ஆதரித்திருந்தது.

இந்தவிடயத்தில் 100 % வெற்றியை பெறுவது தான் வெற்றி, மாறாக ஆககுறைந்தது 85 வீதமாவது வெற்றியை பெறுவதற்கு சம்மதித்தமை வெற்றியல்ல என குற்றம் சுமத்தப்பட்டால், 85% மக்கள் பிரஜா உரிமையை பெறக்கூடிய சட்ட மூலத்துக்கு ஆதரவளித்தற்காக நிபந்தனையற்ற விதத்தில் இதயபூர்வமாக மலையக மக்களிடம் மன்னிப்பு கேட்க தயாராக இருக்கிறேன்.

ஆககுறைந்தது 85% மலையக மக்கள் பிரஜா உரிமையை பெறக்கூடிய் சட்டமூலத்தை ஆதரித்தது, பிழையென கூறுபவர்கள், அந்த 85% மலையக மக்கள் நாடற்றவர்களாக்கப்பட்டு, அவர்களில் அரைவாசிக்கும் மேற்பட்டோர் இந்தியாவிற்கு நாடுகடத்தப்பட ஏதுவாக அமைந்த சிறிமா – சாஸ்திரி ஒப்பந்தத்தை எதுவித தயக்கமோ கூச்சமோ இன்றி ஆதரித்தார்கள்.

அந்த மக்களின் மூதாதையர் இந்தியாவில் இருந்து வந்ததை தவிர இந்தியா பற்றி எதுவுமே தெரிந்திராத, இலங்கையிலேயே பிறந்து இலங்கையராகவே வாழ்ந்த அந்த அப்பாவி மலையக மக்களினை இந்தியாவிற்கு நாடுகடத்திய சிறிமா – சாஸ்திரி உடன்படிக்கையை ஆதரித்து மலையக மக்களுக்கு மிகப்பாரிய துரோகத்தை இழைத்தவர்களும் மலையக மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும்.

இறுதியாக இந்த இடத்தில் மலையக மக்கள் குறித்து தமிழ் தேசிய மக்கள் முன்னணியினரான எமது நிலைப்பாட்டை தெளிவாக முன்வைக்க விரும்புகிறேன்.

மலையக மக்களின் முன்னேற்றத்துக்காக எந்த தரப்பினாலும் நேர்மையாக முன்வைக்கப்படும் எந்த திட்டத்தையும் முழுமனதோடு எதுவித நிபந்தனையுமின்றி ஆதரிப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணி எப்போதும் தயாராகவே இருக்கும்.

நன்றி



Gajan MP.indd 94 03.11.2024 22:23:46

# ஏன்நாங்கள் எப்போதும் இலக்கு வைக்கப்படுபவர்களாக, பாதிக்கப் படுபவர்களாக இருக்கிறோம்?

08.09.2023 அன்று தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் சாராம்சம்

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

அடுத்த நாடாளுமன்ற அமர்விலே ஈஸ்டர் குண்டு தாக்குதல்தொடர்பான விவாதம் நடைபெற இருக்கிறது. எனினும் துரதிஸ்டவசமாக நானும் எனது சக நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கஜேந்திரனும் அவ்விவாதத்தின் போது இங்கு பிரசன்னமாகி இருக்க முடியாத காரணத்தினால் அது குறித்தானதும் சனல் 4 தொலைக்காட்சி ஆவணம் குறித்தானதுமான எனது கருத்துகளை இன்று இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

அந்த சனல் 4 காணொலியில் சொல்லப்பட்ட விடயங்கள், வடகிழக்கு மக்களுக்கு குறிப்பாக தமிழர்களுக்கு ஒன்றும் வியப்பானதல்ல, அது பழகிப்போன விடயங்கள் தான்.

மக்கள் எழுச்சிக்கு எதிரான நடவடிக்கைகளை (counter insurgency) அரசாங்கம் எவ்வாறு கொண்டு செல்கின்றது என்பது குறித்து போர் நடந்த காலப்பகுதியில் நாம் பலதடவை வெளிப்படுத்தி இருக்கிறோம்.

குறிப்பாக நான் பாராளுமன்ற உறுப்பினராக இருந்த 2001 –2010 வரையான காலப்பகுதியில், சிறிலங்கா அரசும் இராணுவமும் எவ்வாறு இதை மேற்கொண்டார்கள் என்பதை பலதடவைகள் நாம் சுட்டிகாட்டி இருந்தோம், துரதிஸ்டவசமாக நாம் சொல்வதை செவிமடுப்பதற்கு அப்போது யாரும் இருந்திருக்கவில்லை.

இன்று அவைக்கு தலைமை தாங்கும் நீங்கள், ஒரு கல்வியலாளர் எனும் அடிப்படையில் நான் சொல்வதைகருத்தில் எடுப்பீர்கள் என நம்புகிறேன்.



Gajan MP.indd 95 03.11.2024 22:23:46

யுத்தமாக இருக்கட்டும், எதிர் புரட்சி நடவடிக்கைகளாக இருக்கட்டும், அங்கு முதலில் பலியிடப்படுவது "உண்மை" தான். இந்த இடத்தில் நான் ஈஸ்டர் ஞாயிறு குண்டு தாக்குதல் பற்றி கூற விரும்புகிறேன். இந்த ஈஸ்டர் தாக்குதலை அதன் உண்மையான பின்புலத்துடனேயே நாம் பார்க்க வேண்டும்.

வந்திருக்கும் தகவலகளின் அடிப்படையில் இரு விடயங்கள் நடந்திருக்கலாம் எனும் முடிவுக்கு நாங்கள் வரலாம். ஒன்றில், தமக்கு தேர்தல் மூலமாகவோ அல்லது வேறுவிதமாக கிடைக்கும் அனுகூலங்களுக்காக அரசாங்கமே பின்னணியில் இருந்து இந்த ஒரு குரூர தாக்குதலை நடத்தியிருந்திருக்கலாம். அல்லது, இப்படியான ஒரு தாக்குதல் சில தீவிரவாத குழுக்களினால் நடைபெறபோகிறது என்பதை தெளிவாக அறிந்து கொண்ட அப்போதைய அரசாங்கம், தமது இராணுவபுலனாய்வு கட்டமைப்பின் தொடர்புகளின் ஊடாக, ஏதோ ஒரு வழியில், அவர்கள் எவ்வாறு அந்த தாக்குதலை மேற்கொள்ளவேண்டும் என்பதை வழிநடத்தி இருந்தார்கள். இப்படியான ஒரு பாரிய அழிவுடனான குண்டுத்தாக்குதல் நடைபெற இருப்பதை அறிந்து அதை தடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுப்பதை விடுத்து, அந்த தாக்குதல் எப்படி நடைபெறவேண்டும் எனும் நடவடிக்கையை அரசே முன்னெடுத்திருக்கலாம்.

சிறிலங்காவின் பாதுகாப்புத்துறை இப்படியாக அம்பலப்பட்டு நிற்பது இது ஒன்றும் முதல் தடவையல்ல. விக்கிலீக்ஸ் ஆவணங்களில் அமெரிக்க தூதரகத்தின் அதிகாரி ஒருவர், மகிந்தராஜபக்ஸ கூறியதாக அமெரிக்க இராஜாங்க திணைக்கள் செயலருக்கு 2009.05.05 அன்று அனுப்பிய தகவல்களில் – " வன்னி யுத்தகாலங்களில் மக்கள் வாழும் இடங்களிற்கு சிறிலங்கா அரச படையினர் எறிகணைத் தாக்குதல்களை மேற்கொள்ளாது, ஏனெனில் சிறிலங்கா இராணுவத்தை சேர்ந்த ஆழ ஊடுருவும் படையின் தமிழ் பேசும் முகவர்கள், தமிழ் மக்கள் வாழ்ந்துவந்த பாதுகாப்பு வலயத்தினுள், வன்னி மக்களுடன் மக்களாக கலந்து நின்று புலிகளின் காப்பரணை உடைத்து வெளியேறும் வகையில் அவர்களை ஒழுங்குபடுத்தல்களை செய்து வருவதாக; அபோதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தெரிவித்திருந்தார்.

இந்த விடயத்தில் நான் கூறவருவது என்னவெனில்.

இப்படியான வகையில் தமிழ் பேசும் இராணுவ துணைக்குழுக்கள் தமிழர் வாழும் பிரதேசத்துக்குள் ஊடுருவ விடப்பட்டு, அவர்கள் விடுதலைப்புலிகளோடு, வேறுபடுத்தி பிரித்தறிய முடியாதவாறு , இயங்கிவந்திருக்கிறார்கள் என்பதை ராஜபக்ஸ அவர்களே அமெரிக்க தூதரகத்துக்கு கூறியிருக்கிறார் என்பதைத் தான் நான் இங்கு பதிவு செய்ய விரும்புகிறேன்.

06.10.2020 அன்று ரணில் விக்கிரமசிங்க ஈஸ்டர் குண்டு தாக்குதல் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியம் வழங்கும் போது, சிறிலங்கா இராணுவ புலனாய்வுப் பிரிவானது தமிழ்பேசும் மக்களை இணையவிடாது தமிழர்களாகவும் முஸ்லிம்களாகவும் தனித்து பிரித்துவைத்திருப்பதற்கே எப்போதும் முனைப்புக்காட்டியது என தெரிவித்திருந்தார். (இவை 07.10.22 பத்திரிகைகளில் அறிக்கையிடப்பட்டிருந்தன.) தமிழர்களிற்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் பிளவுகளை ஏற்படுத்துவற்கும் அதன் மூலம் முஸ்லிம்களை தனியானதொரு இனத்துவ அடையாளத்தை கோரவைப்பதற்குமாக கடுமையான பிரயத்தனம் செய்திருந்தனர்.



Gajan MP.indd 96 03.11.2024 22:23:46

இதன்மூலம், தமிழ் பேசும் மக்களிற்கான அடையாளத்தை வலியுறுத்தி தன் அரசியல்பயணத்தை தமிழரசு கட்சி மூலம் மேற்கொண்டிருந்த முன்னாள் அமைச்சர் கௌரவ அஸ்ரப் போன்றவர்களை கூட அதில் இருந்து விலகி, தனியானதொரு அடையாளத்தை கோரவைத்தது.

இவையெல்லாம் எதை வெளிப்படுத்துகிறது எனில், யுத்தத்தின் தன்மையும் அதை எவ்வாறு இராணுவம் கொண்டுநடத்தியது என்பதும் மிக மிக இரகசியமானதும் ஆழமானதுமான விடயங்களை கொண்டிருந்தது என்பதையும் அதனால், அதன் உள்ளிருந்து கூட ஒருபோதும் உண்மைகளை கண்டறியமுடியாது என்பதையும் தான் வெளிப்படுத்தி நிற்கிறது.

ஈஸ்டர் தாக்குதல்களை பொறுத்தவரை, ஒரு குறித்த கட்சிமீது இங்கு குற்றம் சுமத்தப்படுகிறது. ஆனால், இந்த இலங்கைத்தீவை இரு துருவங்களாக பிளந்த இனப்பிரச்சினை என வரும்போது, இந்தநாட்டின இனத்துவ பரிமாணங்களின் அடிப்படையில் இந்த நாட்டின் ஆட்சியை எப்போதும் தன்னகத்தே வைத்திருக்கபோவது சிங்கள பெரும்பான்மையினரே என்பதால், இந்த நாட்டின் அரச கட்டமைப்பு இனத்துவ ரீதியில் எப்போதும் பாரபட்சமானதாகவே இருக்கிறது.

ஆதலால், இந்நிலையில் உண்மைகள் வெளிக்கொணரப்பட வேண்டுமெனில் இங்கு ஒரு சர்வதேசவிசாரணையாலேயே அது முடியும். ஈஸ்டர் குண்டுதாக்குதலின் உண்மைகளை கண்டறிவதற்கு ஒரு சர்வதேச விசாரணை வேண்டும் என நீங்கள் கூறுகின்றீர்கள்.

நான் இங்கு இருக்கும் உறுப்பினர்களை பார்த்து கேட்கிறேன்.

– உங்களுக்கு மனச்சாட்சி என ஒன்று இருக்குமானால், – உண்மைகள் வெளிக்கொண்டுவரப்படவேண்டும் என நீங்கள் கருதுவது உண்மையாக இருந்தால்,

– ஏன்நாங்கள் எப்போதும் இலக்கு வைக்கப்படுபவர்களாக, பாதிக்கப்படுபவர்களாக இருக்கிறோம்? தமிழர்கள் ஏன் அப்படி உணர்கிறார்கள்? என நீங்கள் உண்மையிலேயே கண்டறிய விரும்பினால்.

– தமிழர்கள் ஏன் இங்கு துருவமயப்பட்டு நிற்கிறார்கள் என்பதை கண்டறிய விரும்பினால்.

– எது தேவை என நீங்களே யோசித்து கொள்ளுங்கள்.

உண்மைகளை கண்டறியாமல் இவற்றை அடைய முடியுமா என்பதையும் உண்மைகளை கண்டறியாமல், இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஒரு எதிர்காலம் இருக்கின்றது என நீங்கள் எவ்வாறு அவர்களுக்கு நம்பிக்கையைகொடுக்க முடியும் என்பதையும் நீங்களே உங்கள் மனச்சாட்சியிடம் கேட்டுக்கொள்ளுங்கள்.

இந்த உண்மைகளை கண்டறிவதற்கு இங்கு இப்போது இருக்கின்ற ஒரே வழி, சர்வதேச விசாரணையொன்றுதான்.

உண்மைகளை கண்டறிவதில் இருந்து, சர்வதேச விசாரணைகளில் இருந்து ஏன் நீங்கள் ஒளித்து ஓடமுனைகிறீர்கள்? என்பதை புரிந்துகொள்ளவே முடியவில்லை.

இங்கே இருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சரத்போன்சேகா, ஈஸ்டர் தாக்குதலுக்கு ஒரு சரவ்தேசவிசாரனையை தனது நேற்றைய உரையில் கோரியிருந்ததாக செய்திகளில் படித்திருந்தேன்.

அந்த கோரிக்கையை நான் வரவேற்கிறேன்.

ஆனால் அதே சரவ்தேச விசாராணை, இங்கு நடந்த யுத்தம் குறித்தும் நடைபெற வேண்டும்.

இங்கே ஆளும் தரப்பிலும் சரி எம்மோடு இங்கு எதிர்த்தரப்பில் இருப்பவர்களும் சரி, எமது அமைப்பை விடுதலைப்புலிகளுக்கு சார்பான ஒரு அமைப்பாக செயற்படுவதாக குற்றம் சுமத்துவார்கள்.

அதேநேரம் விடுதலைப்புலிகள் யுத்தக்குற்றம் இழைத்ததாகவும் குற்றம் சுமத்துவார்கள்.

அப்படி நீங்கள் கூறுகிறபடி நாங்கள் விடுதலைப்புலிகளுக்கு சார்பானவர்களாக இருப்பின், நீங்கள் கூறுகிறபடி விடுதலைப்புலிகள் யுத்தக்குற்றம் இழைத்தவர்கள் எனில், நாங்களே கேட்கிறோம் , ஒரு சரவதேச விசாரானையை கொண்டுவாருங்கள் என. அதில் விடுதலைப்புலிகள் விசாரிக்கப்படுவார்கள் என்பதற்காக நாம் சர்வதேச விசாராணைக் கோரிக்கையில் இருந்து ஓடி ஒளியவில்லையே. உண்மைகளை கண்டறிவதற்கான ஒரு சர்வதேச விசாரணை குறித்து நாம் பயந்து ஓடவில்லை எனில், ஏன் நீங்கள் மட்டும் அதுகுறித்து பயந்து ஓடுகிறீகள்?

ஒளித்து மறைக்கவேண்டிய உண்மைகள் உங்களிடத்தில் இல்லாதவிடத்து நீங்கள் சர்வதேச விசாரணைகுறித்து ஓடி ஒளிய தேவையேயில்லை.

நான் மீண்டும் மீண்டும் உங்களிடம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், இந்த நாடு சகலவிதத்திலும் அடிமட்டத்தை அடைந்திருக்கிறது.

இதிலிருந்து மீண்டு இனியாவது, ஒரு புதிய தொடக்கத்தை நாம் செய்யவேண்டுமாக இருந்தால், அனைவரும் அறியும் வகையில் உண்மைகள் வெளிக்கொண்டுவரப்பட்டு, அவை மீள நிகழாமை உறுதிப்படுத்தப்படவேண்டும்.

அப்போதுதான் இந்த நாடு எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கெல்லாம் நீடித்து நிலைக்க கூடிய நேர்மையான ஒரு தீர்வு, உருவாகும்

நன்றி

நன்றி



Gajan MP.indd 98 03.11.2024 22:23:46

# இன்று உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள்.

**28.11.2023 பொதுநிர்வாக அமைச்சுக்கள் தொடர்பாக நடைபெற்ற விவாதத்தின்போது தமிழர் தரப்பு குரலாக ஆற்றிய ஆங்கில உரையின் சாராம்சம் தமிழில்.**

**கனம் அவைத்தலைவர் அவர்களே.**

அம்பாறை மாவட்டம் கல்முனை வடக்கு பிரதேச செயலகம் 1989 ஆண்டு புதிய பிரதேச செயலர் பிரிவாக அங்கீகரிக்கப்பட்டது. 1993 இல் அமைச்சரவைப் பத்திரத்தினூடாக அங்கீகரிக்கப்பட்ட தனி பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்கு அங்கீகரிக்கப்பட்டு அது உத்தியோகபூர்வமாக இயங்கி வந்தது. காலப்போக்கில், முழுமையாக பிரதேச செயலாளர் பிரிவாக இயங்குவதற்குரிய கணக்காளர் போன்ற முக்கியமான நியமனங்களை அதற்கென வழங்காமல், அரசியல் காரணங்களுக்காக கல்முனை முஸ்லிம் பிரதேச செயலர் பிரிவுக்கு நியமனம் செய்து கல்முனை வடக்கு பிரதேச செயலம் உப பிரிவாகவே செயற்ளுபட்டு வருகின்றது.

இதனால் மக்களுக்கு தேவையான நிர்வாகத்தை நடத்தமுடியாமலும், அரசியல் காரணங்களால் பழிவாங்கல்களும் நடைபெற்று வருகின்ற நிலையில், கடுமையான பாதிப்புக்களை தமிழ் மக்கள் சந்திக்கிறார்கள். இதன் காரணமாக, ஏற்கனவே வர்த்தமானி மூலம் அங்கீகரிக்கப்பட்டு எடுக்கப்பட்டிருந்த முடிவை அமுல்படுத்துவதற்கு இன்றைக்காவது நடவடிக்கை எடுக்க முன்வரவேண்டும். இந்தவிடயத்தை பல வருடங்களாக கேட்டுக் கொண்டு வருகின்றோம். ஆனாலும் எதுவும் நடைபெறாமல் உள்ளது. இதனை தடுத்து நிறுத்துவதற்கு எந்தவொரு நியாயமான காரணங்களும் கிடையாது.

வடக்கு கிழக்கில் தமிழ் மக்கள் வாழும் ஏனைய பிரதேசங்களில் முஸ்லிம் பிரிவுகள், சிங்களப் பிரிவுகள் உருவாக்கப்பட்டுள்ளன. சட்டவிரோத குடியேற்றங்கள் நடந்திருந்தும் கூட அந்த சட்டவிரோதமான செயலை சட்டபூர்வமாக்குகின்ற வகையில் அந்தப் பிரிவுகளை உருவாக்க முடியுமானால், இயல்பாகவே – பூர்வீகமாக வாழ்ந்துவந்த தமிழ் மக்களுடைய



Gajan MP.indd 99 03.11.2024 22:23:46

பிரதேச செயலகர் பிரிவை அங்கீகரிக்க ஏன் உங்களால் முடியாதுள்ளது? என்ற கேள்வியை பிரதமர் அவர்களுடைய பொதுநிர்வாக அமைச்சுக்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

இன்று உலகத்துக்கு நல்லிணக்கத்தைப் பற்றி பேசுகின்ற நீங்கள் இதையாவது செய்யுங்கள். அரசியல் காரணங்களுக்காக – இந்த அநியாயங்கள் தமிழ் மக்களுக்கு தொடர்வதை அனுமதிக்கவேண்டாம். வேறு தரப்புகளுக்கு கிடைக்கக் கூடிய அங்கீகாரங்களை நாம் ஒருபோதும் தடுப்பவர்களல்ல. எங்களுக்கு தேவைப்படும் விடயத்தையே நாங்கள் கேட்கின்றோம்.

அடுத்த விடயமாக.

கடந்த ஒரு வாரமாக மாவீரர் வார நிகழ்வுகள் நடைபெற்றிருந்தன. மாவீரர் வாரத்தின் இறுதி நாளான நேற்றைய தினம், 27 ஆம் திகதி, வடக்கு கிழக்கு முழுவதிலும் – தமிழ் மக்கள் தங்களது எதிர்காலத்துக்காக உயிர்த்தியாகம் செய்த உறவுகளை நினைவு கூர்ந்து வந்திருந்தனர். தாங்களாகவே தங்களது சொந்த செலவில் முயற்சிகளை மேற்கொண்டிருந்தனர். அப்படிப்பட்ட நிலையில் – சிறிலங்கா அரசின் இனவாத போக்கால் அனைத்து துயிலும் இல்லங்களிலும் நினைவேந்தல்களைத் தடைசெய்வதற்காக – பொலிசார் நீதிமன்றங்களை நாடும் முயற்சிகள் நடைபெற்றிருந்தன. நீதிமன்றங்கள் தடைகளை வழங்கியிருந்தாலும், பின்னர் எங்களது நியாயங்களை பதிவு செய்து அந்தத் தடையை நீக்க நாங்கள் கோரியிருந்த நிலையில், வடக்கு கிழக்கில் உள்ள நீதிமன்றங்கள் தடைசெய்யப்பட்ட அமைப்புக்களை நினைவுகூராமல் நினைவேந்தலை செய்யமுடியும் என்றே தீர்ப்புகளை வழங்கியிருந்தது.

கிழக்குமாகாணத்தில்திருகோணமலைசம்பூரில்மட்டும்தான்தடைவிதிக்கப்பட்டிருந்தது. அதனை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரியிருந்தும் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது. அம்பாறையில் நினைவேந்தலை தடைசெய்யுமாறு கோரியிருந்த பொலிசாரின் கோரிக்கை நிராகரிக்கபட்டிருந்தது. மட்டக்களப்பில் தடைசெய்யப்பட்ட அமைப்பையோ அடையாளங்களையோ நினைவு கூரக்கூடாது என்றே தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. அப்படியிருக்க, கிழக்கு மாகாணத்தில் முழுமையாக தடை வழங்கப்பட்டிராதபோதும் பொலிசார் குறித்த நிகழ்வுகளை குழப்பும் வகையிலேயே செயற்பட்டிருந்தனர். பல இடங்களில் துயிலுமில்ல காணிகளில் இராணுவ முகாம்கள் அமைக்கப்பட்டு படுமோசமாக அவமதிக்கின்ற செயற்பாடுகள் நடைபெற்றிருந்தன. அனைத்து துயிலுமில்லங்களிலும் இருந்த கல்லறைகள் அழிக்கப்பட்டிருக்கின்றன.

தனியாரின் காணிகளில் தனியாருடைய அனுமதி பெற்று நினைவேந்தல் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தபோதும் கூட நினைவேந்தல்கள் செய்வதற்கு பொலிசாரால் அனுமதி மறுக்கப்பட்டது. ஆகவே இவையெல்லாவற்றையும் கருத்தில் கொண்டு, இந்த அரசாங்கம் துயிலுமில்லங்கள் அமைந்திருந்த அரச காணிகள் அனைத்தையும் நினைவேந்தல் செய்வதற்குரிய காணிகளாக அங்கீகரித்து அதற்கென ஒதுக்கவேண்டும் என கேட்டுக்கொள்கின்றேன்.

அதேவேளை நினைவேந்தல்கள் மூலம் மக்கள் தமது மரியாதைகளை செலுத்துவதற்குரிய வகையில் இராணுவமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ள துயிலுமில்ல காணிகள் அனைத்தும் விடுவிக்கப்பட வேண்டும்.



Gajan MP.indd 100 03.11.2024 22:23:46

நினைவேந்தல் உரிமையை அங்கீகரிப்பது நல்லிணக்கத்துக்கு மிக முக்கியமான விடயமாகும். இவ்விடயம் நிலைமாறுகால நீதி பொறிமுறையின் ஐந்தாவது தூணுமாகும். நினைவுகூருகின்ற துயிலுமில்லங்களை அழிப்பதோ, அல்லது நினைவேந்தல்களைத் தடைசெய்வதோ மனித குலத்துக்கு எதிரான போர்க்குற்றமாகும்.

ஆகவே – இது தொடர்வதற்கு அனுமதிக்கமுடியாது. போர் முடிவடைந்து 15 வருடங்கள் ஆகிவிட்டன. ஜே.வி.பி. க்கு அவர்களுடைய ஆயுதப் போராட்டம் முடிவடைந்து ஒருசில வருடங்களுக்குள்ளேயே அவர்களை நினைவு கூர அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால், தங்களுக்காக உயிர்நீத்தவர்களை நினைவுகூர விடாமல் தமிழ் மக்களைத் தடுப்பது என்பது இனவாதத்தைத் தவிர வேறொன்றுமாக இருக்க முடியாது. ஜே.வி.பி. சிங்கள அமைப்பு என்பதற்காக அனுமதிக்கிறீர்கள். ஆனால் தமிழர்கள் என்ற வகையில் எமது நினைவேந்தல்களை திட்டமிட்டுத் தடுக்கிறீர்கள்.

இப்படிப்பட்ட பாரபட்சங்களை நீங்கள் நிறுத்தவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

போர் முடிவடைந்த பின்னர் மிகச்சிறந்த நிலைக்கு செல்லவேண்டிய நாடு, இன்றைக்கு தலைகுப்புற விழுந்திருக்கிறதென்பது, உயிரிழந்த ஆத்மாக்களின் சாபங்களேயாகும். புத்த பெருமான் கூட வெட்கித் தலைகுனியக்கூடிய அளவுக்குத் தான் உங்கள் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன. இனவழிப்பை செய்தவர்களை காவலர்களாக சிங்கள மக்கள் கருதினார்கள். ஆனால் இன்று சிங்கள மக்களுக்கே துரோகம் அளித்தவர்கள் என்ற அடிப்படையில், அவர்கள் அந்த மக்களாலேயே துரத்தியடிக்கப்பட்டனர். இனியாவது விளங்கிக்கொண்டு, உங்களின் மிக மோசமான இனவாதப் பாதையை விட்டு திருத்திக்கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

நன்றி



Gajan MP.indd 101 03.11.2024 22:23:46

# 1949 ஆம் ஆண்டு 3 வது இந்திய பாக்கிஸ்தானிய பிரஜா உரிமை சட்டம்!

**நீதியமைச்சர் விஜயதாஸ ராஸபக்ஸ 2023 டிசெம்பர் 4 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் ஆற்றிய உரைக்கு பதிலளிக்கும் வகையில் ஆற்றிய ஆங்கில உரையின் சாராம்சம்.**

**கனம் சபாநாயகர் அவர்களே!**

கடந்த 2023 டிசெம்பர் 04 ம் திகதி வரவு செலவுத்திட்டத்தின் நீதியமைச்சு தொடர்பான குழுநிலை விவாதத்தில் நான் கலந்துகொண்டு உரையாற்றிய விடயங்கள் தொடர்பாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஸ பாராளுமன்றில் அறிக்கையிட்டிருந்தார். அவரது பேச்சில் குறிப்பாக என்னை ஒரு இனவாதியாகவும், எனது தந்தையை ஒரு முற்போக்குவாதியாகவும், இந்த சபையின் முன்னாள் உறுப்பினராக இருந்த எனது பாட்டனாரை ஒரு இனவாதியாகவும், சித்தரித்திருந்தார்.

அதில் என்னுடைய பாட்டனார் கம்பொலயில் ஆற்றிய உரையில் சிங்கள மக்களை அவமதித்தும், அவர்களைக் கீழ்த்தரமாகவும் கூறியதாகவும் கூறி அவரை ஒரு இனவாதியாக காட்டிக்கொள்வதற்காக தனது கருத்தை முன்வைத்திருந்தார். 40 வருட அவருடைய அரசியல் வரலாற்றிலே ஒரே சம்பவத்தை மட்டுமே குறிப்பிட்டு அவரை ஒரு இனவாதியாக காட்ட நீதியமைச்சர் முயன்றிருக்கிறார். எந்தளவு தூரத்துக்கு அவர் கூறிய கருத்து உண்மையாக இருக்கும் என்பது எனக்கு தெரியவில்லை.

அதேபோன்று சிங்களவர்களுக்கு எதிரான இனவாதத்தை ஒருபக்கம் காட்டிக்கொண்டு, இந்திய இலங்கை பிரஜா உரிமை சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டு 690000 மலையக மக்களுடைய பிரஜாவுரிமையைப் பறிப்பதற்கு அமைச்சுப் பதவியைப்பெற்று ஆதரவளிக்கத் தயங்காதவராகவும் தமிழ் மக்களுக்கு துரோகம் இழைத்தவராகத்தான் ஜி.ஜி.பொன்னம்பலம் இருந்தவர் என்றும் அவருடைய பேரனாக அவரைப்போலவே இனவாதத்தை கக்குகின்ற ஒருவராக நான் இருக்கின்றேன் என்றும் நீதியமைச்சர் தெரிவித்திருந்தார்.

ஒரு நீதியமைச்சராக விஜயதாஸ ராஜபக்ஸ என்னுடைய பாட்டனார் தொடர்பாக குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்ற நிலையில் – சட்டத்தை விளங்கிக் கொண்டும் சரியான தகவல்களோடு முன்வைக்க முடியாமல் தத்தளிக்கிறார்.



Gajan MP.indd 102 03.11.2024 22:23:46

மலையக மக்களுடைய பிரஜா உரிமையை பறித்த சட்டம் இலங்கை பிரஜா உரிமைச் சட்டம் 1948ம் ஆண்டு 18 ஆம் இலக்க சட்டம். அந்த சட்டம் மலையக மக்களுடைய பிரஜா உரிமையை எப்படி பறித்ததென்றால் – இரண்டு சந்ததிகளுக்கு பின்னுக்கு சென்று அவர்கள் நிரந்தரமாக இந்தத் தீவிலே வாழ்ந்ததாக நிரூபிக்க வேண்டியதொரு நிபந்தனையை இட்டதால் – மலையக மக்களுக்கு அதனை உறுதிப்படுத்த முடியாமல் இருந்த காரணத்தினால் அவர்களது பிரஜாவுரிமை பறிக்கப்பட்டது. அந்த இலங்கை பிரஜா உரிமை சட்டம் 1948ஆம் ஆண்டு 18 வது சட்டத்தை தமிழ்க் காங்கிரஸ் முற்றாக எதிர்த்திருந்தது.

ஜி.ஜி.பொன்னம்பலமும் அதை எதிர்த்திருந்தார். இதை நிரூபிப்பதற்காக இலங்கை தமிழரசுக் கட்சியினுடைய வெள்ளி விழா மலரின் கட்டுரை ஒன்றின் ஊடாக நிரூபிக்க விரும்புகின்றேன். அந்தக் கட்டுரையை ஜி.ஜி.பொன்னம்பலத்தின் பரம விரோதியாக அன்று அரசியலில் ஈடுபட்டுக் கொண்டிருந்தவரும் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவராகவும் இந்த சபையில் செயற்பட்டிருந்த திரு.அமிர்தலிங்கம் அவர்களே எழுதியிருந்தார். அந்த ஆவணத்தை இங்கே பதிவு செய்வதோடு, அதனை ஆவணப்படுத்துவதற்கும் இந் சபைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

அதில் தமிழ் காங்கிரஸ் அரசாங்கத்துடன் சேருவதற்கு முன்பே டி.எஸ்.சேனனாயக்க அரசாங்கம் இலங்கை பிரஜா உரிமை சட்டத்தை நிறைவேற்றிவிட்டது. தமிழ்க் காங்கிரஸ் சார்பில் திரு.ஜி.ஜி.பொன்னம்பலம் அவர்களும் திரு.சா.ஜே.வே. செல்வநாயகம் அவர்களும் சட்டத்தை எதிர்த்து வாக்களித்தனர்; என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜி.ஜி பொன்னம்பலத்தின் பரம விரோதியாக செயற்பட்ட ஒருவரே இதை எழுதியுள்ளார். இலங்கை பிரஜாவுரிமையை பறித்த சட்டத்தை ஜி.ஜி.பொன்னம்பலம் எதிர்த்தார் என்பதை அதில் அவர் ஒப்புக்கொண்டுள்ளார். இந்த சம்பவத்தின் நிலை இவ்வாறிருக்க, ஒரு நீதியமைச்சர் என்று சொல்லக்கூடிய விஜயதாச ராஜபக்ஸ இந்த சபையை பிழையாக வழிநடத்துவதற்காக அப்பட்டமான பொய்களையும் கூறியிருக்கிறார்.

அதற்கு பின்னர் டி.எஸ்.சேனநாயக்க சிங்களம் அல்லாத ஏனைய இனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளை இணைத்துக் கொள்ள வேண்டும் என்று விரும்பிய போது, காங்கிரசுடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது அந்த பேச்சுவார்த்தைகளிலே மலையக மக்களுடைய பறிக்கப்பட்ட பிரஜா உரிமை சட்டத்தை வாபஸ் பெறவேண்டும் என்று தமிழ்க் காங்கிரஸ் ஒரு நிபந்தனை விதித்திருந்தது. இதற்கு டி.எஸ்.சேனநாயக்க, தான் அதனை வாபஸ் பெற முடியாது, ஆனால் புதிய சட்டத்தைக் கொண்டு வந்து இந்த மலையக மக்களுக்கு பிரஜா உரிமையை வழங்குவதற்குரிய நடவடிக்கைகயை எடுப்பதாகக் கூறியிருந்தார்.

அந்தப் பேச்சுவார்த்தைகள் ஊடாக இந்திய – பாக்கிஸ்தானிய பிரஜா உரிமைச்சட்டம் 1949 ஆம் ஆண்டு இல 3 சட்டத்தை கொண்டு வருவதற்கு இணங்கினார். அந்த சட்டத்தில் இந்திய பாக்கிஸ்தானிய மக்கள் 10 வருடங்கள் இலங்கையில் தொடர்ந்து வாழ்ந்ததாக நிரூபிக்கும் பட்சத்தில் அவர்களுக்கு பிரஜா உரிமை வழங்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தது. ஆனால் பேச்சுவாத்தைகளூடாக அந்த கால எல்லையையும் குறைத்து தனிநபர் 10வருடங்களாகவும், குடும்பம் 7 வருடங்களாகவும் இருந்ததாக நிரூபிக்கும் பட்சத்திலே இலங்கை பிரஜா உரிமையை பெறுவதற்கான தகுதியைப் பெறுவார்கள் என்ற வகையிலே மாற்றியமைக்கப்பட்டது. ஆயினும் இந்தக் கால எல்லையை 5 வருடங்களாக குறைக்க வேண்டும் எனக் கேட்டும் டி.எஸ்.சேனநாயக்க அந்தக் கோரிக்கையை மறுத்திருந்தார்.



Gajan MP.indd 103 03.11.2024 22:23:46

பேச்சுவார்த்தைகளில் ஆரம்பத்திலிருந்து தலையிட்டு தமிழ் மக்களுக்காக குரல் கொடுத்துக் கொண்டிருந்த ஜவர்கலால் நேரு டி.எஸ்.சேனநாயக்க இதற்கு கீழ் இறங்கி வரப்போவதில்லை ஆகவே, 85 வீதமான மலையக மக்களுடைய பிராஜாவுரமையை இதன்மூலம் பெற்றுக்கொண்டு ஏனையவற்றை பின்னர் பெற்றுக்கொள்ளலாம் என்று கேட்டதற்கிணங்கவே தமிழ்க் காங்கிரஸ் இந்தியா – பாக்கிஸ்தானிய பிரஜாவுரிமை சட்டத்துக்கு ஆதரவை வழங்கினார்கள். மலையக மக்களுக்கு பிரஜாவுரிமையை வழங்கும் சட்டத்துக்குதான் ஆதரவை வழங்கினரே தவிர பிரஜாவுரிமையை பறிப்பதற்கான சட்டத்தை காங்கிரஸ் எதிர்த்தே வாக்களித்திருந்தது.

1949 ஆம் ஆண்டு 3 வது இந்திய பாக்கிஸ்தானிய பிரஜா உரிமை சட்டத்தை தமிழ்க் காங்கிரஸ் ஆதரித்ததன் காரணமாகதான் மலையக் மக்களின் பெருந்தலைவராக இருக்கும் சௌமியமூர்த்தி தொண்டமான் கூட இந்த நாட்டின் பிரஜையாக அங்கீகரிக்கப்பட்டு இந்த சபையிலே மலையக மக்களை பிரதிநிதித்துவப்படுத்தக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டிருந்தது.

உண்மை இவ்வாறிருக்க – இனவாத நோக்கத்திலும் எங்களை ஒரு தவறான தரப்பாகக் காட்டுவதற்கும், பொறுப்பாக நடத்து கொள்ளவேண்டிய அமைச்சர் என்ற வகையிலே, அதுவும் ஒரு நீதியமைச்சர் என்ற வகையிலே மாபெரும் அநீதியொன்றை இந்த அமைச்சர் இந்த சபையிலே எனக்கெதிராகவும் எனது அமைப்புக்கு எதிராகவும், செய்திருக்கிறார். இதற்கும் மேலாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் எனது சக பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரனை ஒரு கொலைகாரனாகவும் ஆயிரக்கணக்கில் மக்களை கொலை செய்தவராகவும் குறிப்பிட்டிருக்கிறார்.

இது ஒரு அப்பட்டமான பொய் மட்டுமல்ல, இந்த மாதிரியான கருத்தை வெளியிட்டதால் விஜயதாஸ ராஜபக்கஸ நீதியமைச்சஎ என்ற பதவிக்கு தகுதியில்லாதவர் என்பதை அவரே நிரூபித்திருக்கின்ற நிலையில் அவர் உடனடியாக இந்த பதவியிலிருந்து நீக்கப்படவேண்டும். அல்லது மதிக்கப்படக்கூடியவராக அவர் இருப்பாரானால் இந்த பொய்களைக் கூறியதற்காக அவர் தனது பதவியை இராஜினாமா செய்ய வேண்டும்.

கௌரவ சபையிலே பாராளுமன்ற உறுப்பினர்கள் சம்பந்தமாக இந்தவகையான பச்சைப் பொய்களைச் சொல்வதை ஒருபோதிலும் ஏற்கமுடியாது. ஆகவே இதற்குரிய நீதியை வழங்குவதற்காக சபாநாயகருக்கு இந்த விடயத்தை சமர்ப்பிக்கின்றேன்.

அடுத்ததாக

நானும் கஜேந்திரனும் திட்டமிட்டு குழப்பங்களை ஏற்படுத்துவதற்காக வடக்கில் இருந்து ஆட்களை வாகனங்களில் ஏற்றி கிழக்குக்கு கொண்டு சென்று நினைவுகூரலை செய்ததாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச சொல்லியிருந்தார்.

நான் ஒரு பாராளுமன்ற உறுப்பினராகவும், ஒரு கட்சியின் தலைவராகவும் இருக்கின்றேன். தாங்கள் நினைவுகூருகின்ற இடத்தில் தங்களுக்கு இராணுவமும் பொலிசாரும் அச்சுறுத்துகின்றார்கள் என்றும் தங்களுக்கு பயமாகவும் இருக்கின்றது என்றும் கிழக்குக்கு வாருங்கள் என்றும் மக்கள் கேட்டநிலையில் நானும் கஜேந்திரனும் மட்டும் சென்றிருந்தோமே தவிர எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஆட்களை வாகனங்களில் கொண்டு சென்றிருக்கவில்லை.



Gajan MP.indd 104 03.11.2024 22:23:46

அதுமட்டுமல்லாமல் –

ஆரம்பத்திலிருந்தே எனது பேச்சில் நான் சுட்டிக்காட்டிய விடயம் என்னவென்றால் – 2015 ஆம் ஆண்டிலும் விஜயதாஸ ராஜபக்ஸவேதான் நீதியமைச்சராக இருந்தபோது, அப்போதைய வெளிவிவகார அமைச்சராக இருந்த மங்கள சமரவீரவுடன் ஜெனிவாவுக்கு சென்று பயங்கரவாதத் தடுப்பு சட்டத்தை அமுல்படுத்த மாட்டோம் என்ற உத்தரவாதத்தை சர்வதேச சமூகத்துக்கு வழங்கியிருந்தீர்கள். அதுமட்டுமல்ல நினைவு கூர்தல் தொடர்பாக அரசாங்கம் எந்ததடையும் விதிக்கப்போவதில்லை என்றும் தொடர்ச்சியாக உறுதியளித்து வந்தீர்கள்.

அரசாங்கம் இவ்வாறு சர்வதேச சமூகத்திடம் உறுதியளித்திருந்தும், பொலிசார் நீதிமன்றங்களை நாடி நினைவேந்தல்களுக்கு எதிராக தடைகளை ஏற்படுத்த கோரி நீதிமன்றங்களுக்கு சென்றிருந்தும், மூதூர் நீதிமன்றத்தை தவிர ஏனைய நீதிமன்றங்கள் நினைவேந்தல்களுக்கு தடை விதிக்காமல், பொலிசாரின் கோரிக்கைகளை நிராகரித்திருந்தது. இந்தநிலையில் கூட, நினைவு கூருவதற்கு சென்ற பத்துப்பேரை கிழக்கு மாகாணத்தில் பயங்கர வாத சட்டத்தின்கீழ் கைது செய்து சிறையிலே அடைத்திருக்கிறார்கள்.

நீதிமன்றமே தடைவிதிக்காத நிலையில் – அரசாங்கமே நினைவு கூர்தலை செய்ய முடியும் என்று சொல்லியிருக்கும் நிலையில் – பயங்கரவாதத் தடைச் சட்டத்தை அமுல்படுத்த மாட்டோம் என்று அரசாங்கம் சர்வதேச சமூகத்துக்கு வழங்கிய வாக்குறுதியை மீறி, பொலிசார் நடந்துள்ள விடயம் தொடர்பாகவே அரசாங்கம் தலையிடவேண்டும் என்று கேட்டிருந்தேன். நீங்கள் சர்வதேச சமூகத்துக்கும் ஐ.நா.மனித உரிமை பேரவைக்கும் வழங்கிய வாக்குறுதியை நடைமுறைப்படுத்துவதற்கே தலையிடுமாறு கேட்டிருந்தேன்.

அமைச்சர் என்ற வகையில், தான் நீதிமன்ற விடயத்திலோ, பொலிசாருடைய விடயத்திலோ, சட்டமா அதிபர் திணைக்கள விடயத்திலோ தலையிடுவது முறையல்ல என்றும் அது ஜனநாயக விரோதம் என்றும் விஜயதாஸ ராஜபக்ஸ தனது உரையில் குறிப்பிட்டு தன்னை ஒரு கடும் நேர்மையான ஆளாக காட்டிக்கொள்ள முற்பட்டிருந்தார்.

ஆனால் – உண்மை என்னவென்றால்

இதே விஜயதாஸ ராஜபக்ஸதான் 2019 ஒக்டோபர் 22 ஆம் திகதி சண்டே ஒப்சேவர் பத்திரிகை பேட்டியொன்றில் இப்படி தனது பெருமையை கூறியிருக்கிறார்.

அது என்னவென்றால்

நான் நீதியமைச்சர் என்ற வகையில் சட்டமா அதிபர் திணைக்களம் நடத்திய விசாரணையில் நேரடியாக தலையிட்டு கோட்டபாய ராஜபக்ஸவை அவன்காட் வழக்கில் கைதுசெய்வதை தடுத்து நிறுத்தினேன் என்று பெருமைபட்டுள்ளார்; அதேபோன்று ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவுக்கு சாட்சி வழங்கிய இடத்தில் இவ்வாறு அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

நான் அவசர அவசரமாக ஜனாதிபதியுடனும் பிரதமருடனும் முன்னாள் பொலிஸ் மா



Gajan MP.indd 105 03.11.2024 22:23:46

அதிபருடனும் தொடர்பு கொண்டு கோட்டாபய ராஜபக்சவை கைதுசெய்தால், அரசாங்கத்தை தவறான முறையிலே சித்தரிக்கும் என்றும் சுட்டிக்காட்டி அந்த கைதை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று கூறி அந்த கைதை நிறுத்தியிருந்தேன்; என்றும் குறிப்பிட்டிருந்தார்.

கௌரவ சபாநாயகர் அவர்களே!

இவரது இந்த நடவடிக்கைகள் தான் தலையீடுகள் ஆகும். அரசாங்கத்தின் கொள்கை முடிவுகளுக்கு மாறாக அமைச்சர் என்ற வகையில் அதனுள் தலையிட்டு ஊழல் வாதிகளை காப்பாற்ற செயற்பட்டமை தான் தலையீடும் முறைகேடுமே தவிர, நான் குறிப்பிட்ட – அரசாங்கமே பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நடைமுறைப்படுத்த மாட்டோம், நினைவுகூரலாம் என்று கூறிய விடயங்கள் – அரசாங்கத்தின் கொள்கையாக சர்வதேச மட்டத்துக்கு உறுதி வழங்கியிருக்கவும், அதை பொலிஸார் மீறுகின்ற போது, அமைச்சர் அதில் தலையிட்டு நிறுத்த வேண்டும் என்ற எனது கோரிக்கை தொடர்பாக அமைச்சர் செயற்படுவது ஒரு தலையீடாக இருக்க முடியாது. மாறாக தவறு நடப்பதை சீர்ப்படுத்தும் செயற்பாடாகவே அது அமையும்.

ஆகவே – இப்படிப்பட்ட ஒரு நிலையில் – இந்த நீதியமைச்சர் மிக மோசமாக இந்த சபையை பிழையாக வழிநடத்த முயற்சித்து எங்கள் தொடர்பாக அப்பட்டமான பொய்களையும் சொல்லியிருப்பதை வன்மையாக கண்டிப்பதோடு விஜயதாஸ ராஜபக்ஸ நீதியமைச்சர் என்ற பதவிக்கு தகுதியற்றவர் என்ற விடயத்தையும் நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

இறுதியாக – இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை அமுல்படுத்த வேண்டாம் என்று நான் கூறியபோது ஒரு சில படங்களை சபைக்கு காட்டியிருந்தார். அந்தப் படங்கள் விடுதலைப்புலிகளுடைய தலைவரின் முகமும் விடுதலைப்புலிகளின் சின்னமும் பொறிக்கப்பட்ட ரீ சேட் போடப்பட்ட படங்களாகும். அப்பொழுது மிகத் தெளிவாக நான் குறிப்பிட்டிருந்தேன். ஒருவேளை மிகப் பாரதூரமான நிலைமையொன்று உருவாகியிருந்தால், பாரிய தாக்குதல் நடைபெற்று நாட்டின் ஒட்டுமொத்த பாதுகாப்பும் சீர்குலையும் நிலைமை உருவாகியிருந்தால் – இந்த பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டிய ஒரு கொடூரமான சட்டமாக இருந்தாலும், அந்த சூழ்நிலையைக் கட்டுப்படுத்த வேறொரு சட்டமும் இல்லாத இடத்தில் அதனைப் பாவிப்பதானால் சிலவேளைகளில் நியாயப்படுத்த கூடியதாக இருக்கும்.

ஆனால் – ரீசேட் அணிவதோ, அல்லது அரசாங்கமே விரும்பி அனுமதித்த நினைவுகூரலை செய்வதையோ தடுப்பதற்கு இந்தச் சட்டத்தைப் பாவிப்பது தவறென்பதைத் தான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த விரும்புகின்றேன். ஆகவே இந்த அமைச்சர் செய்யாது விட்டாலும், இந்த அரசாங்கம் தலையிட்டு அந்தத் தவறை சரிப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

விஜயதாச ராஜபக்ஸ பதிலளிக்கையில்.

நாங்கள் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்தமாட்டோம் என்று கூறிய விடயத்தை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் அதற்கு பதிலாக இன்னொரு சட்டம் கொண்டு வருதற்கு எடுத்த முயற்சிகளுக்கு எதிர்ப்புக்கள் ஏற்பட்டதால் அதனை நிறைவேற்ற முடியாத நிலையிலேயே இந்தச் சட்டம் தொடர்ந்தும் இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அந்த விடயத்தைதான் நாட்டினுடைய சட்டம் என்னும் கோணத்தில் தனது பேச்சில் குறிப்பிட்டிருந்தேன். என்று தெரிவித்திருந்தார்.



Gajan MP.indd 106 03.11.2024 22:23:46

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் பதிலளிக்கையில்.

நான் எனது பேச்சிலேயே குறிப்பிட்டிருக்கிறேன். பாரிய தாக்குதல் ஒன்று நடைபெற்றிருந்தால் நீங்கள் இந்த சட்டத்தை மீள நடைமுறைப்படுத்துவது பற்றி யோசிக்க முடியும் என்று தெரிவித்திருந்தேன். நான் கதைக்கும் விடயம் என்னவெனில் – அரசாங்கமும், நீதிமன்றமும் அனுமதி கொடுத்த நிகழ்வில் கலந்துகொள்வதைத் தடுப்பதற்கு பொலிசார் அந்த சட்டத்தை பயன்படுத்துவதை தான் நான் கடுமையாகக் கண்டித்து நீங்கள் அதனை அனுமதிக்கக்கூடாது என்று கேட்டிருந்தேன்.

அதேபோன்று யாழ்ப்பாணத்தில்தான் நீங்கள் படங்களில் காட்டிய ரீசேட் சம்பவங்கள் நடந்திருந்தது. கிழக்கில் அப்படி நடந்திருக்கவில்லை. கிழக்கில் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக ஒரு நியாயத்தையும் உங்களால் சுட்டிக்காட்ட முடியாது. யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவம் தொடர்பாகவும், அந்த சம்பவத்தை விசாரிக்க வேண்டாம் என்று நான் கோரவில்லை. ஆனால், அதையும் கூட பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரிக்க வேண்டிய விடயம் அல்ல.

சாதாரண சட்டத்தின் கீழ் தான் விசாரிக்கப்பட வேண்டும் என்பதை மட்டுமே நான் சொல்லியிருந்தேன். ஏனெனில் அது பயங்கரவாத செயற்பாடு அல்ல. இப்படிப்பட்ட செயற்பாடுகளையும் நீங்கள் பயங்கரவாதமாக கருதி செயற்படுவது தான் மிகக் கொடூரமான விடயமாக சர்வதேச சமூகமே கருதி அதை செய்யாதீர்கள் என்று சொல்லிவருகிறது என்று தெரிவித்தார்.

நன்றி



Gajan MP.indd 107 03.11.2024 22:23:46

# இன்று மாகாண சபைகள் இயங்கு நிலையில் இல்லை.

**05.12.23 நாடாளுமன்றத்தில் நடைபெற்ற கல்வி, உயர்கல்வி அமைச்சுக்கள் மீதான விவாவதத்தின் போது ஆங்கிலத்தில் ஆற்றிய உரையின் சாராம்சம்.**

**கௌரவ சபாநாயகர் அவர்களே!**

ஆங்கில மொழி பொதுவாக எல்வோருக்கும் பரீட்சயமாக கொண்டு வருதற்குரிய பத்து வருட திட்டமொன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறீர்கள். அதற்காக கல்வியமைச்சர் மற்றும் ஏனைய துணை அமைச்சர்களையும் பாராட்ட விரும்புகிறேன்.

ஆங்கிலத்தில் கற்று ஆங்கிலத்தின் சாதகங்களை அறிந்தவன் என்ற வகையிலே அனைத்து மக்களுக்கும் அந்த வாய்ப்புக்கள் கிடைக்க வேண்டும் என்பது எனது விருப்பமாக இருந்தாலும், ஒரு நிபந்தனையை முன்வைக்க விரும்புகின்றேன். பல தசாப்தங்களாக தமிழிலும் சிங்களத்திலும் கற்றுவந்தவர்களுக்கு திடீரென ஆங்கில மொழி பரீட்சயமாக வருவதற்கு சிறிது காலமெடுக்கும். காலங்காலமாக தாய்மொழியில் கற்று வந்தவர்களுக்கு சட்டக்கல்லூரியில் திடீரென – ஆங்கில மொழியில் பரீட்சை எடுக்க வேண்டும் என விதித்த நிபந்தனை முற்றிலும் தவறானதாகும். சட்டம் என்பது நுணுக்கங்களை கொண்ட விடயம். இந்த நிலையில் பரீட்சயம் இல்லாத புதுமொழியில் திடீரென திணிக்க முயல்வது பாதிப்புக்களை ஏற்படுத்தும். மாறாக சிறிய வயதிலிருந்தே ஆங்கிலத்தில் கற்கக் கூடிய வாய்ப்பை ஏற்படுத்தி நடைமுறைப்படுத்துவதே பொருத்தமாக இருக்கும். இதனை நீங்கள் கட்டாயம் கவனத்தில் எடுக்க வேண்டும்.

அடுத்ததாக வடக்கு கிழக்கில் பாடசாலைகள் தொடர்பாக சொல்லும்போது, இன்று மாகாண சபைகள் இயங்குநிலையில் இல்லை. இந்த நிலையில் யாழ்ப்பாணத்தில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு கபினெட் அமைச்சர் வடக்கு கிழக்கு மாகாண கல்விசார்ந்த விடயங்களை தன்னுடைய சொந்த சொத்தாக பயன்படுத்தி மிக மோசமான தலையீடுகளை செய்து கொண்டிருக்கிறார். விசேடமாக இடமாற்றங்களில் இந்த தலையீடுகள் அதிகரித்துள்ளது.



Gajan MP.indd 108 03.11.2024 22:23:46

2007/20 என்ற இடமாற்றச் சுற்றுநிருபம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு மட்டுமல்ல முழு நாட்டுக்குமே பொதுவாக இருக்கக்கூடிய நிலையில், மாகாண சபைகளிலும் இவை நடைமுறையிலுள்ளன. ஆனால் வடக்கு கிழக்கில் மிக மோசமாக இருக்கின்றது. இதன் காரணமாக கல்வி நிர்வாகமே குழம்பிப்போகின்ற அளவுக்கு மிக மோசமான தலையீடுகளாக இருக்கின்றது.

ஆதலால் கல்வியமைச்சர் தலையிட்டு அரசியல் தலையீடுகள் அனைத்தும் நிறுத்தப்பட்டு முறைப்படி இடமாற்றச் சபையின் முடிவுகளை நடைமுறைப்படுத்துகின்ற ஒரு நிலைமையை உறுதிப்படுத்த வேண்டும். இந்த இடமாற்றச் சபைகளில் தொழிற்சங்கப் பிரதிநிதிகள், மற்றும் திணைக்களத் தலைவர்களும் பங்குகொள்கின்றனர். இங்கே சகல விடயங்களும் ஆராயப்பட்டே முடிவுகள் எடுக்கப்படும். ஆகவே அரசியல் தலையீடுகள் நடைபெறாதிருப்பதை நீங்கள் உறுதிப்படுத்தவேண்டும்.

அடுத்து பாடசாலை அதிபர்கள் ஆசிரியர்கள் கடந்த வருடங்களில் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டு, கடுமையான அழுத்தங்களை வழங்கிய நிலையில் அவர்களுக்கு வாக்குறுதிகள் வழங்கப்பட்டு – சுபோதினி ஆணைக்குழுவின் பரிந்துரைகளை மூன்று படிமுறைகளாக நடைமுறைப்படுத்துவதாக உறுதியளிக்கப்பட்டது. கடந்த காலங்களில் அதன் மூன்றில் ஒரு பகுதி மட்டுமே அவர்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந்த வரவு செலவுத் திட்டத்தில் அவர்களுக்கு வழங்கவேண்டிய இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்டங்கள் தொடர்பாக எந்த விதமான விடயமும் இங்கு பதிவு செய்யப்படவில்லை. இவை முக்கியமாக கவனத்தில் எடுக்கப்படவேண்டிய விடயம்.

இன்றைக்கு அபிவிருத்தி அவசியமாக தேவைப்படும் நிலையில் கல்வியின் பங்களிப்பு என்பது மிகமுக்கியமானது. அது குழம்புவது என்பது ஆபத்தானதாகும். எனவே ஏற்கனவே நீங்கள் இணங்கிய விடயம் என்ற வகையில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்கு அவர்களைத் தள்ளாமல் நீங்களாகவே நடைமுறைப்படுத்துவதற்கு முன்வரவேண்டும் என்றும் இதனை தாமதமின்றி நிறைவேற்றவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

பல்கலைக்கழகங்கள் சம்பந்தமாக சொல்லும்போது – இன்று மூளைசாலிகளின் வெளியேற்றம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. கல்விமான்கள், தொழில்நுட்பவியல் சம்பந்தப்பட்டவர்கள் அனைவரும் நாட்டில் இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியைக் காரணமாக வெளிநாடுகளுக்கு செல்லுகின்ற ஒரு நிலைமை காணப்படுகின்றது. விசேடமாக – கல்வி சார் விடயத்தில் மட்டுமல்ல சுகாதாரத் துறையிலும் கணிசமானவர்களின் வெளியேற்றம் நடைபெறுகின்றன. இவை பெரும் பிரச்சினையான விடயமாகும். இதற்கு பிரதான காரணமாக வரிவிதிப்பு முறைகளில் மாற்றங்களை ஏற்படுத்தி கணிசமாக குறைக்க முடியும். இதன் மூலம் அவர்களை தொடர்ந்தும் இந்த நாட்டுக்குள் வைத்திருக்கக் கூடிய நிலைமையை உருவாக்கமுடியும். அதில் மாற்றங்களைக் கொண்டுவராதவிடத்து மூளைசாலிகள் வெளியேற்றம் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தப்போகின்றது.

விரிவுரையாளர்கள் தங்கள் உயர் பட்டத் தகைமைகளை வெளிநாடுகளில் சென்று பெறுவதற்கு பிணை ஒப்பந்தம் செய்து செல்லவேண்டும். இந்த பிணை ஒப்பந்தம் இறுக்கமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதற்கு காரணம் பிணை ஒப்பந்தம் செய்வதற்கு வெளிநாட்டில் புலமைப்பரிசில் வழங்கப்படும் தொகையும் சேர்க்கப்படுகின்றது. ரூபாயின் பலவீனமான இன்றைய நிலையில் குறித்த பிணைத்தொகையானது

அதிகளவானதாக இருக்கும் நிலையில் உயர் கல்வி கற்க விரும்பும் விரிவுரையாளர்கள் குறித்த தொகை பிணைக்குரிய உத்தரவாதத்தை வழங்கும் நபர்களை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக – தமது விரிவுரையாளர்கள் பதவிகளை துறந்து வெளிநாடுகளுக்கு செல்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனாலும் கல்வியலாளர்களை கணிசமாக இழக்கப் போகின்றோம். வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் புலமைப்பரிசில் வழங்கும் தொகைகளுக்கும் சேர்த்து இத்தகைய பிணை ஒப்பந்தங்களில் பணம் அறவீடு சேர்த்துக்கொள்ளும் முறைமையும் நிறுத்தப்படவேண்டும் என்ற யோசனையை முன்வைக்க விரும்புகின்றேன்.

வெளிநாடு செல்கின்றவர்களும் நாட்டுக்கு திரும்பிவரக்கூடிய நிலையே உருவாக்க வேண்டுமே தவிர, வெளிநாடு செல்பவர்கள் நிரந்தரமாக திரும்பி வர முடியாத சூழலை ஏற்படுத்துவது முட்டாள் தனமாகும்.

யாழ் பல்கலைக்கழக கலைப் பிரிவில் குறைந்த அளவான ஆளணியே காணப்படுகின்றது. இதனால் விரிவுரையாளர்களுக்கு அதிக வேலைப்பழு காணப்படுகின்றது. அந்த பழு காரணமாக அவர்கள் ஆய்வு மற்றும் வெளிக்கள ஆய்வுகள் எதுவும் செய்யமுடியாத நிலையில் – வெறுமனே அந்தப் பாடத்துறையில் உள்ள பாடத்திட்டங்களை நிவர்த்தி செய்வதற்குரிய வேலைகளையே செய்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட கல்விக் கலாசாரம் மிகமோசமாகவே அமையும். அந்தவகையில் இவ்விடயம் தொடர்பாக கலைப்பீட மாணவர் ஒன்றியம் எழுதிய கடிதம் ஒன்றையும் சபைக்கு சமர்ப்பிக்கின்றேன். இதனை கருத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கும் கொழும்புக்கு வெளியே இருக்கக்கூடிய பல்கலைக்கழகங்களுக்கும் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவை பாரபட்சங்களாக உள்ளன. விசேடமாக வடக்கு கிழக்கில் இருக்கும் பல்கலைக்கழகங்களில் பாரபட்சங்கள் மிக அதிகம். இந்த பாரபட்சம் மனித வலு ஒதுக்கீடுகளில் மிகப்பெரும் அளவில் காணப்படுகின்றது.

உதாரணமாக 2022 ற்கான சமூகவியல் புள்ளிவிபரம் எடுத்துக் காட்டுகின்றேன்.

அரசுக்கு புதிய ஆளணி ஒதுக்கீடுகளை செய்ய முடியாது விட்டாலும் இருக்கின்ற ஆளணியை சமமாகப் பிரிக்கின்ற முறைமையை செய்யாமல், வெறுமனே ஒருசில பல்கலைக்கழகங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து ஏனைய பல்கலைக்கழகங்களுக்கு கடும் சுமையை கொடுக்கின்ற வகையில் நடந்துகொள்வது ஓரம் கட்டும் செயற்பாடாகவே அமையும்.

என்னைப் பொறுத்த வரையில், பல்கலைக்கழகங்கள் சுதந்திரமான சிந்தனை கொள்ளக்கூடிய இடமாக இருக்க வேண்டும். நாட்டினுடைய ஒட்டுமொத்த எதிர்காலத்துக்கும் வளர்ச்சிக்கும் திறந்த சிந்தனை மையமாக அது இல்லாது விட்டால் அதன் நோக்கமே தோற்கடிக்கப்படுவதாகவே அமையும்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும் கிழக்கு பல்கலைக்கழகமும் கடுமையாக இராணுவ மயப்படுத்தப்படுகின்றது. இராணுவ தலையீடுகள் மிகவும் அதிகம். அவர்கள் தான் கணிசமான தீர்மானங்களை மேற்கொண்டு தடைகளை உருவாக்குகிறார்கள்.



Gajan MP.indd 110 03.11.2024 22:23:46

பல்கலைக்கழகங்களில் அரசியல் சிந்தனைகளையும் திறந்த உரையாடலுக்கும் விடவேண்டும். ஆனால் யாழ்ப்பாணத்திலும் ஏனைய தமிழ் பல்கலைக்கழகங்களிலும் கடும் கட்டுப்பாடுகளை விதிக்கிறார்கள். அங்கே அரசியலே இருக்கக்கூடாது என்கின்ற அளவுக்குதான் இந்த கட்டுப்பாடுகள் இருக்கிறது. இது என்னைப்பொறுதத்தவரையில் பொருத்தமற்ற ஒரு விடயம். இந்தவகையில் இந்த மாற்றங்களையும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்த விரும்புகின்றேன்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சுரேன் ராகவன் கருத்து தெரிவித்தபோது – யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலே சட்டத்தரணி சுவஸ்திகா பேசவிடாமல் தடுக்கப்பட்டார். உண்மையிலே அங்கே இருப்பவர்கள் தான் தடுக்கிறார்களே தவிர வெளித்தரப்பாலோ இராணுவத்தாலோ சொல்லப்பட்ட விடயம் அல்ல என்னும் விடயத்தை சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்குப் பதிலளித்திருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தனிப்பட்ட முறையில் அந்த அம்மையார் தனது கருத்தைப் பதிவு செய்வதற்கு நான் எதிர்ப்பவன் அல்ல. அவரை உரையாற்ற அனுமதித்திருக்க வேண்டும் என்பதுதான் எனது தனிப்பட்ட கருத்து. ஆனால் – அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததற்கான நியாயம் என்னவென்றால், அந்த அம்மையாருடைய அரசியல் கருத்துக்களுக்கு நேர் மாறான கருத்தை அந்த பல்கலைக்கழகத்திலோ அல்லது இந்த நாட்டில் இருக்கக் கூடிய எந்தவொரு பல்கலைக்கழகங்களிலோ போய் சொல்ல முடியாது. அந்த அம்மையார் சொல்லும் கருத்தை எல்லா இடத்திலும் போய் சொல்ல முடியும். அதற்கு ஒரு தடையும் விதிக்காமல் வரவேற்பார்கள். ஆனால் இந்தக் கருத்துக்கு நேர்மாறான கருத்துதான் மிகப் பெரும் பெரும்பான்மையினரின் கருத்தாக வடக்கு கிழக்கில் இருக்கத் தக்கதாக, சுவஸ்திகா போன்றோரின் கருத்தை திணிப்பதற்கு பார்க்கிறார்களே தவிர, அதற்கு நேர் மாறான கருத்தை எந்தவொரு இடத்திலும் – குறிப்பாக வடக்கு கிழக்கிலும் சரி அதற்கு வெளியிலும் இருக்கும் பல்கலைக்கழகங்களிலும் சரி கதைக்க முடியாது.

ஆகவே, இதனைத்தான் நான் சொல்லுகின்றேன். இந்த சிந்தனை சுதந்திரத்தை எந்தவொரு தடையும் விதிக்காமல் முழுமையாக அமுல்படுத்த வேண்டும். அதை செய்யாமல் வெறுமனே ஒரே ஒரு கருத்தை மட்டும் திணிக்க முயல்வதை ஏற்கமுடியாது. என்று பதிலளித்திருந்தார்.

நன்றி



Gajan MP.indd 111 03.11.2024 22:23:46


CONFERENCE "WE WANT OUR LAND"
13ம் திருத்தம்
தீர்வுமல்ல :
ஆரம்பப்
புள்ளியுமல்ல
WE WANT ICC
ICC JUSTICE